தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும் 07


-கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன-
தலைவர், நவ சம சமாஜ கட்சி

திருமலை மாவட்ட ஆக்கிரமிப்பு: 03
நன்கு திட்டமிடப்பட்ட வரலாற்று நகர்வு





# மீள்பார்வை

මීල්පාර්වෙ
Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038
Meelparvai Fortnightly
www.meelparvai.net
සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 370 • 02 ஜூன் 2017 வெள்ளிக்கிழமை • ரமழான் 1438 • விலை 40.00





# பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இயல்பு நிலை தாமதம்

## சுத்திகரிப்புப் பணிக்கு அவசர வேண்டுகோள்



வெள்ளத்தினாலும் மண்சரிவினாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தமது வீடுகளுக்குத் திரும்புவதில் பல சிரமங்களை எதிர்நோக்குவதாக களத்திலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ரமழான் நோன்பை அனுஷ்டிப்பதற்குக் கூட உரிய வசதிகள் இன்றி இவர்கள் அல்லலுறுவதாகவும் தெரிய வருகிறது.

கடந்த வாரம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும் மண்சரிவினாலும் களுத்தறை மாவட்டத்தின் வியாங்கல்ல, (பக்.14)


அண்மைக் காலமாக தாக்கப்பட்டு வரும் முஸ்லிம் பள்ளிகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் தொடர்பிலான முறைப்பாட்டு அறிக்கை ஒன்று ஜெனீவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமை காரியாலயத்தில் 34 ஆவது மனித உரிமை மாநாட்டில் உரையாற்றிய ஷாமா முஈஸ், மனித உரிமை செயற்பாட்டாளர் முயிஸ் வஹாப்தீன் ஆகியோரினால் ஐ. நா. சிறுபான்மை விவகாரங்களுக்கான விசேட அறிக்கையாளர் ரீட்டா ஐசாக் சார்பாக, திருமதி மார்கரிட்டா லீமா அவர்களிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டது.

## புதிய கட்சிகளுக்கான நேர்முகப் பரீட்சை நிறைவு: புதிய வாக்காளர் பதிவு ஆரம்பம்



ஒவ்வொரு வருடமும் ஜூன் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வரும் வாக்காளர் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளை இம் முறையும் தேர்தல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

நேற்று கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடத்தின் சிலோன் மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வில் தேர்தல்கள் திணைக்களத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய பிரதம அதிதியாக கலந்து கொண்டார். (பக்.14)

## மு.த.ச. திருத்தத்தில் ஒருமைப்பாடு ரமழானுக்குப் பின்னர் வரைபு



முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம் தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதற்காக நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினரின் செயற்பாடுகளில் மேலுமொரு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. மு.த.ச. திருத்தப்படத் தேவையில்லை என்ற கருத்தைக் கொண்டோருடனான கலந்துரையாடல் ஒன்று கடந்த வாரம் நடத்தப்பட்டபோது கலந்துரையாடப்பட்ட விடயங்களின் படி தற்போது அனைத்துத் தரப்பினரும் மு.த. சட்டத்தில் திருத்தங்கள் தேவை என்ற உடன்பாட்டுக்கு வந்துள்ள னர் என நீதியரசர் ஸலீம் மர்சூப் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக மஸ்லஹா அடிப்படையில் முஸ்லிம் தனியார் சட்டத்தை அணுகுவதில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவுடன் உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. தற்பொழுது அனைத்துத் தரப்பினதும் உடன்பாட்டுடனான முஸ்லிம் தனியார் சட்ட திருத்தப் பிரேரணை ஒன்றை ரமழானுக்குப் பின்னர் முன்வைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம் விரோத செயற்பாடுகளுக்கு மத்தியிலும் பாகிஸ்தான் மனிதாபிமான உதவி



இலங்கையில் கடந்த சில வாரங்களாக முடுக்கிவிடப்பட்டிருந்த முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை பாகிஸ்தான் முன்வந்து வழங்கியுள்ளது.

பாகிஸ்தானிலிருந்து கப்பலில் அனுப்பி வைக்கப்பட்ட உலர் உணவுகள், மருந்து வகைகள், வெள்ளம் வடி யச் செய்வதற்கான பம்புகள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் வெளிநாட்டு அமைச்சர் ரவி கருணா நாயக்கவிடம் பாகிஸ்தானின் பிரதி உயர் ஸ்தானிகர் ஸப்ராஸ் அஹமட் கான் கையளித்தார். நிவாரணப் பொருட்களைத் தாங்கிய ஸுல்பிகார் கப்பலில் தேடலுக்கும் மீட்புக்கும் உதவும் வகையிலான ஹெலி கொப்டர்கள், மீட்புப் படகுகள் என்பவற்றோடு மருத்துவக் குழுவினரும் உள்ளடங்கி யிருந்தனர்.

இதேவேளை அனர்த்த நிவாரணத் துக்கான நிதியீட்டலுக்காக (பக்.14)

## மதுபானத்துக்கும் புகைப்பதற்கும் இலங்கையரின் நாளொன்றுக்கான செலவு 63 கோடி

சிகரட் புகைப்பதற்காக 33 கோடி ரூபாவையும் மது அருந்துவதற்காகச் சுமார் 30 கோடி ரூபாவையும் இலங்கையர்கள் நாளொன்றுக்குச் செலவிடுகின்றனர் என்ற அதிர்ச்சித் தகவல் அறிக்கைகள் மூலம் வெளியாகியுள்ளது.

மொத்தமான 63 கோடி செலவு செய்து புகைத்தலால் நாளொன்றுக்கு 72 பேரும், மதுவினால் 65 பேரும் கொல்லப்படுகின்றனர் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.




பொதுமக்களிடமிருந்து புகைத்தல் மூலமாக மட்டும் பெற்றுக்கொள்ளும் 33 கோடி ரூபாவில் 92 வீதமான பணத்தை வருடாந்தம் பிரிட்டன், அமெரிக்க நாடுகள் சூறையாடிச் செல்கிறன. இதுபற்றி இலங்கைப் புகையிலைக் கம்பனியின் கடந்த வருட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சிகரட் பாவனையால் நோய்களுக்கு உட்பட்டவர்களுக்கு மருத்துவச் செலவாக அரசு வருடமொன்றுக்கு (பக்.14)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிகப் பெரிய இஃப்தார் நிகழ்வு



- டி.எஸ்.ஆர். சாஹுல் ஹமீத்

உலகின் மிகப் பெரிய இப்தார் அல்-ஹரம் மற்றும் மதீனாவில் தினமும் ஏற்பாடாகின்றது. ஏறத்தாள மூன்று இலட்சம் நோன்பாளிகள் அமர வசதி செய்யப்படுகிறது.

இப்தாரில் நுகரப்படும் 1,30,000 லீட்டர் ஸம்ஸம் தண்ணீர், 50,000 லீட்டர் அரபிக் காபி, 300,000 ரொட்டி சுருள்களும், 50,000 லீட்டர் தயிர், 50,000 லீட்டர் ஜூஸ் மற்றும் 40 டொன் பேரீச்சம் பழத்திற்கான ஒரு நாளைய செலவு ஏறத்தாள ஒரு மில்லியன் சவூதி ரியால். இதன் பொறுப்புகளை பல கொடையாளர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள்.

இந்நிகழ்வு 15 நிமிடங்களில் நடந்தேறியவுடன் மஸ்ஜித் (அல் ஹரம்) முழுவதும் சுவடுகள் தெரியாத வண்ணம் சுத்தத்துடன் அதனுடைய பழைய நிலைக்கு மாறிவிடும். சுப்ஹானல்லாஹ்!

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

## பெருந்தேசிய வணிக ஏமாற்றுப் பேர்வழிகள்

- முஜீப் இப்ராஹீம்

தனியார் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்று கடந்த வருட வெள்ள அனர்த்த வேளையிலும் SMS வழியாக காசு திரட்டியது. இதுவரை பங்களிப்புச் செய்த யாருக்கும் அந்தப் பல கோடிகளுக்கு என்ன நடந்தது என்று ஒரு SMS மூலமாவது சொல்லிவிடவில்லை..

மீண்டும் இப்போது இந்த அனர்த்தத்திற்கும் உதவி கோரி SMS அனுப்பிக்கொண்டிருக்கிறது!!!

தனியார் தொலைக்காட்சிகள் மற்றும் வானொலிகளின் அலப்பறைகள் மறுபுறம்...

அந்த சூப்பர் ஸ்டார், இந்த டான்சிங் ஸ்டார் என்று போட்டிகள் நடாத்தி கோடிக் கணக்கில் பணப் பரிசுகள், வீடுகள், வாகனங்கள் என கொடுப்பதற்கு உங்கள் நிறுவனங்களில் தாராளமாக பணமிருக்கிறதல்லவா? அந்தப் பணம் எப்படி வந்தது என்றும் எங்களுக்குத் தெரியும்!

யார் நன்றாகப் பாடினார்? யார் நன்றாக ஆடினார் என்று நாங்கள் SMS அனுப்ப வேண்டும். அந்த SMS இன் செலவு சாதாரண SMS செலவைப் போன்றதல்ல! அது பலமடங்கு ஆகும். ஒரு Reality Show இற்கான SMS ஒன்றின் செலவு சுமார் 10 ரூபாய்க்கு மேல் என்று சொல்கிறார்கள்.

இந்த வருமானத்தின் பங்கு தனியார் தொலைபேசிக் காரனுக்கும் உங்கள் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் பிரிகிறது. நாள்தோறும் இந்த SMS மூலமே கோடி கோடியாக உழைக்கிறீர்கள்.

அதில் சில கோடிகள் பரிசுகளாக உங்கள் STAR களுக்கு போக மீதி அவ்வளவும் உங்களது கல்லாவை நிரப்புகிறது என்பது பாவம் இந்த பாமர ரசிகர்களுக்கு தெரிவதில்லை!




## ரமழான் தொழுகை

- ஹிமாஸ் முஹம்மத்

இரண்டு நாட்களாக பின் வரிசையில்
தொழுத எனக்கு
இன்று நடு வரிசையில் இடம் கிடைத்தது.
இன்னும் முன்னேற வாய்ப்புண்டு என
எண்ணிக் கொண்டு வரும்போது
இரண்டு நாட்களாய் பள்ளியை
அலங்கரித்தவர்கள் பாதையை
அலங்கரித்துக் கொண்டிருந்தனர்.
ரமழான் கரீம்!




சகோதர, சகோதரிகளே!!
இதுபோல் உலகில் எத்தனையோ
குடும்பங்கள் நோன்பு திறக்க கூட
உணவின்றி இருக்கின்றன.

சிந்திப்பீர்கள்!!!
உங்கள் இப்தார் உணவை எளிமையாக்குங்க!
குறைந்தப்பட்சம் வீண் விரயம் செய்யாதீர்கள்.

- தஹானி

நாங்கள் மீதியாக வீசுகின்ற ஒவ்வொரு சாப்பாடும் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கும் ஓர் ஏழையின் உணவுக் கவளம் என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

# மனிதாபிமான உதவிகள்?

- இஸ்பஹான் ஷாப்தீன்



பெருமழை, வெள்ளம், மண்சரிவு, காற்று போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு ஆறுதல் வழங்குவதும், ஆதரவு வழங்குவதும், உதவி செய்வதும் தற்போது நம்முன் இருக்கும் பாரிய பொறுப்பாகும். இப்பொறுப்பை நிறைவேற்றுவது நம் மீதுள்ள கடமையாக உள்ளது.

இதனை பலரும் நன்கு உணர்ந்து செயற்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது. நன்கொடைகளை (ஸதகா) வழங்குவதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். அதே நேரம் ஸகாத்தையும் வழங்கி வைக்கலாம். அந்த வகையில் ஸகாத்தில் இப்னு ஸபீலுக்குரிய பங்கை அநாதரவாக இடம் பெயர்ந்து பாதைக்கு வந்துள்ள மக்களுக்கு வழங்க முடியுமாக இருக்கும்.

உயிர், உடமைகளை இழந்து பாதைக்கு வந்திருப்பது, குறித்த ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரமல்ல. தன் மதச் சகோதரர்களைப் போன்றே சக மதச் சகோதரர்களும் தான். பாதிக்கப்பட்டுள்ள எல்லோருக்கும் ஒரே இழப்புதான். ஒரே வலிதான். ஒரே உணர்வுதான். எல்லோரும் சகோதரர்கள். எல்லோரும் மனிதர்கள்.

பலபோது நிவாரண உதவிகளை வழங்கச் செல்கின்ற சில சகோதரர்கள் தெரிந்தோ தெரியாமலோ இதனை மறந்துவிடுகிறார்கள். மூடிய சமூக மனோநிலையில் வாழ்ந்து பழகியதன் விளைவால் இப்படியான ஒருபோக்கு தவிர்க்க முடியாமல் ஏற்பட்டு விடலாம்.

எனவே, அன்புக்குரிய சகோதரர்களே! அப்படியான நிலைகள் ஏற்படாமல் இருப்பதற்கே இந்த ஞாபகமூட்டல். கடந்த இரு நாட்களில் சிலர் இதனை மறந்து செயற்பட்ட சில சந்தர்ப்பங்களை அவதானிக்க முடியுமாக இருந்தது.

எம்மவர்களை கவனிக்கிறார்கள் இல்லை, எம்மவர்களுக்கு வழங்குகிறார்கள் இல்லை, தற்போது நாட்டில் சிலர் நம்மை நடத்தும் முறை எனச் சில விடயங்களை கருத்திற் கொண்டு சக இன மதத்தவர்களை கவனிக்காது கடந்து சென்று விடக் கூடாது. இஸ்லாம் அப்படி ஒருபோதும் வழிகாட்டியது கிடையாது.

பெற்றோருக்கு உபகாரம் செய்தல் என்பதைக் குறிக்கும் 'பிர்' என்ற சொல்லையே சக மதத்தவர்களுடன் பழகுதல் பற்றிக் குறிப்பிடும் போதும் அல்குர்ஆன் பயன்படுத்தியிருக்கின்றது. எனவே கருத்துச் செறிவுள்ள இச்சொல்லை சக மதத்தவர்களுக்கு உபகாரம் செய்தல் குறித்துப் பேசும் போதும் அல்குர்ஆன் பயன்படுத்தியிருக்கின்றது என்றால் இதனை மிகச் சரியாக உணர்ந்து கொள்ள வேண்டும். செயற்பட வேண்டும்.

எனவே, நிவாரணப் பணிக்காக செல்லும் போது, தான் சந்திக்கும் சக மனிதனையோ சக மதக் கிராமத்தையோ கவனிக்காது கடந்து விடாதீர்கள். அவர்களுக்கு வழங்க வேண்டிய பங்கு இருக்கின்றது. அதனைக் கொடுக்க மறந்து விடாதீர்கள்.

தற்போதைய இனவாத சூழ்நிலையில், நாட்டுக்கு நம்மைப் பற்றி சரியாக உணர வைக்கவும், சகவாழ்வுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள பெறுமானத்தை புரிய வைக்கவும் இறைவன் வழங்கியுள்ள ஒரு நல்ல வாய்ப்பாகும். இதனை மிகச் சரியாக புரிந்து கொண்டால் ஸகாத்தில் முஅல்லபதுல் குலூபுக்குரிய பங்கையும் இச்சந்தர்ப்பத்தில் பயன்படுத்திக் கொள்ள முடியுமாக இருக்கும்.

அரச மற்றும் தொண்டு நிறுவனங்களின் மீது நம்பிக்கையிழந்த வகையில் கதைக்கும் பல சக இன மத சகோதரர்களை களத்தில் காண முடியுமாக உள்ளது. இப்படியானவர்களை, இப்படியான கிராமங்களை தேடித் தேடி கவனித்தோமாக இருந்தால் பாரிய நன்மைகளை கொண்டுவந்து சேர்க்கும். றமழான் மாதம் என்பதால் நிச்சயமாக பன்மடங்கு கூலி கிடைக்கும்.

# இனவாத செயற்பாடுகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் கிழக்கு முதலமைச்சர் விளக்கம்

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றது.

திருகோணமலையில் உள்ள கிழக்கு முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் கெராட் ரான் லேண்ட் தலைமையிலான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழு பங்கேற்றது.

இதன் போது கிழக்கு மாகாண கல்வியமைச்சர் எஸ். தண்டாயுதபானி, கிழக்கு மாகாண சபை பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்ன, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துரைரட்ணம் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யூ.ஏ. எல். அசீஸ் ஆகியோரும் பங்கேற்றனர்.



இதன்போது தற்போது நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் இனவாத செயற்பாடுகள் தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் மிக விரிவாக எடுத்துரைத்தார்.

அண்மைக் காலமாக முஸ்லிம்களின் மதஸ்தலங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள் முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பிலும் இதன்போது கிழக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தற்போது நாட்டில் கட்டியெழுப்பப்பட்டு வரும் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு இவ்வாறான இனவாத செயற்பாடுகள் பாரிய அச்சுறுத்தலாகத் திகழ்வதாகவும் தற்போது நாட்டில் முஸ்லிம்களின் மத சுதந்திரம் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் நாட் டில் முஸ்லிம்கள் மத்தியில் அச்ச உணர்வு தோற்றுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் கூறினார்.

எனவே நாட்டில் தலைதூக்கியுள்ள இனவாத செயற்பாடுகளுக்கு கடும் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை அதிகாரப் பகிர்வு உடனடியாக மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் திவிநெகும போன்ற திட்டங்களால் பறித்தெடுக்கப்பட்ட மாகாண சபைகளின் அதிகாரங்[illegible] கையளிக்கப்பட வேண்டிய தேவை [illegible] அவர் கூறினார்.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கான திட்டங்களில் விதவைகள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம் முழுவதும் ஆற்றல் மேம்பாட்டு மையங்களை நிறுவி அதனூடாக வினைத்திறன் மிக்க அரச சேவையினை முன்னெடுப்பது தொடர்பில் கிழக்கு மாகாண கல்வியமைச்சர் எஸ். தண்டாயுதபானியால் யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி மன்றங்களின் வினைத்திறனை அதிகரிப்பது தொடர்பிலும் உள்ளூராட்சி மன்றங்களின் தொழிற்சாலைகளை உருவாக்குவது தொடர்பில் அரச மற்றும் தனியார் ஒப்பந்தங்களினூடாக இவற்றை 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கான திட்டங்களுக்குள் உள்வாங்க வேண்டும் எனவும் கிழக்கு முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

விவசாயம், மீன்பிடி, கால்நடை, கைத்தொழில் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்புக்களை ஐரோப்பிய ஒன்றியம் வழங்க வேண்டும் என முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்ததுடன், அதற்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராகவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# பிரித்தானிய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளுடன் NFGG சந்திப்பு!



சிறுபான்மை மக்களுக்கெதிராக அதிகரித்து வரும் இனவாத நடவடிக்கைகளையும், பொருளாதார இலக்குகள் மீதான தாக்குதல்களையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அழுத்தங்களை அரசாங்கத்திற்கு கொடுக்கும் நடவடிக்கைகளை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி (NFGG) எடுத்து வருகிறது.

இந்தத் தொடரில், பிரித்தானிய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளுடனான சந்திப்பொன்று 30.05.2017 அன்று மதியம் இடம்பெற்றது. உயர் ஸ்தானிகராலய கொழும்பு காரியாலயத்தில் இடம் பெற்ற நிகழ்வில் நாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பாகவும், சர்வதேச சமூகம் முன்னெடுக்க முடியுமான நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளுடன், நல்லாட்சிக்கான தேசிய [illegible] அப்துர் ரஹ்மான், பொதுச் செயலாளர் நஜா முஹம்மத், பிரதித் தலைவர் சிராஜ் [illegible] தலைமைத்துவ சபை உறுப்பினர் ஜவாஹிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருமலை மாவட்ட ஆக்கிரமிப்பு:

## நன்கு திட்டமிடப்பட்ட வரலாற்று நகர்வு

• ஹிதாயத்துள்ளாஹ் (நளீமி) கிண்ணியா.

எவர் இலங்கையின் திருகோண மலையை ஆள்கின்றாரோ அவர் இந்து சமுத்திரத்தை கட்டி ஆள்கின்றார் என்ற பிரித்தானியரின் கூற்றினை அமெரிக்கா, இந்தியா, சீனா, சிங்கப்பூர் உள்ளிட்ட சக்திகள் இன்றும் உறுதிப்படுத்திக் கொண்டிருப்பது திருகோணமலை மாவட்டத்தின் கேந்திர முக்கியத்துவத் தினை எடுத்துக் காண்பிக்கின்றது.

பல இனங்கள் வாழும் இந்நாட்டினை முழு சிங்கள பௌத்த ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் நோக்கில் சுதந்திரத்தின் பின் மாறி மாறி வந்துகொண்டிருக்கும் எல்லா அரசுகளும் கூட ஒரே கருத்தில் தொடராக செயற்பட்டுக் கொண்டிருப்ப தனை அவதானிக்க முடிகிறது.

சிறுபான்பான்மை இனங்கள் செறிந்து வாழ்கின்ற வடக்கு, கிழக்கு போன்ற ஓரிரு மாகாணங்கள், மாவட்டங்களை யும் கூட பௌத்த மக்களை குடியேற்றி தமது பெரும்பான்மை ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் திட்டம் பெரும் சப்த மில்லாமலும் சிலபோது நம்மவர்களின் துணையுடனும்(அறியாமலுமிருக்கலாம்) மிக அழகாக அரங்கேற்றப்பட்டு வரு கின்றது.

இப்பின்னணியில் திருகோணமலை மாவட்டத்தின் முக்கியத்துவமும் கருத் திற் கொள்ளப்பட்டு, நன்கு திட்டமிட்ட அடிப்படையில் சிங்களமயப்படுத்தல் நகர்த்திச் செல்லப்படுவதை அவதானிக்க முடிகிறது.

1955 ஆம் ஆண்டுகளில் மாவட்ட சனத்தொகையில் 6 வீதத்திலும் குறை வாக இருந்த சிங்கள சமூகம் இன்று 26 வீதம் வரை அதிகரிக்கச் செய்யப்பட் டுள்ளது. 1976 ஆம் ஆண்டு தொகுதி நிர்ணயத்தின் போது சிங்கள மக்களைக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்ட சேருவிலை தொகுதி மூதூர் தொகுதி யின் காணிகளையும் பிரித்தெடுத்து 1600 இற்கு மேற்பட்ட சதுர கிலோ மீட்டர்




பரப்பளவிலும், ஆரம்பத்திலிருந்து காணப்பட்டு வரும் மாவட்டத்தின் அதிக சனத்தொகையை உள்ளடக்கிய மூதூர் தொகுதி வெறும் 600 சதுர கிலோ பரப்பிற்கும் சுருக்கப்பட்டுள்ளது.

திருமலை மாவட்ட அபிவிருத்தி விஷேட செயற்திட்டமொன்று 2030 இல் முழுமை பெறவுள்ளது. கல்வி, சுகாதா ரம், நகராக்கம், புண்ணிய பூமி புனிதஸ் தல பிரகடனம், கடற்றொழில், நிர்வாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங் கள் போன்ற பல முக்கிய விடயங்களை உள்ளடக்கியுள்ள இத்திட்டத்திலும் முஸ் லிம் பிரதேசங்கள் உள்வாங்கப்படாது பல விடயங்கள் நிறைவடையும் நிலை யில் சென்றுகொண்டிருக்கின்றது. மிகப் பெரும்பாலும் மாவட்டத்தில் சிறு பான்மையாகவுள்ள சிங்கள சமூகத்தை மையப்படுத்திய இடங்களிலேயே இவ் வபிவிருத்திகள் நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றன.

மாவட்ட செயலகம் (கச்சேரி ) -4ஆம் கட்டையில், பலமான பல நியாயப்பாடு களைக் கொண்ட கிண்ணியா வைத்திய சாலையை விட்டு விட்டு கந்தளாய் வைத்தியசாலை மத்திய அரசினால் உள் வாங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட் டுள்ளமை, வர்த்தக வலயம் கப்பல் துறையை அண்டி உருவாக்கப்பட்டுள் ளமை போன்ற பல விடயங்கள் இங்கு சுட்டிக் காட்டத்தக்கவை.

தற்போது வெளியிடப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய வட்டார எல்லை நிர்ணய வர்த்தமானி அறிவித்தலிலும் கூட 26% சிங்கள சமூகத் திற்கு 66 பிரதிநிதிகள் கிடைக்கத் தக்க தாகவும் மாவட்டத்தில் 43% பெரும் பான்மையாகவுள்ள முஸ்லிம் சமூகத் திற்கு 55 இலும் குறைவான உறுப்பி னர்களே தெரிவாகும் விதத்திலும் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட, ஆரம்பிக்கப்பட்ட அந்தந்தக் காலப் பகுதிகளிலும் திருகோணமலை மாவட் டத்தில் முஸ்லிம் அரசியல் சமூகத் தலைமைகள் காணப்பட்டு வந்துள்ளன. ஆயினும் அவர்களது முன்னெடுப்புக்கள் இப்பெரும் சவால்களை முறியடிப்பதற் குத் தேவையான பலத்தினை கொண்டி ருக்கவில்லை அல்லது இதன் அபா யத்தை சரியாக உணர்ந்து ஒருமித்துப் போராடவில்லை. அவர்களது தனிப் பட்ட, சிறு சிறு கோரிக்கைகள் கண்டு கொள்ளப்படாமலேயே அத்தனையும் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

இன்று தோப்பூரின் செல்வ நகர் காணி ஆக்கிரமிப்பு, புல்மோட்டை, கரிமலை ஊற்று, கிண்ணியாவின் எல்லைப்புற காணிகள் ஆக்கிரமிப்புக்கள் யாவும் இப்பெரும் திட்டத்தின் சில துளிகளே யாகும்.

நாட்டின் 25 மாவட்டங்களுள் திரு கோணமலை (43%), அம்பாறை (46%) ஆகிய இரு மாவட்டங்கள் மாத்திரமே முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்டவை. நிலைமை இவ்வாறு நீடிக்குமானால் இன்னும் ஓரிரு தசாப் தங்களில் திருகோணமலை மாவட்ட மும் சிங்களப் பெரும்பான்மை மாவட்ட மாக மாற்றப்பட்டு விடும் என்பதில் ஐயமில்லை.

ஒரு சமூகத்தின் இருப்பு, அதன் உரிமைசார் அடிப்படையான விடயங் கள் வெளிப்படையாக நன்கு திட்ட மிட்டு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இத்தருணத்திலாவது தலைமைகள் பேதங்கள் மறந்து ஒன்றுபட்டு சவால் களை முறியடிக்க முன்வரல் வேண்டும். இவ்வபாயங்களை மறந்து சில வீதி களையும், கட்டிடங்களையும் அமைத்து தலைமைகளும் மக்களும் திருப்திப்பட் டுப் பேசிக் கொள்வதும் அப்பாணியில் செயற்படுவதும் சமூக முதிர்ச்சியின்மை யையே எடுத்துக் காட்டும்.

ஆக மாவட்ட அரசியல், சமூகத் தலைமைகளும் மக்களும் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு செயற்படுவதன் மூலம் எமது சந்ததிகள் எதிர்நோக்கவுள்ள பேரபாயங்களை மாத்திரமன்றி தற்பொழுது நாம் சந்தித் துக் கொண்டிருக்கின்ற நெருக்கடிகள், சவால்களை ஓரளவுக்கேனும் குறைக்க முடியும்.

- சகல தரப்பும் முதலில் பிரச்சினை யின் பாரதூரத்தினை சரியாக அறிந்து விழிப்படைதல் வேண்டும்
- மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கு கின்ற பிரதான பிரச்சினைகள் முன் னுரிமைப்படுத்தப்பட்டு, அனைத்து தலைமைகளும் அப்பிரச்சினைகளில் அவற்றுக்குரிய பெறுமானத்தோடு கவனம் செலுத்துதல் வேண்டும்.
- மாவட்ட அரசியல், சிவில் தலை மைகள் உடன் உட்கார்ந்து மாவட் டத்திற்கான நீண்ட காலத் திட்ட மொன்றை வரைந்து அப்பாதையில் செல்தல்.
- அரசியல் தலைவர்கள் தமது கட்சித் தலைமைகளோடு உரிமைசார் அடிப்படையான விடயங்களை மிகத் தெளிவாக விளக்கி, தேவை யாயின் பேரம்பேசி தமது அரசியல் பயணத்தை மேற்கொள்தல்.
- சாத்தியப்படாதபோது மாவட்ட முஸ்லிம்கள் ஒன்றுபட்ட தனித்துவ மான மாற்று அரசியல் பயணத் தைக்கூட யோசிக்கலாம்.
- சிவில் சமூகத் தலைமைகள் ஒன்று பட்டு இவ்வபாயத்திலிருந்து திரு கோணமலை மாவட்ட முஸ்லிம் உரிமைகளை வென்றெடுக்க முன் வரவேண்டும். மாவட்டம் தழுவிய அரசியல் நோக்கமற்ற பரந்த ஷூராக் கட்டமைப்பொன்று உருவாக்கப் பட்டு இதனை சாதிக்க முனையலாம்.
- மக்கள் தமது சுய இலாபங்களுக் கப்பால் நமது சந்ததிகளின் நன்மை கருதி செயற்பட உறுதிபூணல் வேண்டும். தமது வாக்குரிமையை அதனடிப்படையில் பயன்படுத்துதல் வேண்டும்.
- மாகாண மாவட்ட உயர்பதவிகளில் அமர்த்தப்படும் அதிகாரிகள் விடயத் திலும் நாம் கூடுதல் கரிசனை காட்டுதல் வேண்டும். அவ்விடங்க ளுக்குத் தகுதியானவர்களை உரு வாக்கும் பர்ளு கிபாயா வேலைத் திட்டமும் அவசியமானதாகும்.
- மாவட்டத்தில் சகோதர சமூகங்க ளும் கணிசமான அளவில் (தமிழ் மக்கள்- 31%, சிங்கள மக்கள்-26%) வாழ்கின்றனர் என்பதை நாம் புரிந்து சகவாழ்வுடன் நீதி தர்மங்களை மதித்து அவர்களுடனான உறவைப் பலப்படுத்தி எமது முன்மாதிரிகளால் அவர்களது மனங்களை வெல்தல் வேண்டும்.

இவ்விடயங்கள் பற்றிச் சிந்தித்து, மாவட்ட முஸ்லிம் தலைமைகள் ஒன்று பட்டு செயல்படுவதற்கான நன்மையின் வாயில்களை அல்லாஹ் அருள்கள் பூத்துக்குலுங்கும் இந்த ரமழானில் திறந் தருள்வானாக.

---

# முளையிலே கிள்ளி எறியப்பட வேண்டியவை

• கருணாகரன்

''தலைமறைவு வாழ்க்கையில் சிக்கு வேன்'' என்று ஞானசார தேரர் எப் போதாவது எண்ணியிருந்திருப்பாரா? ஆனால், அப்படியான ஒரு விதி ஞான சாரருக்கு நேர்ந்திருக்கிறது. இப்போது ஞானசார தேரரைத் தேடிப் பொலிஸ் வலை விரித்துள்ளது. ஞானசார தேரர் தலைமறைவாகியிருக்கிறார்.

ஞானசார தேரருக்குப் பாதுகாப் பில்லை என்று சொல்கிறது பொதுபல சேனா. யாரிடமிருந்து பாதுகாப்பில்லை என்று அந்த அமைப்புச் சொல்லவில் லை. ஆனால், ஒரு உண்மையைக் கவ னித்தீர்களா? பிறருக்குப் பாதுகாப்பில் லாத நிலையை உருவாக்க முனைந்த வருக்கு இன்று பாதுகாப்பில்லாமலாகி யுள்ளது.

தமிழ், முஸ்லிம் சமூகங்களை அச்சு றுத்தும் வகையில் சவால் விட்டவர், அந்தச் சமூகங்களை மிரட்டியவர், இப் போது தனக்குப் பாதுகாப்பில்லை என்கி றார். அதிலும் அமைச்சர் மனோ கணே சனின் அலுவலகத்துக்குள் நுழைந்து, அமைச்சரின் சேர்ட் கொலரைப் பிடிக் காத குறையாக நின்று கர்ஜித்த சிங்கம் இப்போது தலையை வெளியே காட்ட முடியாமல் கலங்கி ஒடியுள்ளது.

இதையெல்லாம் பார்க்கும்போது நிச்சயமாக உங்களுக்குச் சிரிப்பு வரலாம். ஏனென்றால், திடீரென ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக வந்த ஒருவர் சட்டத்தின் முன்னும் நீதியின் முன்னும் சமூகத்தின் முன்னும் முகம் காட்ட முடியாமல் ஓடி ஒளிந்திருக்கிறார் என் றால், இது கோமாளித்தனமில்லாமல் வேறு எப்படி இருக்கும்.

இதுவா வீரம்? இதுவா விவேகம்? இதுவா சாணக்கியம்? இதுவா கெட்டித் தனம்? இதுவா அரசியல்? இதுவா ஒரு மதகுருவின் பண்பும் பணியும்?

கோமாளித்தனமான வேலைகள் எப் போதும் யாருக்கும் சிரிப்பையே உண் டாக்கும். ஞானசார தேரரின் வேலைகள் (விளையாட்டுகள்) பெரும்பாலும் அப் படித்தான் உள்ளன, கோமாளித்தனமாக.



ஆனால், இது வெறும் கோமாளித்தனம் அல்ல. இதன் பின்னே மிக அபாயகர மான நச்சு விதைகளும் முட்களும் உள்ளன. ஏனென்றால் மிகப் பச்சை யாகவே இனவாதத்தைக் கக்கும் விசப் பாம்பாக பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடே அத்தே ஞான சார தேரர் இருக்கிறார். இதனால்தான் நாம் இதையிட்டு மிகக் கவனமாக இருக்க வேண்டியுள்ளது. அத்துடன் இந்த விடயங்களைத் துணிச்சலோடு எதிர்க்கவும் வேண்டியிருக்கிறது.

ஆனால், அதிதீவிர நிலைப்பாட்டை எடுக்கும் எவருக்கும் ஞானசார தேரர் சந்தித்திருப்பதைப் போன்றதொரு நிலை அல்லது விதி ஏற்படுவதுண்டு. தீவிர நிலைப்பாடுடைய இயக்கங்களுக்கும் அமைப்புகளுக்கும் ஏற்படும் நிலை இதுதான். இதனால்தான் இந்த மாதிரி யான ஆட்களும் இந்த மாதிரியான அமைப்புகள் அல்லது இயக்கங்களும் எப்போதும் நெருக்கடிக்கும் தலை மறைவு நிலைக்கும் உள்ளாக வேண்டி யிருக்கிறது.

இதற்குக் காரணம், இவ[illegible] அல்லது இந்த அமைப்புகளின் அதி தீவிர நிலை சமூகத்தில் உண்டாக்கும் நெருக்கடியே ஆகும். சமூகத்தை அமைதி யிழக்கச் செய்யும் வகையில் அதிதீவிர நிலைப்பட்டுச் செயற்படும்போது சமூ கம் அச்சமடைகிறது. பாதுகாப்பின்மை யில் இருப்பதாக உணர்கிறது. இது அந் தச் சமூகத்தை அல்லது அந்தச் சமூகங் களைப் பதட்டமடைய வைக்கிறது. இப்போது நடந்திருப்பதும் இதுதான்.

தமிழ், முஸ்லிம் சமூகங்களை அச்சு றுத்தும் வகையிலும், அவற்றை நெருக் கடிக்குள்ளாக்கும் விதமாகவும் ஞானசார தேரர் அதிரடியாகச் செயற்பட்டு இலங் கையின் சிறுபான்மைத் தேசிய இனங்களை நெருக்கடிக்குள்ளாக்கி யிருக்கிறார். குறிப்பாக முஸ்லிம் சமூகத் தின் மீதும் பள்ளிவாசல்களின் மீதும் அவர் தொடங்கிய தாக்குதல்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் முஸ்லிம் சமூகத்தை மிகப் பதற்றமடையச் செய்தி ருக்கிறது. இதை ஒத்த ஒரு தோற்றப் பாடு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் அணி திரண்டிருக்கும் எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணியைக் குறித்தும் உண்டு. சிறு பான்மைச் சமூகத்தினருக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணி செயற்படுகிறது என்ற உணர்வே சிறு பான்மையின மக்களிடம் உள்ளது. அர சாங்கத்தை வீழ்த்துவதற்கு தீவிர இன வாதத்தைப் பேசுகின்றது எதிர்க்கட்சி களின் கூட்டு முன்னணி.

ஆகவே தற்போது மெல்ல மெல்ல இனவாதச் சக்திகள் மெல்ல மேலெழுந்து வலுப்பெற்று வருகின்றன. இலங்கை யின் அறுபது ஆண்டுகால அரசியல் நிகழ்ச்சிப் போக்கு இப்படித்தான் உள் ளது. இனப்பிரச்சினைக்கான முயற்சி கள் முன்னெடுக்கப்படும்போது இன வாத சக்திகள் தீவிர நிலைப்பாட்டுடன் இயங்கத் தொடங்கும். ஆனால், இந்தத் தரப்பு ஒன்றும் பெரியளவுக்குப் பல மானதாக இருப்பதில்லை. மக்களின் ஆதரவைப் பெற்றவையாகவும் இருப்ப தில்லை. இருந்தாலும் இந்தச் சக்திகளின் சிறிய அளவிலான எதிர்ப்பைக் கூடப் பெரிது படுத்துவிடுகின்றன ஊடகங்கள். இதை உள்ளூர விரும்பி ஆதரிக்கின்றன பிரதான அரசியல் கட்சிகள். இதற்குக் காரணம், இவற்றுக்கு இனமுரண் அரசி யல் எப்போதுமே தேவையாக இருப் பதே.

இப்போது ''அத்தே ஞானசார தேரர் கைது செய்யப்பட்டால் நாட்டில் என்ன நடக்கும் என்று தெரியாது'' என எச்ச ரிக்கை விடுத்து பொதுபலசேனா அமைப்பினர் கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கு முன்பாக வெள் ளைத் துணியால் வாயைக் கட்டியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட செய்திக்கு முதன்மை அளித்து தமிழ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இலங்கை யில் பொதுபல சேனா ஒன்றும் பெரிய சக்தி கிடையாது. பொதுபல சேனாவின் பின்னால் ஆயிரம் பேர் திரள்வார்கள் என்பதே சந்தேகமே. ஆனால், தமிழ், முஸ்லிம் சமூகங்களின் மனதில் பொது பல சேனாவும் ஜாதிக ஹெல உறுமய வும் பெரிய பூதங்களாகவே உணரப்படு கின்றன. அப்படித்தான் தமிழ் ஊடகங்க ளிலும் சித்தரிக்கப்படுகிறது. எதிர்நிலை யாகச் சில சம்பவங்களை இந்தச் சக்தி கள் முஸ்லிம்களின் மீதும் தமிழர்களின் மீதும் நிகழ்த்தலாம். ஆனால், பெரிய அளவிலான வன்முறையைத் தூண்டக் கூடிய அளவுக்கு இவற்றின் வலுவும் விரிவாக்கமும் இல்லை.

இதேவேளை ஒரு துக்ககரமான நிலைமை உண்டு. இனவாதத்தில் தீவிர நிலையைக் கொண்டிருக்கும் இந்த அமைப்புகளைப் பற்றி இந்த நாட்டி லிருக்கும் பெரும்பான்மைச் சமூகமான சிங்களத் தரப்பினர் பெரிய அளவில் எந்தவிதமான எதிர்வினைகளையும் வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை என்பது.

கடந்த சில மாதங்களுக்கு முன், மட்டக்களப்பில் ஒரு தேரர், ஒரு கிராம அலுவலரை அச்சுறுத்தி, சட்டத்துக்கும் சமூக வரன்முறைக்கும் மாறாக நடந் தார். அதையிட்டும் பெரும்பான்மைச் சிங்களச் சமூகத்தினர் தமது கவலைகளை வெளிப்படுத்தவில்லை. குறைந்த பட்சம் இந்த நாட்டிலே அமைதியை உருவாக்க வேணும் என்று மெய்யாகவே சிந்திக் கின்ற, விரும்புகின்ற சிங்களச் சமூகச் செயற்பாட்டு இயக்கங்கள் கூட வாய் திறக்கவே இல்லை. நல்லிணக்கச் செயற் பாடுகளில் ஈடுபட்டு வருவோரும் அபிப் பிராயங்களை வெளிப்படுத்தவில்லை.

இதனால், இந்தச் சம்பவங்கள் சிறு பான்மைச் சமூகங்களின் மனதில் ஆழ மான பல சந்தேகங்களை உருவாக்கியுள் ளன. இந்த நாடு அமைதிக்குத் திரும் புமா? நீதியுள்ள நாடாக இருக்குமா? புதிய அரசியலமைப்புச் சட்டம் நியா யத்தின் அடிப்படையில் உருவாக்கப் படுமா? நல்லிணக்கமும் நிலைமாறு காலகட்ட நீதிச் செயற்பாடுகளும் நிறை வேறுமா? பகை மறக்கப்படுமா? அல் லது இந்த மாதிரி எதிர் நிலை எண் ணத் தின் வழியாக வளர்க்கப்படுமா?

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EDITORIAL

49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## அனர்த்தங்கள் உணர்த்துவதென்ன?

ஒரு வருடத்துக்குள் மீண்டும் ஒரு வெள்ள அனர்த்தம் நேர்ந்து நாடு தவிக்கிறது. கடந்த முறையை விட இம்முறை பெய்த மழை குறைவாக இருந்தாலும் ஓரிரு தினங்கள் பெய்த மழையே இவ்வளவு சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளது. மரணித்தும் காணாமல் போயும் இது வரை இழக்கப்பட்ட உயிர்கள் முந்நூறைத் தாண்டியுள்ளது. கடந்த வெள்ளத்தின் பாதிப்பிலிருந்தே முழுதாக மீளாத நிலையில் மற்றுமொரு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் விரக்தியின் விளிம்பு வரை சென்றிருக்கின்றனர்.

வழமை போன்று அனர்த்த வேளைகளில் மாத்திரம் தீர்வுகளைப் பற்றிப் பேசிவிட்டு இம்முறையும் வாளாதிருக்க முடியாது. கொழும்பில் கடந்த முறை ஏற்பட்ட வெள்ளம் நாற்பது வருடங்களுக்குப் பின்னர் ஏற்பட்டது எனச் சொல்லப் பட்டது. அதற்கு புளுமெண்டால் கால்வாய் மூடப்பட்டது தான் காரணம் என்றும் இதற்குப் பகரமாக மேலதிக நீரை கடலுக்குக் கொண்டு சேர்க்கும் மேலதிக கால்வாய்கள் ஐந்து நிர்மாணிக்கப்படும் எனவும் அவ்வேளை பரபரப்பாக பேசப்பட்டது. அதற்குள் மீண்டும் ஒரு வெள்ளம் பெருக்கெடுத்து சேதம் விளைவித்திருக்கிறது.

நாற்பது வருடங்களுக்கு ஒரு முறை வந்த வெள்ளம் தற்போது வருடந்தோறும் வருவதற்கான காரணங்கள் கண்டறியப்பட்ட போதும் அவற்றைத் தடுப்பதற்கான முறையான திட்டங்கள் இன்னும் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படவில்லை என்பது கவலை தருவதாகும். இன்னும் பல உயிர்கள் காவு கொள்ளப்பட முன்னர் இதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட வேண்டும்.

அண்மைக்கால அனர்த்தங்கள் அனைத்தும் மனிதனே தனது கரங்களால் ஏற்படுத்திக் கொண்ட அழிவுகளாகவே காணப்படுகின்றன. மக்களின் பயணத்துக்குத் தடையாக பாதைகளில் கட்டடங்களை அமைப்பதால் வடிகான்கள் மூடப்பட்டு தண்ணீர் வழிந்தோடுவதற்கு இடமின்றி தேங்கியமை வெள்ளப் பெருக்குக்கான காரணங்களில் ஒன்றாகியது. அதேபோல ஆறுகளையும் வடிகான்களையும் மறித்துப் போடப்பட்டிருந்த கட்டுமாணங்களும் குப்பைகளும் தண்ணீர் வழிந்தோடுவதற்குத் தடையாக இருந்துள்ளன. அறியாத் தனத்தால் அன்றி மக்கள் வேண்டுமேன்றே செய்கின்ற இவ்வாறான தவறுகளால் அநியாயம் செய்யாத மக்களும் சேர்ந்து பாதிப்புக்குள்ளாகின்றனர். அனர்த்தம் விளைந்தபின் நிவாரணத்துக்காக ஓடுவதை விட மக்களை இது தொடர்பில் விழிப்படையச் செய்வது முக்கியமாகும்.

அனர்த்த தவிர்ப்பில் மக்களை அறிவூட்டுவது போலவே அரசாங்கமும் தனது கடமையைச் செய்ய வேண்டும். அண்மைக்கால அனர்த்தங்கள் இயற்கை அழிவுகளாக அன்றி இயற்கைச் சமநிலைக்கு மாறாக நடந்து மக்கள் கொண்டதன் வெளிப்பாடாகவே அமைந்துள்ளன. மக்களின் குடியிருப்புப் பகுதியில் வகைதொகையின்றிக் கொட்டப்பட்ட குப்பைதான் மீதொட்டுமுல்ல பிரதேசத்தில் அழிவை ஏற்படுத்தியது. அதேபோல வியாங்கல்ல, வெலிப்பன்ன பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கும் மண்சரிவும் அதிவேகப் பாதைகள் அமைத்ததனால் ஏற்பட்ட பின்விளைவுகளாக கணிக்கப்படு கின்றன. தற்போது ஆரம்பிக்கட்டு நிர்மாணிக்கப்பட்டு வரும் கண்டி, குருநாகல் அதிவேகப் பாதைகளும் எதிர்காலங்களில் இதுபோன்ற அனர்த்தங்களை விளைவிக்கக் கூடிய சாத்தியங்கள் அதிகமாகவே இருக்கின்றன.

தற்போது மலைகளைப் பெயர்த்து கடலிலே கற்பாறைகளைக் கொட்டி நிர்மாணிக்கப்படும் துறைமுக நகரினால் நாட்டின் இயற்கைச் சமநிலை பாதிக்கப்படும் என சூழலியலாளர்கள் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தும் அதற்கு மாற்றமான ஒரு அறிக்கையைப் பெற்று குறித்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக நாட்டின் பல பகுதிகளில் மண்சரிவுகள் நிகழும் அபாயம் அதிகரித்து வருகிறது.

அனர்த்தங்கள் நிகழ்ந்ததன் பின்னர் ஊடகங்கள் வாயிலாக மக்களிடமிருந்தே நிவாரணத்தைத் திரட்டி மக்களின் துயரத்தை துடைக்க முயற்சிப்பதால் அபாயங்கள் நீங்கிவிடப் போவதில்லை. நாட்டில் நிரந்தர சமாதானம், நிரந்தர் அபி விருத்தி என பல்வேறு வேலைத்திட்டங்களை நாட்டுக்குள் திணிப்பவர்கள் மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கான நிரந்தரத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும். பிச்சைக்காரனின் புண்ணைப் போல வெளிநாடுகளிடமிருந்து நிதி திரட்டுவதற்கான மூலோபாயமாக அனர்த்தங்களைப் பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

# இன விரிசலை கூர்மைப்படுத்தும் பொதுபல சேனாவின் புதிய நாடகம்

• சாமர லக்ஷான் குமார

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின் அரச அனுசரணையின்றி பின்னடைவுக்கு உட்பட்டு வந்து, 2015 ஆகஸ்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு மண்ணைக் கவ்விய ஞானசார உள்ளிட்ட தேரர் கூட்டுப் படையணி கடந்த சில வாரங்களாக தமது வழமையான விளையாட்டுக்களை ஆரம்பித்திருந்தன.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அண்மையில் வெளியிட்ட அறிக்கையின் படி, கடந்த ஏப்ரல் 16 ஆம் திகதி முதல் மே 24 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் முஸ்லிம் பள்ளிவாயல்கள், வியாபார நிலையங்களை இலக்கு வைத்து சொத்துகளை சேதப்படுத்தல், தீ வைத்தல், அச்சுறுத்தல், குரோதங்களை பரப்புதல் உள்ளிட்ட 15 இற்கும் அதிகமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நாட்டின் பல்வேறு பாகங்களில் இடம்பெற்ற இச்சம்பவங்கள் அனைத்தும் மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வரலாற்றில் பாரிய கலங்கத்தை ஏற்படுத்திய தர்கா நகர் சம்பவத்தில் 4 பேர் கொல்லப்பட்டதுடன் 80 இற்கும் அதிகமானவர்கள் காயப்பட்டனர். பெருமளவான சொத்துக்கள் சேதமானதுடன் 8000 முஸ்லிம்களும் 2000 இற்கும் அதிகமான சிங்களவர்களும் இடம்பெயர்ந்தனர். அதனால் இது போன்றதொரு சம்பவத்தை எவரும் கனவிலும் எதிர்பார்க்க மாட்டார்கள்.

சிங்கள பௌத்த இனவாதிகள் முஸ்லிம் சமூகத்தை ஏன் இவ்வளவு சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள்? இது ஆழமாக சிந்தித்துப் பார்க்கப் பட வேண்டிய விடயம். அவ்வாறான தேடலின் போது எமக்கு பல விடயங்கள் கிடைத்ததுடன், மிக முக்கியமாக இரண்டு முக்கிய காரணங்களால் 'குரோதம்' அல்லது சந்தேகம் உருப்பெற்றிருப்பதனைக் காணலாம்.

முஸ்லிம்களின் சனத்தொகைப் பெருக்கம் அதில் முதலாவது விடயமாக உள்ளதுடன், பொருளாதாரப் பலம் இரண்டாவது விடயமாக உள்ளது. மக்களை இலகுவில் தூண்டக் கூடிய கோஷங்களாக இவை உள்ளன. 'சிங்கள இனத்தை பின் தள்ளிவிட்டு இந்நாட்டில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினமாக மாறும் நாள் வெகுதொலைவில் இல்லை' எனக் கூறி சிங்கள இனவாதிகள் பல தசாப்தங்களாக கருத்துப் பரப்பி வருகிறார்கள்.

சிங்கள இன விருத்திக்கு ஒப்பான வகையில் இந்நாட்டில் முஸ்லிம் இன விருத்தியிலும் ஓரளவு வளர்ச்சி காணப்படுவது என்பது தெளிவாகவே கலாசார பிரச்சினையாகும். இது தொடர்பில் ஒரு சிலர் முன்வைக்கும் விடயங்கள் எவ்வித தர்க்க ரீதியும் அற்றவை. இது தனியாகப் பேசப்பட வேண்டியதொரு விடயம்.

வர்த்தகமும் முஸ்லிம்களுக்கு வித்தியாசமானதொரு விடயமல்ல. தெளிவாகவே அவர்கள் வர்த்தக சமூகம். இந்நாட்டில் இன்றும் பொருளாதாரத்தை வழிநடாத்துகின்ற பிரதான வர்த்தகர்களுள் பெரும்பாலானவர்கள் சிறுபான்மை சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள். இருந்தும் அவர்களால் இந்நாட்டிற்கு தீங்கு ஏற்பட்டதாக நாம் கேள்விப்பட்டதில்லை. நாட்டில் படித்த சமூகத்திற்கு இது தொடர்பில் போதிய புரிதல் உள்ள போதிலும் விரைவாகவே இவ்விடயங்கள் சிங்கள சமூகத்தில் விற்பனையாகும் துவேஷக் கருத்துக்களாகவும் உள்ளன. இல்லாததொரு பிசாசை உருவாக்கி பொதுபல சேனாவும் இதனைப் பிரயோசனப்படுத்தி வருகிறது.

அண்மைக் காலமாக சிங்கள முஸ்லிம் மக்களுக்கு மத்தியில் பாரிய பிளவுகளை ஏற்படுத்துவதற்கு இனவாதிகள் முயற்சித்து வந்தாலும் பன்னெடுங்காலமாக இவ்விரு சமூகங்களுக்கு மத்தியிலும் நல்லுறவுகள் பேணப்பட்டு வந்தமைக்கான வரலாற்றுத் தகவல்கள் அதிகம் உள்ளன. இஸ்லாமிய மதம் இலங்கையில் உதயமாவதற்கு முன்னர் தொட்டு இலங்கை தொடர்பில் அரேபிய புத்தகங்களில் பதிவாகியுள்ளமை தொடர்பில் ''இலங்கை பல்கலைக்கழகத்தின் இலங்கை வரலாறு'' எனும் நூலில் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

உபவேந்தர் சேர். நிகலஸ் ஆடிகல இந் நூல் [illegible] குழுவிற்கு தலைமை [illegible] பேராசிரியர் செனரத் பரணவிதான, எஸ். நடேசன், டபிள்யு.ஜே.எப். லப்ரோய், சீ. டபிள்யு. நிகலஸ் ஆகியோர் அங்கம் வகித்துள்ளார்கள். வித்யாலங்கார பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள இந்நூலின் சிங்கள மொழிபெயர்ப்பின் 62 ஆவது பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

''இஸ்லாம் மதம் அறிமுகமாவதற்கு பன்னெடுங்காலத்திற்கு முன்னர் தொட்டு அரேபிய சுற்றுப் பயணிகள் இலங்கை தொடர்பில் அறிந்திருந்தார்கள். அரேபிய கடல்வழிப் பயணிகள் மூலமே கிரேக்கர்களும் ரோமர்களும் இலங்கை தொடர்பில் அறிந்துகொண்டார்கள். இஸ்லாம் இங்கு அறிமுகமானதன் பின்பே அரேபியர்களாலும் அவர்கள் உள்ளிட்ட பொது முஸ்லிம்களாலும் எழுதப்பட்ட புத்தகங்களில் இந்நாட்டின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டன. 'சுலைமான்' என்பவரினால் இலங்கை குறித்ததான முதலாவது ஏடு எழுதப்பட்டுள்ளது. நூறு வருடங்களின் பின்னர் (கி.பி.950) 'அபூ செய்யத்' என்பவர் எழுதிய 'சில்சிலத் அல் தவாரிப்' எனும் நூலில் இத்தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.




'இப்னு பதூதா' என்பவரும் ஒரு பழைய எழுத்தாளர். 10 ஆம் நூற்றாண்டின் நடுப் புகுதியில் இப்பிரதேசங்களில் சுற்றுப் பயணங்களை மேற்கொண்ட 'மசூதி' என்னும் எழுத்தாளரும் முன்னைய எழுத்தாளர்கள் எழுதிய விடயங்களையும் தனது அனுபவங்களையும் உள்ளடக்கி ஒரு புத்தகத்தை எழுதினார். அதனைத் தொடர்ந்து சில காலங்களின் பின்னர் இக்தப்ரி, இப்னு ஹவ்கல், மக்திஸி போன்றோரும் இலங்கை தொடர்பில் சுமாரான விடயங்களை பதிவு செய்துள்ளார்கள்.

'அல் பிரூனி' இந்தியா தொடர்பில் எழுதிய நூலின் ஒரு சில இடங்களில் இலங்கை தொடர்பாகவும் குறிப்பிட்டுள்ளார். 12ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் 'இத்ரீஸ்' என்னும் புகழ்பெற்ற அரேபிய புவிச் சரிதவியலாளர் கீழைத்தேய நாடுகள் தொடர்பில் அதுவரை காலமும் வெளியான தகவல்கள் அனைத்தையும் ஒன்று திரட்டியிருந்தார். அவர் எழுதிய புத்தகத்தில் இலங்கை தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்பட்ட காலத்தில் வசித்த யாக்கூத், கஸ்வினீ, அபுல் பீடா போன்ற புவிச் சரிதவியலாளர்களும் இலங்கை பற்றிய பதிவுகளை முன்வைத்துள்ளார்கள். இருந்த போதிலும் இலங்கை தொடர்பில் எழுதிய சகல முஸ்லிம் எழுத்தாளர்களுக்கு மத்தியிலும் 14 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கைக்கு வந்த 'இப்னு பதூதா' முக்கியமான ஒருவராகக் காணப்படுகிறார்.

இவை தவிர், இலங்கை அரபுலகத்துடன் கொண்டிருந்த பாரம்பரிய தொடர்புகள் பற்றியும் இந்நூலில் பல விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எமது நாட்டின் பொருளாதாரத்தை சர்வதேச உறவுகளுக்கூடாக பலப்படுத்திக் கொள்வதற்கு அன்றைய காலப் பகுதியிலும் எமது நாட்டின் ஆட்சியாளர்கள் முயற்சித்துள்ள விதம் தொடர்பில் அந்நூலின் 668-669 ஆம் பக்கங்கள் தெளிவுபடுத்தியுள்ளன. யாப்பஹூவ ராச்சியத்தின் முதலாம் புவனேகபாகு மன்னன் சார்பில் அல்ஹாஜ் 'அபூ உஸ்மான்' என்னும் தூதுவர் கி.பி 1283ம் ஆண்டு எகிப்தின் அரச மாளிகைக்கு அனுப்பப்பட்டார். சிங்கள மன்னன் அவரது கையில் அனுப்பிய ஓலைச் சுவடியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

''இலங்கை எகிப்தாகும். எகிப்து இலங்கையாகும். எனது தூதுவர் திரும்பி வரும் பொழுது எகிப்தின் தூதுவரொருவர் அவருடன் வருவார் என நான் எதிர்பார்க்கின்றேன். அனைத்து வகைகளிலுமான பெருமளவிலான முத்து மாணிக்கங்கள் என் வசம் உள்ளன. கப்பல், யானைகள், முஸ்லின் போன்ற துணிகள் (பகம்) மற்றும் வாசனைத் திரவியங்கள் உள்ளிட்ட சகலவிதமான வர்த்தகப் பொருட்களையும் இந்த வர்த்தகர்கள் உங்களிடம் கொண்டு வருவார்கள். மாளிகைகளை அமைப்பதற்கு பொருத்தமான பலகைகளை கொண்ட மரங்கள் எனது தேசத்தில் வளர்கின்றன. வருடந்தோறும் 20 கப்பல்களை அனுப்புமாறு சுல்தான் என்னிடம் கூறினால் அதனை எனக்கு வழங்க முடியும்.

இன்னும் உங்களது நாட்டு வியாபாரிகளுக்கு எனது நாட்டில் வியாபாரம் செய்யும் பூரண சுதந்திரம் உள்ளது. யெமன் இளவரசனின் தூதுவரொருவர் என்னை சந்திக்க வந்தார். தனது இளவரசனுடன் நல்லுறவுகளை பேணுமாறு கோரியே அவர் இங்கு வந்திருந்தார். சுல்தான் மீது நான் கொண்ட இரக்கத்தின் காரணமாக நான் அவரை வெளியேற்றினேன். என்னிடம் 27 மாளிகைகள் உள்ளன. அவற்றின் திறைசேரிகள் சகல வகைகளிலுமான மாணிக்கங்களால் நிரம்பியுள்ளன. முத்து எனது தேசத்திற்கு சொந்தமானது.''

மேற்கத்தேயர்கள் இந்நாட்டிற்கு வந்த பின்னரும் கூட அந்நிலையில் மாற்றம் இருக்கவில்லை. 1626 இல் கொன்ஸ்தாந்து நோபிள் எனும் போர்த்துக்கேய ஆளுநர் கரையோரத்தில் வாழ்ந்த முஸ்லிம்களை விரட்டிய பொழுது மலைநாட்டின் செனரத் மன்னன் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கினான். இவ்விரு இனங்களுக்கு மத்தியில் காணப்பட்ட சகவாழ்விற்கான உதாரணமாக இதனைக் குறிப்பிடலாம்.

அதுமாத்திரமல்லாமல் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம்கள் அப்போதைய சிங்கள தலைவர்களுடன் கைகோர்த்து, தங்களால் இடம்பெற வேண்டிய சேவைகளை எவ்வித குறைபாடுகளுமின்றி நாட்டிற்கு நல்கினார்கள். டீ.பீ. ஜாயா, சேர். ராஸிக் பரீத் போன்ற தலைவர்களின் செயற்பாடுகள் அதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

ஒரு புறத்தில் சிறுபான்மையினமாக தமது எதிர்கால பாதுகாப்பு தொடர்பிலான பிரச்சினைக்கும் மறுபுறத்தில் தமது தாய் நாட்டின் விடுதலை தொடர்பான பிரச்சினைக்கும் நடுவில் அகப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைவரான டீ.பீ. ஜாயா அவர்கள் டொமினியன் நிலைமை தொடர்பான பிரேரணை முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் 1945 ஆம் ஆண்டு நவம்பர் 09 ஆம் திகதி தேசிய அரசுப் பேரவையில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க உரையை நிகழ்த்தியிருந்தார்.

''முஸ்லிம்கள் எனும் வகையில் எமது எதிர்காலப் பாதுகாப்பு தொடர்பில் எமக்கு பிரச்சினை உள்ளது. எனினும், சுதந்திரம் தொடர்பான பிரச்சினையில் நிபந்தனை விதித்து சுதந்திரம் பெற்றுக்கொள்வதை தாமதப்படுத்துவதற்கு இந்நாட்டின் முஸ்லிம்கள் தயாரில்லை. நிபந்தனையின்றி தாமதமில்லாமல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்னும் நிலைப்பாட்டில் இந்நாட்டின் முஸ்லிம்கள் உள்ளார்கள்.''

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றவூப் ஸெய்ன்

நல்லாட்சி அரசியல்

# அமைச்சரவை மாற்றம்

## ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் சிறந்த நிதியமைச்சர் வெளிநாட்டமைச்சராக பெரிய சப்பாத்தை அணியும் மங்கள நிதியமைச்சராக

நான் அமைச்சரவையை மாற்றுவேன். ஏனெனில், நான்தான் ஜனாதிபதி என்பது போல அமைச்சரவையில் அதிரடி மாற்றத்தை நிகழ்த்தியுள்ளார் ஜனாதிபதி. இசைக் கதிரையில் அமர்வது போன்றதே இலங்கையின் அரச நிருவாக நியமனங்களும் அமைச்சரவை மாற்றமும் ஆகும்.

சமீபத்திலேயே ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் தலைசிறந்த நிதியமைச்சராக பட்டம் பெற்றவர் ரவி கருணாநாயக்க. பட்டம் பெற்றவர்களுக்கு இப்படி நடப்பது இதுவே முதன் முறையல்ல. உலகிலேயே மிகச் சிறந்த இராணுவத் தளபதிக்கு மஹிந்தவின் ஆட்சியில் நடந்ததை நாம் அறிவோம்.

மஹிந்த ஆட்சியிலிருந்து தூக்கி வீசப்பட்ட போது காலியாகக் கிடந்த திறைசேரியை கடன் தொகையால் நிறைத்தவர் ரவி. அதிலும் ஒரு சாதனை. கடன்களாகப் பெற்ற பில்லியன்களில் சில மில்லியன்களை செலவளிக்காது சேமித்து வைத்தவர். அதுவே நல்லாட்சியின் பொருளாதாரச் சாதனை என்று வேறு தம்பட்டம் அடித்தவர்.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு -அமெரிக்கப் பாணியில்- பல்வேறு விதமான வரிகளை மக்கள் மீது சுமத்தி, முதுகை முறிக்க முயன்றவரும் அவர்தான். மேற்கு நாடுகளை -குறிப்பாக முதலாளிய எஜமானர்களை- அச்சொட்டாகப் பின்பற்றும் தமது தலைவர் ரணிலின் வழிவந்த ரவி, வரிகளைச் சுமத்தியே திறைசேரியை நிரப்பலாம் என்று கனவு கண்டவர். ஆனால், ஜனாதிபதி மைத்திரியோ அதற்கு உடன்படவில்லை. VAT வரி பற்றிய அறிவிப்பை ஜனாதிபதி பத்திரிகையில் படித்தே தெரிந்து கொண்டார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை உருவாக்கிய ஜே.ஆர். முதல் அதனை மிக மோசமாக துஷ்பிரயோகம் செய்த மஹிந்த வரை நிதியமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதிகளே தம் வசம் வைத்துக் கொண்டனர். அதற்கு விதிவிலக்காக இருந்த ஒரேயொருவர் மைத்திரியே.

மைத்திரியை எதிர்க்கட்சியிலிருந்து பிடுங்கி ஜனாதிபதி வேட்பாளராக நியமித்தமைக்கு செஞ்சோற்றுக் கடனாகச் செய்த சில தியாகங்களில் இதுவும் ஒன்று. அதாவது பாதுகாப்புத் துறைக்கு ஒரு இராஜாங்க அமைச்சரை ஏற்றுக் கொண்ட மைத்திரி, நிதியமைச்சுப் பொறுப்பை தன்னிடமிருந்து விலக்கிக் கொண்டு, ஐ.தே.க. சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரான ரவியிடம் ஒப்படைத்தமைதான்.

ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் ரவியின் நகர்வுகள் மைத்திரிக்கு மிகுந்த அதிருப்தியையே ஏற்படுத்தியது. மத்திய வங்கி பிணைமுறி ஊழலில் சிக்கியவரை விசாரிப்பதற்கு ரவி உடன்படவில்லை. VAT வரி விதித்தமை குறித்து ஜனாதிபதியுடன் ஆலோசிக்கப்படவில்லை. வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவது தொடர்பிலும் அவர் தன்னிச்சையாகச் செயற்பட்டார் என்று குற்றம் சுமத்தப்படுகிறது.

மொத்தத்தில் ரவியின் தன்னிச்சையான போக்கும் தீவிர முதலாளித்துவம் சார்ந்த அணுகுமுறைகளும் ஜனாதிபதிக்கு அளித்த அதிருப்தியே அமைச்சரவை மாற்றத்தைத் தூண்டியது. ஆனால், அரசாங்கத்தின் குறிப்பாக சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் விருப்பங்களுக்கு முரணாகச் செயல்படும் அமைச்சுப் பொறுப்புக்களை மாற்றி விடுவதால் ஒன்றும் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு விடாது. தலைவலிக்கு தலையணையை மாற்றும் இந்தக் கைங்கரியம் அரசாங்கத்தை தற்காலிகமாகப் பாதுகாப்பதற்கு உதவலாம். ஆனால், நிலையான ஒரு பொருளாதாரக் கொள்கையும் நீண்டகாலத் திட்டமிடலும் இல்லாமல் நடக்கும் ஆள்மாறாட்டம் நாட்டுக்கு எந்த நலனையும் ஏற்படுத்தாது. அவை வெறுமனே குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டும் அரசியலாகவே இருந்துவிடும்.





அமைச்சரவை மாற்றத்தில் மற்றொரு பேசு பொருள் வெளிநாட்டு அமைச்சராக இருந்த மங்கள நிதியமைச்சராக மாற்றப்பட்டமை. இதற்கும் ஜனாதிபதியின் தரப்பில் சில நியாயங்கள் இருக்கவே செய்கின்றன.

இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற விசாரணைகளில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் தீர்மானங்களுக்கு மங்கள முழுமையாகக் கட்டுப்பட்டிருந்தார். போர்க் குற்ற விசாரணைகளுக்கு சர்வதேச நீதிபதிகளை உள்ளீர்க்க வேண்டும் என்ற தீர்மானத்தை மங்கள ஏற்றுக் கொண்டிருந்தார்.

பொதுவாக, இலங்கை அரசு போர்க் குற்ற விசாரணை ஒன்றுக்கு முகம்கொடுக்க வேண்டும் என்பதே மங்களவின் நிலைப்பாடாக இருந்தது. இந்நிலையிலேயே அவரது வெளிநாட்டு அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டுள்ளது. நிதியமைச்சுப் பொறுப்போடு ஊடகத் துறை அமைச்சராகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மஹிந்த ஆட்சியில் இழக்கப்பட்ட GSP+ வரிச் சலுகையை மீளப் பெறுவதற்கு அயராது உழைத்தவர் மங்கள என்று கருதப்படுகின்றது. இருந்தபோதும் அவர் பதவி நீக்கப்பட்டமைக்கு சுதந்திரக் கட்சியின் சில அமைச்சர்களே காரணம் எனக் கூறப்படுகின்றது. மஹிந்தவை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு அவரது வலக்கரம் போன்று செயற்பட்டவர் மங்கள. அவரது ஆட்சியின்போது சிறிது காலம் வெளிநாட்ட மைச்சராகப் பதவி வகித்தவர். ராஜபக்ஷாக்களுக்கும் மங்களவிற்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளைத் தொடர்ந்து ஜீ.எல். பீரிஸ் வெளிநாட்டமைச்சராக நியமிக்கப்பட் டார். அதைத் தொடர்ந்து மங்கள அரசிலிருந்து வெளியேறினார்.

வெளிநாட்டு அமைச்சுப் பதவியில் மங்களவிற்கு எப்போதும் ஒரு கண் இருந்தது. இப்போது அவருக்கு நிதியமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. இன்றைய நெருக்கடியான சூழலில் அது மிகக் கடினமான ஒரு பணி என்று அவரே தெரிவித்துள்ளார். தனது கால்களுக்கு பெரிய சப்பாத்து அணிவிக்கப்பட்டுள்ளதாக அதனை அவர் வர்ணிக்கின்றார்.

தெற்கின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவதில் இடையூறாக இருந்த அர்ஜுன ரணதுங்கவும் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். தற்போது இடம்பெற்றுள்ள அமைச்சரவை மாற்றங்களை நோக்கும்போது அரசாங்கத்தின் முடிவுகளுக்கு இடையூறாகவும் மாற்றமாகவும் செயற்படும் அமைச்சர்கள் குறிப்பாக இலக்கு வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெளிவானது.

அமைச்சுக்களில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை ஒழிப்பதே அமைச்சரவை மாற்றத்திற்கான பிரதான காரணம் என்று அரசாங்கத் தரப்பில் கூறப்படுகின்றது. ஆனால், தலைவலிக்கு தலையணையை மாற்றும் இந்த உபாயம் ஊழலற்ற சட்டமும் நீதியும் நிலைபெற்ற இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு எந்தளவு தூரம் உதவும் என்பதே இப்பொதைக்குள்ள கேள்வியாகும்.

# ஒழிந்திருக்கும் பூதம்! ஒழித்து வைத்திருப்பது யார்?


இனவாதத்தைத் தூண்டி வரும் ஞானசாரவை கைதுசெய்வதற்கு பல்வேறு பொலிஸ் குழுக்கள் களத்தில் இறக்கப்பட்டுள்ளதாக சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு அறிவித்துள்ளது. ஆனால், பதுங்கியிருக்கும் ஞானசாரவோ பகிரங்கமாக பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்கிறார். ஊடகவியலாளர்களை சந்திக்கும் ஞானசாரவை பொலிஸாரால் ஏன் கைது செய்ய முடியவில்லை?

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த மதகுருவை சட்டமும் ஒழுங்கும் ஏன் கண்டுகொள்ளத் தவறுகின்றது? ஒரு சிறுபான்மை குற்றவாளியை கைதுசெய்வதில் பொலிஸார் எவ்வளவு தீவிரம் காட்டுவர். ஆனால், நிதியமைச்சரும் சட்டம் ஒழுங்குகள் அமைச்சரும் தொலைபெசியில் தொடர்பு கொண்டு உரை நிகழ்த்தும் இந்தக் குற்றவாளிக்கு ஒரு சட்டம், முஸ்லிம்களுக்கு இன்னொரு சட்டமா என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

நல்லாட்சி அரசாங்கம் முஸ்லிம்களை ஏமாற்றுகின்றதா? அரசாங்கத்திலுள்ள முஸ்லிம் அமைச்சர்களின் ஒன்றுபட்ட குரலுக்கு ஏதேனும் அர்த்தம் உள்ளதா? கடந்த இரண்டு ஆண்டுகளாக முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்று வரும் இனவாதச் செயல்பாடுகள் கடந்த ஒரு மாதத்தில் 15 இற்கு மேற்பட்ட சம்பவங்களாக விசாலித்துள்ளன.

சாதாரண சிங்கள மக்களை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டி விட்டு, பச்சையாகவே இனவாதத்தை உமிழும் தலைமழித்த இந்த மதகுருவை சட்டம் ஏன் காப்பாற்றுகின்றது? இதுதான் மிகுந்த விவாதத்திற்குரிய விடயம்.

மஹிந்தவின் அரசு போன்று நல்லாட்சி அரசாங்கமும் இனவாதத்தை மூலதனமாகக் கொண்ட அரசுதான். மஹிந்தவின் ஆட்சி இதை விடவும் நல்லது என்பன போன்றன மனப்பாங்கு பொதுப் புத்தியில் பதியும் அளவுக்கு



நிலைமைகள் எல்லை மீறிச் செல்கின்றன. இதன் தொடர்ச்சி இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் மஹிந்த ஆதரவு அலையொன்றை சிறுபான்மை மத்தியில் -குறிப்பாக முஸ்லிம்கள் மத்தியில்- உருவாக்கி விடவும் கூடும்.

நல்லாட்சி அரசாங்கம் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத செயற்பாடுகளைக் கண்டுகொள்ளாமைக்கான அரசியல் உள்நோக்கம் என்ன என்ற கேள்வி ஆய்வாளர்களைக் குடைந்து கொண்டிருக்கின்றது. சுமாராக இன்றைய இனவாத நடவடிக்கைகள் சட்டப்படி நிகழ்வது போலவே தோன்றுகின்றது. அரசாங்கத்தில் ஊடுருவியுள்ள சில விஷமிகள் இனவாதத்தை பரப்பும் மதகுருக்களுக்கு நேரடியாக ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

குறிப்பாக அரசாங்கத்தில் முக்கிய பதவி வகிக்கும் ஒரு அமைச்சரின் வீட்டிலேயே ஞானசாரர் அடைக்கலம் பெற்றுள்ளதாக சட்டத்துறை வட்டாரங்களில் செய்திகள் கசிகின்றன. இந்த அமைச்சர் சில மாதங்களுக்கு முன்னர் ஞானசாரரின் முஸ்லிம்-எதிர் பிரச்சாரத்தைப் பாராளுமன்றத்தில் ஒலித்தவர். ஞானசாரருடன் பல கூட்டங்களில் கலந்துகொண்டவர். சாரரின் தொல்பொருளியல் கண்டுபிடிப்புகளுக்குப் பின்னணியில் இருந்தவர். மஹிந்த அணியுடன் இன்றுவரை நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பவர். ஞானசாரரின் இனவாதத்தை சந்தைப்படுத்தி வரும் இவரது வீட்டிலேயே அந்தப் பூதம் தங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த இடத்தில் 'அல்லாஹு அக்பர்' புத்தகப் புகழ் சம்பிக்கவையும் நாம் மறந்து விட முடியாது. ஜனநாயகமயப்பட்ட ஒரு மிதவாதி போன்று தன்னைக் காட்டிக் கொண்டிருக்கும் அவர், காக்கும் கள்ள மௌனமே அவருக்கும் ஞானசாரருக்கும் இடையிலான தொடர்பை உறுதி செய்கின்றது. அவர் ஸ்தாபித்த ஜாதிக ஹெல உறுமய எனப்படும் அதி தீவிர சிங்கள இனவாத அமைப்பின் மடியில் வளர்ந்தவைகளே இன்றைய பொது பல சேனாவும் சிங்கள ராவயவும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

நாட்டில் ஏகப்பட்ட முஸ்லிம்களின் கடைகள் தீக்குத் தீனியாக்கப்படுகின்றன. புனிதஸ்தலங்களான பள்ளிவாயல்கள் கல்வீச்சுக்கு இரையாகின்றன. வீடுகள் தாக்கப்படுகின்றன. வென்னப்புவவில் இனவாதிகளால் எரியூட்டப்பட்ட முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான கடைப் பொருட்களின் பெறுமதி சுமார் 90 கோடி என மதிப்பிடப்படுகின்றது. இது போன்று எத்தனை கடைகள் இனவாதிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டன?

இத்தனை நடைபெற்றும் அரசு மெத்தனமாக நடந்துகொள்வது பாரிய சந்தேகத்தையே எழுப்புகின்றது. முஸ்லிம் எதிர் இனவாத செயற்பாடுகள் அரசாங்கத்திற்கு நல்லதல்ல என்பதை மைத்திரி உணர்ந்தே இருக்கின்றார். அப்படியிருந்தும் இது குறித்துக் கலந்துரையாடுவதற்கு முயன்ற முஸ்லிம் அமைச்சர்களை அவர் சந்திக்க மறுத்ததேன் என்ற கேள்வி இயல்பானதே.

அரசும் அமைச்சுமே இவற்றுக்கெல்லாம் பொறுப்பு என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் மொட்டையாகக் கூறிவிடுவதனால் இனவாதிகளின் அட்டகாசம் ஓய்ந்து விடாது. சாகல ரத்னநாயக்கவின் இந்தக் கூற்று வெளியாகி ஓரிரு மணித்தியாலங்கள் கடந்த நிலையில் கண்டி மாவட்டத்திலுள்ள தந்துர எனும் முஸ்லிம் கிராமம் இனவாதிகளின் தாக்குதல்களுக்கு உட்பட்டது. ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் ஞானசாரருக்கு பாதுகாப்பு வழங்கப்படுகின்றது என சுட்டிக்காட்டிய தருணத்திலேயே முக்கிய அமைச்சரின் வீட்டில் ஞானசாரர் அடைக்கலம் பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது.

மே 20 ஆம் திகதி குருநாகலை இப்பாகமுவைக்கு சமீபமாக உள்ள இடமொன்றில் ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்நாயக்க ஞானசாரரை தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டுள்ளார். அவர்கள் இருவருக்கும் இடையிலான உரையாடல் பதிவு காணொளியாக தற்போது பரவி வருகின்றது. சட்டத்தையும் ஒழுங்கையும் மீறும் ஒரு மதகுருவை கைதுசெய்து தண்டிக்காமல் அவரை தாஜா பண்ணும் நோக்கில் சட்டம் ஒழுங்கு அமைச்சரே தொலைபேசியில் உரையாடுவது எவ்வளவு பெரிய வினோதம்.

மதகுருவோடு உரையாடிய சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்னை 'மிரட்டும் பாணியில் பேச வேண்டாம். தேரராக நடந்துகொள்ளுங்கள்' என்று விநயமாக வேண்டுகின்றார். இந்தச் சம்பவங்கள் அனைத்தும் எழுப்பும் கேள்வி ஒன்றேயொன்றுதான். இலங்கையில் சகல பிரஜைகளுக்குமான சட்டமும் ஒழுங்கும் நடைமுறையில் உள்ளதா என்பதே அந்தக் கேள்வி. முஸ்லிம்களுக்கு ஒரு சட்டம், தமிழர்களுக்கு

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## ஒன்றுபட்டு நாட்டைக் கட்டியெழுப்புவோம்

தற்பொழுது நாட்டின் பல பாகங்களில் பெய்து வரும் கன மழை காரணமாக சில பிரதேசங்களில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதுடன் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. பலர் கூடாரங்களில் தஞ்சம் புகுந்துள்ளார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு பலர் உதவி வருகிறார்கள். உண்மையில் இது வரவேற்கப்பட வேண்டியதொரு விடயம்.

இயற்கை அழிவுகளுக்கு நிற, பேதம் கிடையாது. அது சகலருக்கும் பொதுவானது. வரலாற்றில் இலங்கை பல்வேறு இயற்கை அழிவுகளுக்கு முகங்கொடுத்து வந்துள்ளது. 2004ம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தமே இலங்கையில் ஏற்பட்ட மிகப் பெரிய இயற்கை அனர்த்தமாக உள்ளது. இவ்வருடத்தின் ஆரம்பப் பகுதி முதல் இலங்கையின் பல பாகங்களில் வரட்சி நிலை நீடித்திருந்தது. குருநாகல், புத்தளம் போன்ற மாவட்டங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டிருந்தன. இன்றும் அப்பகுதிகளில் வரட்சி நிலை நீடிக்கிறது. இந்நிலையில் தெற்கின் பல பிரதேசங்களில் பெய்த கடும் மழை காரணமாக நாட்டில் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன, மத பேதமின்றி பலர் உதவிக்கரம் நீட்டி வருகிறார்கள். கடந்த இரு மாதங்களாக நாட்டில் இனவாதச் செயல்கள் ஆங்காங்கு மேலோங்கியிருந்தன. சிறுபான்மைச் சமூகம் இதனால் பாதிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் வெள்ள அனர்த்தமும் ஏற்பட்டுள்ளது. எனவே மக்கள் இனவாதச் செயல்களை கிடப்பில் போட்டு விட்டு ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போல் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வருகிறார்கள்.

நாட்டில் மக்களுக்கு மத்தியில் ஐக்கியம் மலர இயற்கை அனர்த்தம் ஏற்பட வேண்டியதில்லை. இயற்கை அழிவுகள் ஏற்படாத காலப்பகுதியிலும் அந்நிலை நீடிக்க வேண்டும். நாட்டில் ஒரு சிலர் தமது சுய தேவைகளுக்காக அரங்கேற்றுகின்ற இனவாதச் செயல்களுக்கு முன்னாள் நாம் கதிகலங்க வேண்டியதில்லை. பொறுமையுடன் ஏனைய மக்களுடன் ஒன்றுபட்டு அதனை முறியடிக்க வேண்டும். வெள்ள அனர்த்தத்தில் மக்கள் எவ்வாறு இன மத பேதங்களின்றி பொருட்களை சேகரித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வருகிறார்களோ அது போன்று நாம் சகல நிலைகளிலும் ஒற்றுமை என்னும் கயிற்றை பற்றிப்பிடிக்க வேண்டும். அல்குர்ஆனும் அதனையே தெளிவுபடுத்துகின்றது. "நீங்கள் ஒற்றுமை என்னும் கயிற்றை பற்றிப்பிடியுங்கள்"

வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் எம்மால் முடிந்த உதவிகளை செய்ய வேண்டும். ஏனைய மக்களையும் தெளிவூட்ட வேண்டும். படிப்பினை பெற வேண்டும். ஒரு சில இனவாதிகளால் கட்டவிழ்த்து விடப்படுகின்ற இனவாதச் செயல்களை நாம் கூட்டாக நின்று முறியடிக்க வேண்டும். எமது பலம் இயற்கை அனர்த்தங்களின் போது மாத்திரம் வெளிப்படக்கூடாது. சகல பிரச்சினைகளிலும் ஒற்றுமையாக பிற மதத்தவர்களுடன் இணைந்து ஒரு பிரச்சினையை தனி சமூகத்தின் பிரச்சினையாக நோக்காமல் ஒட்டுமொத்த சமூகத்தினதும் பிரச்சினையாகப் பார்க்க வேண்டும்.

தேசிய மட்டத்தின் கவனத்திற்கு நாம் அதைக் கொண்டு செல்ல வேண்டும். தேர்தல் காலங்களில் நாம் வாக்களித்த பிரதிநிதிகளை தேடிச்சென்று பிரச்சினைகளைப் பற்றி தெளிவுபடுத்த வேண்டும். அரசியல் மட்டத்திலும் அவ்வாறு உதவிகளை பெற்று அப்பிரச்சினைகளை முறியடிக்கும் வழியை தேட வேண்டும். அதுவல்லாமல் ஆளுக்கொரு கருத்தை சொல்லிக் கொண்டு மக்கள் மத்தியில் இன்னும் வெறுப்புணர்வை விதைத்தால் பிரச்சினைகள் என்றும் ஓயாது. அது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதற்கு ஒப்பாகிறது

எனவே நாம் நாட்டின் அபிவிருத்திப் பயணத்திற்கு பங்களிக்க வேண்டும். அனைத்து மக்களும் பயன் பெறும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி திட்டங்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவற்றை ஸ்தம்பிதமடையச் செய்யும் இனவாதச்செயல்களை முறியடிக்க வேண்டும். வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக மக்கள் ஒன்றிணைந்து தங்களால் முடியுமானவற்றை கொடுத்து வருகிறார்களோ அதுபோன்று நாட்டின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களிலும் நாம் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அதுவே எமக்கு பாரிய வெற்றியாக அமையும்.

# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான மக்கள் இயக்கம் வெறும் கனவல்ல

நவீன உலகுக்கு இலங்கை சிறந்த தலைவர்களை உருவாக்கிக் கொடுக்கவில்லை. அவர்களிடம் தூரதிருஷ்டியும் இருக்கவில்லை. சுதந்திரம் கிடைக்கும் போது நாடு இருந்த முன்னேற்ற நிலைமையை தொடராக முன்னெடுத்துச் செல்ல அவர்களால் முடியவில்லை. நாட்டின் பிரஜைகளை பேதங்களின்றி சமஉரிமையுடன் சுயகௌரவத்துடன் வாழ்கின்ற மக்களாக மதிக்கச் செய்வதற்கு இந்தத் தலைவர்களால் முடியவில்லை.

இனவாதம், குலவாதம், மதவாதம் என்பவற்றை இல்லாதொழிப்பதற்குப் பதிலாக அவற்றுக்கு உரமூட்டினார்கள். இதை வைத்து குறுகிய அரசியல் இலாபம் தேடினார்கள். பிரித்தானிய காலனித்துவ வாதிகளால் கிடைக்கப் பெற்ற நவீன தேசிய அரசக் கொள்கையின் நிலைத்தலுக்கு ஒன்றுபட்ட தேசமொன்றைக் கட்டியெழுப்பும் தேவையை இவர்களால் உணர முடியவில்லை. மாறாக உருவாகி வந்த தேசிய ஒற்றுமையை சின்னாபின்னமாக்கி விட்டார்கள்.

நாட்டை வளப்படுத்துவதற்குப் பதிலாக நாட்டின் வளங்களை உறிஞ்சினார்கள். நாட்டின் அரசியலமைப்பை, நீதிமுறையை, நிர்வாகத்தை சீரழித்தார்கள். நாடு இரத்தம் சொட்டும் நிலைக்கு மாற்றப்பட்டது. தெரிந்தோ தெரியாமலோ தம்மால் இழைக்கப்பட்ட பாரிய குற்றத்துக்கு கவலைப்படாமல், பச்சாதாபப்படாமல் அரசியல் சித்தாந்தங்களிலிருந்து அரசியல் பார்வையை தூரமாக்கி வைத்திருக்கின்ற நிலைமை நல்லதாக அமையப் போவதில்லை.

ஆனாலும், இதனாலுண்டான இடைவெளியை நிரப்புவதற்கான மாற்று இயக்கம் ஒன்று இல்லாமலேயே இவையெல்லாம் நடக்கப் போகிறது. இது ஏதோவொரு வகையில் அராஜக நிலையொன்றைத் தோற்றுவிப்பதற்கு காரணமாக அமையும் என்பதோடு, மாற்று இயக்கமொன்று இந்த அராஜக காலப்பிரிவில் தான் தோன்றவும் முடியும்.

அறிவு படைத்த பிரஜைகளை ஒருங்கிணைத்து ஒழுங்குபடுத்த முடிந்தால், அராஜகமொன்று உருவாவதால் விளையப் போகும் விபரீதங்களை குறைக்க முடியும். ஊர்மட்டத்தில், நகர மட்டத்தில், வேலைத்தளங்களில் மக்கள் இயக்கமொன்றை உருவாக்க முடிந்தால், பின்னர் அவற்றை ஒருங்கிணைத்து பிரஜைகள் மத்திய நிலையமொன்றை உருவாக்கி மக்களை அறிவூட்டி அவர்களால் இயக்கப்படும் இயக்கமொன்றை நடத்திச் செல்ல முடிந்தால் நாட்டுக்கு ஏற்படவுள்ள அழிவை ஆக்கமாக மாற்ற முடியும். வரவிருக்கின்ற நிலைமாறு காலத்தில் நாட்டுக்கு நல்லதொரு எதிர்காலத்துக்குத் தேவையான பலமான அடிப்படையொன்றை இதனூடாக உருவாக்கிக் கொள்ள முடியும்.

அவ்வாறானதொரு இயக்கமொன்றின் பிரதான இலக்காக வன்முறை மோதல் மற்றும் பல காரணங்களினால் விகாரமடைந்துள்ள இலங்கைச் சமூகத்தின் ஆன்மாவை ஒழுங்குபடுத்தி அதனை அழகுபடுத்துவது அமைய முடியும். சமூகத்தின் மனதை இன, குல, மத பேதங்களில் இருந்து துப்புரவாக்குவதாக அமைய முடியும். பாரபட்சமின்றி இலங்கையின் சகல மக்களுக்கும் சம உரிமையும் மனிதப் பெறுமானங்களும் பெற்றுக் கொடுப்பதாக அமைய முடியும். இதனூடாக நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டை பலப்படுத்துவதாக அமைய முடியும்.

சமூகத்தில் தாக்கம் செலுத்தியுள்ள மூட நம்பிக்கைகளில் இருந்தும் அஞ்ஞான விசுவாசங்களில் இருந்தும் சமூகத்தை விடுவித்து சமூகத்தை புதியதாய்ச் சிந்திக்கின்ற, தர்க்கரீதியாகவும் நீதியாகவும் சிந்திக்கின்ற சமூகமாக மாற்றுவதாக அமைய முடியும்.

இவ்வாறு கட்டியெழுப்பப்படுகின்ற இயக்கமொன்று இலங்கைச் சமூகம் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து இனக் குழுமங்களதும் சிறந்த கலவையாக இருக்க வேண்டும். அது சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற மூன்று இனங்களையும் தாண்டிய சிறுபான்மைக் குழுமங்களையும் அனைத்து குலம், மதங்களையும் சேர்ந்த ஆண்கள், பெண்களையும் உள்ளடக்கிய ஒரு இயக்கமாக இருக்க வேண்டும். அதற்கு ஆரம்பம் முதலே தொலைநோக்குள்ள கட்டமைப்பொன்று இருக்க வேண்டும் என்பதோடு அந்தக் கட்டமைப்பு அது எதிர்நோக்கும் விமர்சனங்கள், வாதப்பிரதிவாதங்களூடாக உரமூட்டப்பட வேண்டும்.

இவ்வாறான மக்கள் இயக்கத்தின் நிர்வாக ஒழுங்கு பலமான ஜனநாயக அத்திவாரத்தில் கட்டியெழுப்பப்படுவது முக்கியமானது. அது உள்ளார்ந்த ஜனநாயக அடிப்படைகளைப் பற்றியொழுக வேண்டும். மாற்றுக் கருத்துள்ளோருக்கும் பிரிவினருக்கும் நிர்வாகத்தில் இடமிருக்க வேண்டும் என்பதோடு, அவர்களின் கருத்துக்களும் [illegible] நிர்வாகக் கொள்கை வகுக்கப்பட வேண்டும்.







இரத்தம் பாய்ச்சி தர்க்க ரீதியாக, நீதியாக பன்மைத்துவ ரீதியாக சிந்திக்கின்ற புதிய சமூகம் ஒன்றை உருவாக்க முடியும். சிதறியுள்ள இலங்கைச் சமூகத்தை ஒன்றுபடுத்த முடியும். பாதுகாக்கப்பட வேண்டிய அடையாளங்களைப் பாதுகாத்து, இலங்கையர் என்ற அடையாளத்தை முற்படுத்திப் பார்க்கும் சமூகமொன்றை உருவாக்க முடியும். அதனால் உண்டாகும் மாற்றம், நாட்டின் அரசியலமைப்பிலும், மதத்திலும் கலை மற்றும் விஞ்ஞானத்திலும் சாதகமான பாரிய தாக்கத்தைச் செலுத்த முடியும்.

அரசியல்வாதிகள் தமது விருப்பு வாக்குக்காக மொழியும் பொய்யான சீர்திருத்தங்களுக்கு மாற்றமாக நாட்டினதும் மக்களதும் பொது நலனுக்கான உண்மையான சீர்திருத்தமொன்றைக் கொண்டு வருவதற்கு இது காரணமாக அமைய முடியும். இவ்வாறானதொரு சூழல் ஆன்மீக, கலாச்சார, விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளில் உற்பத்தித் திறனை அதிகரித்து, இந்த அனைத்துத் துறைகளிலும் புத்தாக்கத்தை அதிகரிக்க ஏதுவாக அமையும். இறுதியில் தற்போது ஒரே இடத்தில் தேங்கி இருக்கின்ற நாட்டின் நிலையை சமாதானத்தையும் வளர்ச்சியையும் நோக்கி வேகமாக நகர்கின்ற நாடாக மாற்றுவதற்கு முடியுமாக இருக்கும்.

> ஊர்மட்டத்தில், நகர மட்டத் தில், வேலைத்தளங்களில் மக்கள் இயக்கமொன்றை உருவாக்க முடிந்தால், பின்னர் அவற்றை ஒருங்கிணைத்து பிரஜைகள் மத்திய நிலையமொன்றை உருவாக்கி மக்களை அறிவூட்டி அவர்களால் இயக்கப்படும் இயக்கமொன்றை நடத்திச் செல்ல முடிந்தால் நாட்டுக்கு ஏற்படவுள்ள அழிவை ஆக்கமாக மாற்ற முடியும்.

அனைத்து தீர்மானங்களும் முறையான ஜனநாயகப் பெறுமானங்களுக்கேற்பவே பெறப்பட வேண்டும். வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும். வெளிநாட்டு நிதி பெறுவதற்கு முயற்சிக்காமல் அங்கத்தவர்களது நிதி மூலமே அனைத்து செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இறுதியில் ஜனநாயகத்துக்கான சிறந்த முன்னுதாரணமாக இந்த இயக்கம் அமைய வேண்டும்.

இயக்கத்தின் அங்கத்தவர்களுக்கு மத்தியில் குல, மத, இன பேதங்கள் இருக்கக் கூடாது. பகைமைகள் இன்றி அகிம்சை பேணப்பட வேண்டும். நீதியும் நேர்மையுமேயன்றி மோசடியும் அநியாயமும் நிலவக் கூடாது. மதச்சார்புகள் இன்றி பன்மைத்துவம் பேணப்பட வேண்டும்.

இவ்வாறான மக்கள் இயக்கமொன்றை உருவாக்க முடியுமாக இருந்து, அது இலட்சக் கணக்கில் மக்களை இணைக்க முடியுமான அளவுக்கு வளர முடியுமாக இருந்தால், அதனூடாக சமூக மட்டத்திலும் அரசாங்க மட்டத்திலும் அரசு மற்றும் அரசல்லாத நிறுவன ஒழுங்குகளிலும் பாரிய தாக்கத்தை செலுத்துவதற்குக் காரணமாக அமைய முடியும். இதனால் நோய்வாய்ப்பட்டு விகாரமடைந்துள்ள இலங் கைச் சமூகத்தின் ஆன்மாவை குணப்படுத்தி அதற்கு புத்துயிர் அளிப்பதற்கு முடியுமாக இருக்கும்.


வன்முறை மோதல்கள் ஏற்படுத்தியுள்ள காயங்களை சுகமாக்க முடியும். சமூகத்துக்கு புது

சிறந்த சமூகக் கட்டமைப்பொன்றுக்கான பலமான மக்கள் இயக்கமொன்றைக் கட்டியெழுப்புவற்கான கருத்துக்கள் வெறும் கனவுகளன்றி சாத்தியமான நிஜங்களாகும். அதற்குத் தோதான சமூகச் சூழல் நாட்டில் நிலவுகிறது. நாட்டை நல்ல நிலைக்குக் கொண்டு வருவதில் அக்கறை காட்டுகின்ற கணிசமான மக்கள் நாட்டிலே காணப்படுகின்றார்கள்.

பல்வேறு வயது மட்டங்களிலும் உள்ள இவர்கள் அறிவு படைத்தவர்கள். பகுத்தறிவு படைத்தவர்கள். விரிந்த பார்வையுடன் எதனையும் நோக்குகின்ற ஆற்றல் படைத்தவர்கள். நாட்டின் கையறுநிலையில் தாக்கம் செலுத்தியுள்ள விடயங்கள் தொடர்பில் இவர்களுக்குத் தெளிவு இருக்கிறது. அத்துடன் தேசிய மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் பல்வேறு உரிமைப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கிய அனுபவம் படைத்த கணிசமான தொகையினரும் நாட்டில் இருக்கிறார்கள்.

நாட்டு நலனில் அக்கறை உள்ள மக்களையும் தலைமை தாங்கும் அனுபவமுள்ளவர்களையும் ஒன்றாக இணைத்து நாடளாவிய ரீதியில் செயற்படுகின்ற மக்கள் இயக்கமொன்றை கட்டியெழுப்ப முடிந்தால், இந்த நோக்கத்தை அடைவதற்காக அர்ப்பணத்துடன் உழைக்க முடிந்தால் இந்தக் கனவை நிஜமாக்குவது கடினமானதல்ல.

இந்தக் கருத்துக்கள் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட வேண்டியது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன இலங்கை இடதுசாரி அரசியலின் மையப்புள்ளி. இலங்கையின் தேசிய பிரச்சினை, புவி அரசியல், பொருளாதாரம், கலை போன்ற துறைகளில் ஆழ்ந்த புலமையுள்ளவர். கலாநிதி விக்ரமபாகு அவர்களுடன் மீள்பார்வை பத்திரிகை மேற்கொண்ட நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி



# தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும்

**-கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன-**

தலைவர், நவ சம சமாஜ கட்சி

- **தற்போதைய உங்கள் அரசியல் வகிபாகம் எவ்வகையிலுள்ளது?**

நவ சம சமாஜ கட்சியில் நான் அரசியல் பணிகளை முன்னெடுத்து வருகின்றேன். தற்போதைய லிபரல் ஜனநாயக அரசாங்கத்தின் அரசியலமைப்பை மாற்றி, அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதன் மூலம் தமிழ் தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கும், மனித உரிமைச் செயற்பாடுகளை வெற்றிகரமான முறையில் அமைத்துக் கொள்வதற்கு அழுத்தம் பிரயோகிப்பதுமே எமது அரசியல் வகிபாகத்தின் முக்கிய குறிக்கோளாக உள்ளது.

அத்துடன் அதற்கு எதிராக கிளர்ந்தெழும் பாசிஸ சக்திகளைத் தோற்கடிப்பதற்கு ஆலோசனை வழங்கி கூட்டமைப்புகளை உருவாக்கி முன்னே செல்லும் விடயத்தை கனகச்சிதமாக மேற்கொண்டு வருகின்றோம்.

- **நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டு வருடப் பயணம் திருப்தியளிக்கும் வகையில் உள்ளதா?**

இவ்விரண்டு வருடத்திற்குள் நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகள் மிகவும் மந்த கதியிலேயே காணப்பட்டது. ஆனாலும் தற்பொழுது அரசியலமைப்பு மாற்றம் தொடர்பில் அதிகளவிலான பணிகளை செய்துள்ளார்கள். அதில் நாமும் பங்குபற்றி நாடு முழுவதிலும் அரசியலமைப்பினால் தோற்கடிக்க முடியுமான உரிமைகள் தொடர்பில் குரல் எழுப்பி வருகின்றோம். இனவாத, மதவாத சக்திகள் அதற்கெதிராக சண்டைக்கு வருகிறார்கள். நாம் அவற்றிற்கு முகம்கொடுத்து புதிய அரசியலமைப்பை உயிர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். மறுபுறத்தில் தொழிற்சங்கங்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றியும் வருகின்றோம்.

**முதலாளித்துவ ஆட்சியாளர்கள் புரியும் திருட் டுத்தனங்கள் தொடர்பில் அவ்வளவு பெரிதாக கூக்குரலிடுவதற்கு அவசியமில்லை. ஏனென்றால் முதலாளித்துவ முறைக்குள் அது போன்ற களவுகள் இடம்பெறுகின்றன. எல்லாத் தலைவர்களும் திறைசேரியில் கைவைத்து தத்தமது அரசியல் செயற்பாடுகளுக்கு எவ்வளவாவது எடுத்துக் கொள்வதே முதலாளித்துவப் பண்பாடாகும்.**

- **நல்லாட்சி அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறதா?**

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஓரளவுக்கு நிறைவேற்றி வருகிறார்கள். அரசாங்கத்திற்குள் கடுமையான அழுத்தங்களும் உள்ளன. ஒரு சில பாசிஸ சக்திகள் அரசாங்கத்திற்குள்ளாலும் செயற்படுகின்றன. அமைச்சரவையிலும் அவ்வாறான சக்திகள் உள்ளன. இதனால் ஜனநாயகத்திற்காக வேண்டி முன் நிற்பவர்களுக்கு பலத்த சிக்கல்களுக்கு மத்தியிலேயே முன்செல்ல வேண்டியுள்ளது.

- **ரணில், மைத்திரி போன்ற இருவரினதும் சமபலத்தை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

அவர்கள் மிகவும் பழைய நண்பர்கள். மிகவும் நெருக்கமானவர்கள். அவர்கள் இருவரும் அரசியல் ரீதியாகவும் சமபலத்தை பாதுகாத்து பணியாற்ற முயற்சிப்பது விளங்குகிறது.

- **நல்லாட்சி அரசாங்கத்தில் நீங்கள் ரணிலுக்குச் சார்பான இடதுசாரி தலைவரொருவராக பிரதிபலிக்கின்றீர்கள். அதற்கான காரணம் என்ன?**

அது ஓரளவுக்குச் சரியானது. ஏனெனில் ரணில் லிபரல் பொருள் முதல்வாத தலைவர் ஒருவராக மிகவும் பிரயோசனமிக்க விடயமொன்றை செய்ய முயற்சிக்கின்றார். அதனால் அவருடன் கைகோர்த்து, உற்சாகப்படுத்தும் வகையில் அழுத்தங்களை பிரயோகித்து வருவதனால் உங்களுக்கு அவ்வாறான கருத்தொன்று ஏற்பட்டிருக்கலாம்.

யாருக்காவது அவ்வாறான கருத்தொன்று ஏற்பட்டால் அது அவ்வளவு பாரதூரமான விடயமொன்றல்ல. எங்காவது நான் முதலாளித்துவத்திற்கு அடிபணிந்து செயற்படுவதில்லை. இதற்கூடாக எமது சோசலிஸ புரட்சியை முன்கொண்டு செல்வதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது. அன்று நாம் ஜே.ஆர். ஜயவர்தனவுடன் ஒன்றிணைந்து செய்தது போன்று தற்பொழுது நாம் ரணிலுடன் இணைந்து போராட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றோம்.

- **திறைசேரி முறிகள் தொடர்பான பிரச்சினையில் மைத்திரியும் ரணிலும் இரு பக்கத்தில் நின்றார்கள். அதிகமான மக்கள் மைத்திரியின் வழியில் நின்றார்கள். இது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

முதலாளித்துவ ஆட்சியாளர்கள் புரியும் திருட்டுத்தனங்கள் தொடர்பில் அவ்வளவு பெரிதாக கூக்குரலிடுவதற்கு அவசியமில்லை. ஏனென்றால் முதலாளித்துவ முறைக்குள் அது போன்ற களவுகள் இடம்பெறுகின்றன. இதனால் அதை எனக்கு பிரச்சினையாக்க வேண்டிய அவசியமில்லை. அரசியல்மைப்பை மாற்றி, தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையை தீர்த்து முன் செல்வதே அதை விட பெரிய பிரச்சினையாக உள்ளது. எல்லாத் தலைவர்களும் திறைசேரியில் கைவைத்து தத்தமது அரசியல் செயற்பாடுகளுக்கு எவ்வளவாவது எடுத்துக் கொள்வதே முதலாளித்துவப் பண்பாடாகும். அவை எமக்கு சம்பந்தமில்லாத விடயங்கள்.

- **கடந்த அரசாங்கத்தின் ஊழல் மோசடி, கொலைச் சம்பவங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விசாரணைகள் குறித்து திருப்தியடைய முடிகிறதா?**

திருப்தியடைய முடியாது. அது தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மக்களின் வீடுகளை உடைத்து, மனிதர்களை கொன்று, அவர்களது சொத்துக்களை கைப்பற்றிச் செல்லும் வேளையில் இனவாத ரீதியில் நாட்டில் நாசகாரச் செயற்பாடுகளையும் அரங்கேற்றியுள்ளார்கள். தற்பொழுது அவை தொடர்பில் தகவல்களை தேடியுள்ளார்கள். அத்தகவல்களின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றார்கள். அத்தகவல்களை நாமும் பெற்று, உற்சாகமாக களத்தில் இறங்கிப் போராடி, தண்டனை வழங்கும் வரையில் நாம் அழுத்தங்களை கொடுக்க வேண்டும். நாம் அவ்வழியிலேயே சென்று கொண்டுள்ளோம்.

- **கடந்த அரசாங்கத்தில் இருந்த ஒரு திருடனையாவது ஏன் இன்னும் பிடித்துக்கொள்ள முடியவில்லை?**

ஏன் இல்லை. திருடர்கள் பிடிபட்டுள்ளார்கள். ஆனால் அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணையில் சிறந்த பதிலை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. முதலாளித்துவ வழக்கு விசாரணைகள் அரசியலமைப்புடன் சிக்கியுள்ளதே அதற்கான காரணம். அரசியலமைப்பில் காணப்படுகின்ற சிக்கல்களுடன் வழக்கு விசாரணையும் சிக்கியுள்ளது. இன்று அதற்கு ஒவ்வொரு முறையில் அர்த்தம் கற்பிக்க முடியும். தற்பொழுது பாருங்கள். இன்று விமல் வீரவன்சவின் திருட்டுச் செயல்கள் அம்பலமாகியுள்ளன. கோத்தாபய புரிந்துள்ள கொலைகள் தொடர்பில் எல்லோருக்கும் தெரியும். தற்பொழுது அவற்றுக்கு மக்கள் தீர்ப்பு கிடைத்துள்ளது.

- **கடந்த அரசாங்கத்தில் வாகன முறைகேடு என்பது வாழைக்குலை திருடியது போன்றதொரு செயல். ஏனெனில் அதை விட பெரிய மோசடிகள் உள்ளன. வாழைக்குலை வெட்டுபவர்களையா அரசாங்கம் பிடிக்கின்றது?**

எங்கிருந்தாவது வாழைக்குலையொன்றை களவில் வெட்டினாலும் அவன் வாழைக்குலை திருடன் தான். பல கோடிகளுக்கும் அதிகமான வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தினால் அதை வாழைக்குலை திருட்டு என்று கூற முடியாது. எந்தவொன்றும் அளவு ரீதியில் அதிகரிக்கும் போது தரத்தில் மாற்றமடைகிறது.

- **எண்ணெய் பீப்பாய்களை இந்தியாவுக்கு வழங்க திட்டமிட்டிருப்பது தொடர்பில்..**

பொருளாதார ரீதியில் நாம் மேற்கு நாடுகளிலிருந்தும் கிழக்கு நாடுகளிலிருந்தும் தூரப்படுத்தப்பட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தெற்காசிய வலயத்திற்குள் உறவுகளை பலப்படுத்திக் கொண்டு செயற்படுவது புத்திசாலித்தனமானது. அது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- **அரசாங்கம் சரத் பொன்சேகாவினை பயன்படுத்தி அடக்குமுறைகளை பிரயோகிக்குமா?**

பொன்சேகாவினால் மாத்திரம் முடியாது. அவர் உழைக்கும் மக்கள் அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து, நிறுவன ரீதியான செயற்பாட்டாளர்களையும் ஒன்றிணைத்து, இராணுவத்திலுள்ள இடதுசாரி சிந்தனை படைத்தவர்களையும் தொழிலாளர்களையும் ஒன்றிணைத்து ஒருங்கிணைந்த சக்தியை உருவாக்க நடவடிக்கை எடுத்தால் மாத்திரமே அச்செயற்பாடு அடக்குமுறையல்லாமல் இனவாத, மதவாத, பாசிஸ சக்திகளுக்கு எதிரான சக்தியாக மேலெழும். மார்ஷல் டிடோ போன்ற மக்கள் தலைவரொருவராக அவர் மாற வேண்டும்.

- **இவ்வரசாங்கத்திலும் ஒரு சில அமைச்சர்கள் மோசடிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொண்டபாடில்லை. இது குறித்து..**

அந்தந்த கட்சிகளின் தலைவர்களே அது குறித்து கவனம் செலுத்த வேண்டும். பாரதூரமான விடயங்களை புரிபவர்களாக இருந்தால் அவர்களை உடனடியாக நீக்க வேண்டும்.

- **இன்று இலங்கையில் இடதுசாரி அரசியல் முற்றுப்பெற்று வருவதாக ஒரு கருத்து முன்வைக்கப்பட்டு வருகின்றது. இது குறித்து..**

எவ்வாறு முற்றுப் பெறும்? இடதுசாரி அரசியல் முற்றுப் பெறுவதாக இருந்தால் எனக்கு இவ்வாறு கதைத்துக் கொண்டிருக்க முடியாதிருக்கும். இன்று இலங்கையில் விக்ரமபாஹுவை தெரியாமல் ஒருவரும் இருக்க முடியாது. நான் யாழ்ப்பாணத்தில் இறங்கினால் நவ சம சமாஜ கட்சியின் தலைவர் இவர் எனக் கூறி மக்கள் ஓடி வருவார்கள். பெருந்திரளான மக்கள் எம்முடன் உள்ளார்கள். எமது வளங்கள் மற்றும் அமைப்பு ரீதியான பலவீனங்களின் காரணமாகவே நாம் இப்படியுள்ளோம். இல்லாவிட்டால் நாம் மக்கள் மத்தியில் விசாலமான சக்தியாக மாறியிருப்போம்.

- **System Change ஒன்றில்லாமல் யாருக்கும் முன்னேற முடியாததொரு நிலை நாட்டில் உள்ளது. அது தொடர்பில் நீங்கள் நினைப்பது என்ன?**

System Change இல்லாமல் முன்னேற முடியாது, என்பது சரியானது. முறையை மாற்ற வேண்டுமென்றால் முதலில் நாம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். அதைச் செய்தால் எமக்கு நாடென்ற ரீதியில் முன்னேற முடியும். அதைச் செய்யாவிட்டால் முன்னேற்றம் வெகு தொலைவில் இருக்காது.




இலங்கை இனமுறுகல்களுக்குப் பேர் போன நாடு. சிங்களவர்கள் தமிழர்கள் மீது அத்துமீறியமை முப்பது ஆண்டு கால யுத்தமாக வெடித்து ஓய்ந்திருக்கிறது. தற்போது சிங்கள சமூகத்தில் சிலர் முஸ்லிம் சமூகத்தின் மீது தமது மேலாண்மையைக் காட்ட விளைந்திருக்கிறார்கள். இது மற்றுமொரு இன முறுகலுக்கு வழிகோலும் நிலைக்கு நாட்டை இட்டுச் சென்று கொண்டிருக்கிறது.

தமிழர்களின் பிரச்சினை இனப்பிரச்சினையாகவே பார்க்கப்பட்டது. நாட்டின் ஒரு பகுதியை தமது இனத்துக்கென பிரித்தெடுக்கும் முயற்சியைத் தடுக்கவே இலங்கை அரசாங்கம் அவர்களுக்கெதிராக யுத்தத்தை மேற்கொண்டது. முஸ்லிம்கள் இந்த நாட்டில் பிரிவினை கோரவில்லை. அவர்கள் முழு நாட்டையுமே இஸ்லாமியப்படுத்த முனைகிறார்கள் என்ற பிரச்சாரமே தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதனால் முஸ்லிம்களுடைய பிரச்சினை மதம் சம்பந்தப்பட்டதாகவே பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு மதமும் தமது மதம் தான் உயர்ந்தது என்பதனை நிறுவ முயற்சிப்பதனாலேயே நாட்டில் தற்போது முறுகல் நிலை தோன்றியிருப்பதாக விக்டர் ஐவன் சமீபத்தில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தோன்றுகின்ற பல கல்விமான்களும் இந்தக் கருத்தை முன்வைக்கின்றனர். தத்தமது மதத்தை உயர்த்திப் பேசுவதனை விட நாமெல்லோரும் இலங்கையர் என்ற உணர்வின் பால் ஒன்றுபடுவது தான் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வழியாக இவர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் இஸ்லாம் தான் உயர்ந்தது என்ற கருத்து மேலாதிக்கத்தை இலங்கையில் முன்வைப்பது தொடர்பில் முஸ்லிம் சமூகமும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

இந்த மேலாதிக்கச் சிந்தனையில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு முயற்சிக்க முன்னர் இலங்கையில் இஸ்லாத்துக்குள்ளால் நிலவுகின்ற குழு மேலாதிக்க உணர்வு தொடர்பிலும் இந்தக் கருத்தைப் பொருத்திப் பார்க்க வேண்டியிருக்கிறது. இலங்கையில் இஸ்லாத்துக்குள்ளால் தரீக்காக்கள், ஜமாஅத்துக்கள், இயக்கங்கள் எனப் பல்வகை அலகுகள் இயங்குகின்றன. இந்த வகையறாக்களுக்குள்ளால் பல்வேறு பெயர்களில் இயங்குகின்ற அமைப்புக்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் தமது அமைப்புத் தான் சரியானது, உயர்வானது என்ற கருத்து மேலாதிக்கத்தை போதிக்குமானால் மேலாதிக்க உணர்வினால் நாடு பிளவு பட்டு சின்னா பின்னப்படுவது போல இலங்கையில் இஸ்லாமும் சிதறிச் சின்னாபின்னமாகும்.

மத மேலாதிக்கத்தை தாண்டி நாடு என்கின்ற தேசிய உணர்வை ஊட்டி நாட்டை கட்டியெழுப்ப எடுக்கப்படும் முயற்சி போல குழு உணர்வுகளைத் தாண்டி மார்க்கம் என்கின்ற பொதுப் பெயரால் இலங்கையில் இஸ்லாத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருக்கிறது. நாட்டிலே இயங்குகின்ற பல்வேறு அமைப்புக்களும் தமது சொந்த அடையாளங்களுக்கு மேலால் இஸ்லாம் என்ற பொது அடையாளத்தை பேண முடியுமாக இருந்தால் நாட்டின் பொது நீரோட்டத்தில் இஸ்லாமும் சங்கமிக்க முடியுமாகிறது.

இலங்கையில் தற்போது நிலவும் மதவாத மோதல்கள், நாட்டில் நிலவிய மத மேலாதிக்க உணர்வுகளின் வெளிச் சக்திகள் தலையீடு செய்ததனால் உருவானவையே. இந்த அபாயம் குழு உணர்வுகளின் மேலாதிக்கத்தைப் பயன்படுத்தி இலங்கையின் இஸ்லாத்துக்குள்ளாலும் நுழையக் கூடும். அப்பொழுது பௌத்தத் தீவிரவாதம் என்ற சொற்றொடர் போன்று இஸ்லாமியத் தீவிரவாதம் என்ற கருத்தியல் மேலாண்மை நாட்டில் பரவக் கூடும்.

இலங்கையில் இஸ்லாம் குழுக்களதும் அலகுகளதும் ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்கப்படும் வரை இந்த அபாயத்துக்கான அழைப்பு தொடர்ந்து கொண்டேயிருக்கும். இந்த அபாயத்தை விளங்கிச் செயற்படாத நாடுகள் தான் வீணாக வம்பை விலைக்கு வாங்கி இன்று உலகத்துக்கான சாபக்கேடாக சித்திரிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் இது வரை இந்த அனர்த்தம் நடைபெறவில்லை என்றும் சொல்வதற்கில்லை. குழுக்களிடமும் அலகுகளிடமும் நிலவுகின்ற மேலாதிக்கப் போட்டிகளை காரணமாக வைத்து இலங்கையில் ஊடுருவி இலங்கையில் இஸ்லாத்தைக் கருவறுப்பதற்கான முயற்சிகளை நாட்டிலே ஆங்காங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளினூடாக அவதானிக்க முடிகிறது.

இனி இலங்கைக்கு இஸ்லாம் பொருத்தமில்லை என்பதனை இந்தக் குழுக்களையும் அலகுகளையும் வைத்தே நாடு நிறுவப் போகிறது. எப்படி இலங்கையர் என்ற பொது அடையாளத்தை இழந்து நாட்டைக் காக்க முடியாதோ, அதே போல இந்தக் குழுக்களும் அலகுகளும் இஸ்லாம் என்ற பொது அடையாளத்தில் ஒன்றுபட முடியாவிட்டால், இலங்கையில் இருந்து இஸ்லாத்தைத் துடைத்தெறிவதற்கு உதவி செய்த நன்மையை இவர்கள் நாட்டுக்குப் பெற்றுத் தரப் போகிறார்கள் என்பது வெள்ளிடைமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபிய அகதிகள் மத்திய தரைக் கடலில் மூழ்கியதில் 34 பேர் மரணம்




லிபியாவில் இடம்பெற்று வரும் மோதல்களைத் தொடர்ந்து இத்தாலிக்கு இடம்பெயர்ந்து வரும் லிபிய அகதிகளின் படகு மத்திய தரைக் கடலில் மூழ்கும் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. சமீபத்தில் 200 பேரை ஏற்றிச் சென்ற படகொன்று இத்தாலி யில் கடல் பகுதிக்கு சமீபமாக மூழ்கியதில் 34 அகதிகள் உயிரிழந்தனர். அவர்களுள் 20 பேர் 10 வயதுக்குக் குறைவான குழந்தைகள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டில் மாத்திரம் 1300 லிபியர்கள் இவ்வாறு கடல் பயணங்களின்போது உயிரிழந்துள்ளனர். ஆபிரிக்காவின் ஏனைய நாடுகளிலிருந்தும் இத்தாலிக்குக் குடிபெயரும் அகதிகளின் எண் ணிக்கை அதிகரித்துள்ளதாக இத்தாலியின் கடற்படை அதிகாரி கொசிமோ நிகாஸ்ட்ரோ ரொய்டரிடம் தெரிவித்தார்.

# சர்வதேசப் பார்வை

## கொன்ஸ்தாந்து நோபிளை வெற்றி கொண்டு 564 ஆண்டுகள் பூர்த்தி



துருக்கியர்கள் கொன்ஸ்தாந்து நோபில் நகரை வெற்றி கொண்டு 564 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு ஸ்தன் பூல் நகரில் மாபெரும் விழாக்களை நடத்தியுள்ளனர். சுல்தான் 2 ஆம் முஹம்மத் என்பவரால் கி.பி. 1453 ஆம் ஆண்டு மே 29 இல் கொன்ஸ்தாந்து நோபில் நகரம் வெற்றிகொள்ளப்பட்டது.

1000 ஆண்டுகளுக்கு அதிகமாக கிழக்கு ரோமப் பேரரசை ஆண்ட பைசாந்தியர்கள் தமது தலைநகரமாக கொன்ஸ்தாந்து நோபில் நகரை கருதி வந்தனர். கொன்ஸ்டன்டைன் எனப்படும் ரோம மன்னனால் இந்நகரம் உருவாக்கப்பட்டது.

துருக்கியர்கள் அதனை வெற்றிகொண்டதன் பின்னர் ஸ்தன் பூல் எனப் பெயரிடப்பட்டது. ஸ்தன்பூல் என்றால் இஸ்லாம் பரவிய நகரம் என்பது கருத்தாகும். பிற்காலத்தில் உஸ்மானியப் பேரரசின் தலைநகராக ஸ்தன்பூல் மாற்றியமைக்கப்பட்டது.

## கட்டாருக்கு எதிராக அறபு எமிரேட்ஸும் சவூதியும் செயல்படுவதேன்?



கடந்த சில வாரங்களாக ரியாத் மற்றும் அபுதாபி ஆகியவற்றுக்கும் கட்டார் அரசாங் கத்திற்கும் இடையில் பதட்ட நிலை நீடிப்பதாக அல் அறபிய்யா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. கட்டார் அரசாங்கத்திற்கு எதிராக சவூதி அறேபியா, அறபு எமிரேட்ஸ் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் அணி சேர்ந்துள்ளதாக சவூதிக்குச் சொந்தமான அறபிய்யா தொலைக்காட்சி கருத்து வெளியிட்டுள்ளது.

கட்டார் அமீருக்கு எதிராக இம்மூன்று நாடுகளின் தலைவர்களால் வெளியிடப் பட்ட கருத்துக்களை அல் அறபிய்யா ஒளிபரப்பியது. அதேவேளை, எகிப்தின் செய்மதி அலைவரிசையொ ன்றும் இது குறித்த செய்திகளை வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவுடனான கட்டாரின் உறவுகள் வீழ்ச்சியடைந்துள்ள நிலையிலேயே இம்மூன்று நாடுகளும் கட்டா ருக்கு எதிரான நிலைப்பாடுகளை எடுத்துள்ளன. இதேவேளை, பஹ்ரைன் கட்டாருக்கு எதிரான தம்து நிலைப்பாட்டை மறுபரி சீலனை செய்து வருகின்றது.

மத்திய கிழக்கு அறபு நாடுகளுள் கட்டார் மாத்திரமே ஓரளவு இஸ்லாமிய உலகின் நிலை குறித்து அக்கறையோடு செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ட்ரம்ப் உருவாக்க விளையும் ஈரானுக்கு எதிரான அறபுக் கூட்டணியில் கட்டார் இணைவதற்கு விருப்பம் தெரிவிக்காமையே இந்த முரண்பாட்டுக்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## சிரியாவில் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவது பிரான்ஸைத் தலையிடத் தூண்டும்




சிரிய அரசாங்கம் இதற்கு மேலும் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி னால் பிரான்ஸின் பதிலடியை எதிர் பார்க்க நேரிடும் என்று புதிய ஜனாதிபதி இமானுவல் மெக்ரோன் எச்சரித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட் டினை சந்தித்துக் கலந்துரையாடிய பின்பே மெக்ரோன் இவ்வாறு தெரி வித்தார். சிரியாவில் செயல்படும் பயங் கரவாதக் குழுக்களை கூண்டோடு அழிப் பதற்கு ரஷ்யாவும் பிரான்ஸும் இணை ந்து செயல்படும் என்று ஊடகவியலாளர் சந்திப்பின்போது மெக்ரோன் குறிப்பிட் டார்.

ரஷ்யாவின் புட்டின் சிரிய அரசாங் கத்திற்கு ஆதரவளிக்கும் நிலையிலேயே மெக்ரோன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாதத்திற்கு எதிரான [illegible] நமது இரண்டு நாடுகளும் இணைந்து செயல்பட வேண்டும் என்று தெரிவித்த மெக்ரோன், சிரியா குறித்த பிரான்ஸின் கொள்கை மிகச் சுதந்திரமானது எனவும் குறிப்பிட்டார். சிரியா தொடர்பிலான அமெரிக்காவின் கொள்கையோடு தமக்கு உடன்பாடில்லை எனவும் மெக்ரோன் அங்கு குறிப்பிட்டார்.

## எகிப்தில் அரச சார்பற்ற நிறுவனங்களை நசுக்கும் வகையில் சட்டம்




எகிப்தில் இயங்கி வரும் அரச சார் பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை முடக்கும் வகையில் புதிய சட்ட மொன்றை எகிப்திய அரசு நிறைவேற்றி யுள்ளது. ஜனாதிபதி ஸீஸியை விமர்சிக் கும் அல்லது அவரது அரசாங்கத்தை விமர்சிக்கும் அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களையும் அடக்குவதே இதன் குறிக்கோள் என்று அந்நாட்டில் செயல் படும் மனித உரிமை நிறுவனங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

எமது செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கவே இச்சட்டம் இயற்றப் பட்டுள்ளது. குறிப்பாக, எமக்கான நிதி ஆதரவுகளைத் தடுப்பது இதன் நோக்கம் என்று அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அபிவிருத்தி மற்றும் சமூகப் பணிகளில் அரச சார்பற்ற நிறுவனங்களின் மட்டுப் பாடுகளை இச்சட்டம் வரையறுத்துள்ளது. மீறுகின்றவர்களுக்கு ஐந்தாண்டுக்கு மேற் பட்ட சிறைத்தண்டனை வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

எகிப்தில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களில் 46000 நிறுவனங்கள் கலைக்கப்பட வேண்டும் என நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அறபு வசந்தத்திற்குப் பின்னர் ஸீஸி அரசாங்கம் கொண்டு வரும் மிகக் கடுமையான சட்டம் இதுவென்று கூறப்படுகின்றது.

## அல் அக்ஸா பள்ளிவாயலின் சுரங்கத்தில் கூடும் இஸ்ரேல் அமைச்சரவை



கடந்த காலங்களில் தொல் பொரு ளியல் ஆய்வு எனும் பெயரில் அல் அக்ஸா பள்ளிவாயலின் ஒரு பகுதியை இஸ்ரேலிய அரசாங்கம் தோண்டி சே தப்படுத்தியது. அங்கு சுரங்கம் போன்று அமைத்துள்ள பகுதியில் கடந்த வாரம் இஸ்ரேலிய அமைச்சரவை ஒன்றுகூடி யது. இஸ்ரேலின் அமைச்சரவைக் கூட் டத்தை அங்கு நடத்தியுள்ளது. இஸ்ரேல் பிரதமர் நெடன் யாஹு தலைமையில் ஜெரூ சலத்தை விடுவித்ததை நினைவு கூரும் முகமாக கூட்டத்தை அங்கு நடத் தியதாக நெடன் யாஹு தெரிவித்துள்ளார்.

மஸ்ஜிதுல் அக்ஸாவின் மேற்குச் சுவர் பகுதியில் அமைந்துள்ள புராக் சுவரின் கீழேயே இக்கூட்டம் நடைபெற்றுள்ளது. 1967 யுத்தத்தில் காஸா, மேற்குக்கரை, கிழக்கு ஜெரூசலம் என்பவற்றைக் கைப்பற்றிய இஸ்ரேல் அதன் 50 ஆண்டு நிறைவைக் கொண்டாடி வருகின்றது.

ஜெரூசலத்தை இஸ்ரேலின் தலைநக ராக அபிவிருத்தி செய்வதற்கு வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் நெடன் யாஹு தெரிவித்தார்.

## லிபிய நெருக்கடி குறித்து ஆராய அல்ஜீரியா, தூனீசியா இணக்கம்



லிபியாவின் உள்ளக நிலைமைகள் குறித்து ஆராய்வதற்கு அல்ஜீரியா மற்றும் தூனீசிய வெளிவிவகார அமைச்சர்கள் ஒன்றுகூடவுள்ளனர் என அல்ஜீரிய வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் அப்துல் அஸீஸ் பின் அலி ஷரீப் தெரிவித்துள்ளார். இந்நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டம் ஜூன் 06 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

லிபியாவின் அரசியல் மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த தற்போதைய நிலை மைகளை இக்கூட்டம் ஆராயவுள்ளது. 2011 இலிருந்து லிபியாவில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் மிகச் சிக்கலான உள்நாட்டு நெருக்கடியாக மாறியுள்ளது.

பல்வேறு தரப்புகளுக்கிடையில் நடைபெறும் ஆயுத மோதலால் நாட்டின் ஒரு பகுதி மக்கள் அகதிகளாய் வெளியேறி வருகின்றனர். இரண்டு அரசாங்கங்கள் செயல்படுவதனால் நிருவாகக் கட்டமைப்பு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வெளிநாட்டு ஆயுதக் குழுக்களும் லிபியாவில் ஊடுருவியுள்ளன. கேர்ணல் கடாபி பதவி விலக்கப்பட்டதை அடுத்து லிபியாவின் உள்ளக நிலைமைகள் ஆயுதப் போராக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிலிப்பைன்ஸில் கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படைகளுக்கும் இடையில் தொடர்ந்தும் மோதல்

பிலிப்பைன்ஸில் அரச படைக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் இடையிலான மோதல் தீவிரமடைந்து வரும் நிலையில், வெளிநாட்டு ஆயுதக் குழுக்களே நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ஜெனரல் எடுவாடோ தெரிவித்துள்ளார். ஐசிஸ் பயங்கரவாதிகள் தெற்கு நகரில் அரச படைகளை எதிர்த்துப் போர் செய்வதாக அவர் தெரிவித்தார்.

கிறிஸ்தவ நாடான பிலிப்பைன்ஸில் பல தசாப்தங்களாக சுதந்திரத்திற்காகப் போராடி வந்த ஆயுத இயக்கம் அமைதி யடைந்துள்ள நிலையில், நாட்டில் ஸ்திரப்பாட்டைக் குலைக்கும் சில ஆயுதக் குழுக்கள் அங்கு ஊடுருவியுள்ளதாக ஜெனரல் மேலும் தெரிவித்துள்ளார்.

எசோஸியேட்ட் பிரஸ் ஊடகத்திற்கு செவ்வியளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ரமழானின் தொடக்கத்திலிருந்து [illegible] நகரங்களில் பரவி வருகின்றன. பிலிப்பைன்ஸில் மின்டானோ, யால போன்ற [illegible] நிகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சவூதிக்கும் இஸ்ரேலுக்கும் ட்ரம்பின் விஜயம்

• லதீப் பாரூக்

சவூதி அரேபியாவுக்கான ட்ரம்பின் விஜயம் ஊழல் மிக்க பழங்குடி ஆட்சியாளர்களை விரட்டி, அடிபணிய வைத்து, அமெரிக்க ஆயுத உற்பத்தி நிறுவனங்களுக்கான வர்த்தகக் கட்டளைகளையும் அமெரிக்கக் கூட்டாண்மை நிறுவனங்களுக்கான ஒப்பந்தங்களையும் பெற்றுக் கொள்வதற்காகவே. வளைகுடா ஷெய்க்மார்கள் இஸ்ரேலுடனான தமது ரகிசய உறவுகளைப் புதுப்பிக்க வழியமைப்பதற்காக சவூதி அரேபியா தலைமையிலான வளைகுடா நாடுகளையும் எகிப்து, ஜோர்தான் போன்ற கைக்கூலி அரசுகளையும் உள்ளடக்கிய ஒரு நேட்டோ அணியை உருவாக்குவதற்காக இந்த விஜயம் இடம்பெற்றது.

இவ்வாறான ஓர் அணியை உருவாக்கி அதன் மூலம் அறபு-ஈரான் யுத்தமொன்றைத் தூண்டிவிட்டு, இன்னும் பல தசாப்தங்களுக்கு இந்தப் பிராந்தியத்தை அழிவுக்குள் தள்ளுவதே ட்ரம்ப் விஜயத்தின் நோக்கம்.

ட்ரம்பின் விஜயத்தின்போது பல வர்த்தக, பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அதில் 100 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுத ஒப்பந்தமும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் செய்யப்பட்டுள்ளது. 350 பில்லியன் டொலர் பெறுமதியான வணிக உடன்படிக்கையொன்றும் செய்துகொள்ளப்பட்டுள்ளது. அரம்கோ நிறுவனமும் 50 பில்லியன் டொலர் பெறுமதியான சக்தி வள உடன்படிக்கையொன்றையும் செய்துள்ளது. இவை தவிர, 13 அமெரிக்க நிறுவனங்களுடன் 280 பில்லியன் டொலர் பெறுமதியான வேறு பல உடன்படிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.

இந்தப் பணம் யாருடையது? சவூதியர்களின் பணமல்லவா? சவூதியிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சுமார் 800 பில்லியன் டொலர்களை சவூதி ஆளும் குடும்பம் அமெரிக்காவில் முதலீடு செய்துள்ளது. இவை தமக்கான அமெரிக்கப் பாதுகாப்புக்காக சவூதி அரசு அமெரிக்காவுக்குச் செலுத்தியுள்ள தண்டப் பணம் அல்லவா?

சவூதி அரேபியா முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. அதன் சனத்தொகையில் 12 சதவீதம் வேலையில்லாப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. இவ்வாறான ஒரு சூழலில் இப்படியொரு பெரும் தொகையை இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக வெளிப்படையாகச் செயல்படும் சக்திகள் மீது எவ்வாறு முதலீடு செய்கின்றது? இஸ்லாத்தைப் பற்றியோ முஸ்லிம் உலகைப் பற்றியோ சவூதி ஆளும் வர்க்கத்திற்கு கொஞ்சம் கூட கவலை கிடையாது. தமது குடும்பத்தை, த்மது அதிகாரத்தை, தமது செல்வத்தைக் காப்பாற்றிக் கொள்வதில் மட்டுமே அவர்களுக்கு அக்கறை.

முதல் உலகப் போருக்குப் பின்னர் சியோனிஸம் மற்றும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் பதவியில் அமர்த்தப்பட்டவர்கள்தான் சவூதி அரச குடும்பத்தினர். இவர்கள் இன்று முஸ்லிம் நாடுகள் மீது குண்டுமழை பொழிந்து, அந்நாடுகளை அழித்து வரும் அமெரிக்க-இஸ்ரேல் கூட்டணியின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக ஆகி விட்டனர்.

மத்திய கிழக்கில், ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான், யெமன் என அழிக்கப்பட்டு வரும் முஸ்லிம் நாடுகளினது அழிவிலும் படுகொலைகளிலும் சவூதிக்கும் பங்களிப்பு உண்டு. இந்த நாடுகளில் வறுமையால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களின் இரத்தக் கறை சவூதி அரேபிய ஆட்சி பீடத்தில் படிந்துள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிரான இந்த அமெரிக்க-இஸ்ரேல் யுத்தங்கள் எல்லாவற்றுக்கும் சவூதி அரேபியா நிதியுதவி வழங்கியுள்ளது. வளைகுடா பிராந்தியத்திற்கு தனிப்பட்ட ஒரு நேட்டோ அணியை உருவாக்கி, அறபு நேட்டோ என அதற்குப் பெயரிட்டு அதன் பிரதான பங்குதாரராக வளைகுடா ஷெய்க்மார்களை மாற்றுவதற்கான ஒரு முன்யோசனையாகவே இன்றைய முயற்சிகள் அமைந்துள்ளன.

இந்த சதித் திட்டத்தை அரங்கேற்ற உலகை ஏமாற்றும் வகையில் சவூதி ஆட்சியாளர்கள் ட்ரம்பின் வருகையை சர்வதேச மயப்படுத்தியுள்ளனர். அதற்கென அறபு-இஸ்லாமிய அமெரிக்க உச்சி மாநாடொன்றையும் சவூதி ஏற்பாடு செய்தது. பல நாடுகளிலிருந்தும் முஸ்லிம் தலைவர்கள் இதற்கென வரவழைக்கப்பட்டனர். வளைகுடா ஒத்துழைப்புக் கவுன்சில், அமெரிக்க உச்சி மாநாடு, அறபு இஸ்லாமிய அமெரிக்க உச்சி மாநாடு, தீவிரவாதக் கருத்துக்களை முறியடிப்பதற்கான உலகளாவிய நிலைய அங்குரார்ப்பணம் என்பன ட்ரம்பின் வருகையோடு ஏற்பாடு செய்யப்பட்டன. வர்த்தக, கலாசார, புலனாய்வு, விளை யாட்டு என பல்வகை நிகழ்ச்சிகளும் இவற்றோடு மேற்கொள்ளப்பட்டன.

தனது சொந்த மக்களுக்காக எதையும் செய்ய முனையாத சவூதி அரேபியா, அமெரிக்காவில் மாத்திரம் பல பில்லியன் டொலர்களை ஏன் கொட்டுகின்றது? இறைவனின் பெயரால் இது கூடுமா என்பதுதான் சவூதி மக்கள் ஆட்சியாளர்களைப் பார்த்து எழுப்பும் கேள்வி. சவூதி அரேபியாவில் 12 வீதமானோருக்குத் தொழில் இல்லை. இது உத்தியோகபூர்வ தகவல் மட்டுமே. வேலையற்றோர் வீதம் இதை விட அதிகமாக இருக்கலாம். வைத்தியசாலைகளில் போதிய வைத்தியர்கள் இல்லை. அரச ஊழியர்களின் சம்பளம், இராணுவத்தின் சம்பளம், பொது ஓய்வூதிய நிதியம் என்பவற்றுக்குப் பொறுப்பான நாட்டின் மிகப் பெரிய கஜானா காலியாகிக் கொண்டு வருவதாக கடந்த வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நெருக்குதல்கள் காரணமாக சவூதி ஆட்சியாளர்களும் ஏனைய வளைகுடா ஷெய்க்மார்களும் இஸ்ரேலுடன் நெருங்கிய, ரகசிய உறவுகளைப் பேணி வருகின்றனர். இந்த ரகசிய உறவுகளைப் பகிரங்கமாக்கி, இஸ்ரேலுடன் சுமுகமான நிலையைக் கொண்டு வர முன்னொருபோதும் இல்லாத வகையில் முயற்சிக்கின்றனர். இதற்கான திட்டம் அவர்களின் கையில் உள்ளது. ஆனால், இது குறித்து எழுதவோ பேசவோ விடாமல் அறபு ஊடகங்களின் குரல்கள் நசுக்கப்பட்டுள்ளன. சவூதி அரேபியா இதுவரை உத்தியோகபூர்வமாக இது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. ஏனைய அறபு நாடுகளும் மௌனம் காக்கின்றன.

பத்தி எழுத்தாளர் டேவிட் ஹர்ஸ் குறிப்பிடுவதுபோன்று, சவூதி இளவரசர் ஒருவர் மன்னராக வருவதற்கு மூன்று முக்கிய வளங்கள் தேவை. அமெரிக்கா, அரச குடும்பம், சவூதி மக்கள் என்பனவே அவை. இதில் சவூதி மக்கள் இறுதியானதுதான்.

இன்று ட்ரம்பும் ஸல்மானும் பலஸ்தீன் விடயத்தை சௌகரியமாக மறந்து விட்டனர். மத்திய கிழக்கில் கடந்த 75 வருடமாக கொழுந்து விட்டெரியும் பிரச்சினை இதுதான். இந்தப் பிராந்தியம் முன்பை விட பேரழிவு ஒன்றை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதுதான் யதார்த்தம். அமெரிக்க-இஸ்ரேல் அடிவருடிகளால் ஆளப்பட்டு வரும் மத்திய கிழக்கின் வெட்கக் கேடான யதார்த்த நிலை இதுதான்.



# மோடியின் “மாட்டு” அரசியல் : காவிமயமாகி வரும் இந்தியா

• றவூப் ஸெய்ன்

இந்தியாவில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பின்னர் முஸ்லிம்கள் மீதான அடக்குமுறைகள் நிறுவனமயப்பட்டன. முஸ்லிம்களின் பொருளாதாரத்தை, கல்வியை, கலாசார சுதந்திரத்தை என ஒவ்வொன்றாக குறிவைத்து அழிக்கும் இந்துத்துவ தாண்டவம் அரங்கேறியது. அனைத்துமே திரைமறைவில் திட்ட மிடப்பட்டவை. சர்வதேச இஸ்லாமிய எதிர்ப்புப் போரின் அங்கமாக அமுல் நடத்தப்படுபவை.

பா.ஜ.க. ஆட்சியிலிருக்கும் ஒவ்வொரு மாநிலத்திலும் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்ட மாட்டிறைச்சி தடைச் சட்டம் தற்போது தேசிய சட்டமாக மாறியுள்ளது. இறைச்சிக்காகப் பசுக்களை வாங்குவது, விற்பது கூட சட்டவிரோதமானது என மத்தியரசு அறிவித்துள்ளது.

கோடிக்கணக்கான முஸ்லிம்கள் மற்றும் தலித் மக்களின் வயிற்றில் அடிக்கும் இந்தக் கைங்கரியத்தில் மோடி அரசு இறங்கியமை ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. ஆனால், இவ்வளவு அவசரமாக மத்திய அரசு இந்த அறிவிப்பை விடுக்கும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. கடந்த மாதம் முஸ்லிம்கள் மிகச் செறிவாக வாழும் உத்தர் பிரதேசத்தில் இறைச்சிக்காக காளைகளை அறுப்பது தடைசெய்யப்பட்டது. பசுக்களை இறைச்சிக்காக அறுப்பது 1955 இலேயே தடைசெய்யப்பட்டது. காளைகளை அறுப்பதற்கு இருந்த அனுமதியும் கடந்த மாதம் நீக்கப்பட்டது.

உத்தர் பிரதேசத்தில் மீருத் நகரில் பிரபலமானது குத்ரி பஸார். அங்கே காளை இறைச்சியை விற்பனை செய்யும் நூற்றுக்கணக்கான நிலையங்கள் இருந்தன. இப்போது அவையெல்லாம் இழுத்து மூடப்பட்டுள்ளன. டில்லியிலிருந்து 70 கி.மீ. தொலைவிலுள்ள மீருத் ஓய்ந்து கிடக்கின்றது. இலட்சக்கணக்கான முஸ்லிம் வியாபாரிகள் நடுத்தெருவில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

''நாம் காய்கறி உண்பவர்கள். இங்கு யாரும் இறைச்சி உண்ணக் கூடாது'' எனக் கூறிக் கொண்டே புன்னகைக்கிறார் ஒரு இந்துத்துவ தீவிரவாதி. இத்தனைக்கும் இந்தியாவில் 70 வீதமான மக்கள் இறைச்சியை உண்கின்றனர். இறைச்சிக் கடைகளுக்கு காளைகளை விநியோகம் செய்யும் மக்கள் தலித்கள். மத்திய அரசின் அறிவிப்பினால் அவர்களும் உறைந்து போயுள்ளனர்.

கால்நடைச் சந்தைகளில் பசு, காளை, ஒட்டகங்களை இறைச்சிக்காக விற்பனை செய்வதும் வாங்குவதும் தடை என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனால் கால்நடை வணிகத்தில் ஈடுபட்டிருந்த மில்லியன் கணக்கான தலித்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 130 கோடி மக்களைக் கொண்டுள்ள இந்தியாவில் சுமார் 80 கோடி மக்கள் இறைச்சி உண்ணும் வழக்கம் கொண்டவர்கள். பா.ஜ.க. அரசின் புதிய சட்டம் முஸ்லிம்களைத்தான் இலக்கு வைக்கின்றது.

லக்னோ பல்கலைக்கழகத்தின் அரசியல் துறை பேராசிரியர் ரமேஷ் டிக்சித் அல் ஜஸீராவுக்கு வழங்கிய நேர்காணலில், ''இந்தியாவில் இறைச்சி விற்பனை மிகப் பெரிய வணிகமாகும். அதில் ஈடுபடுகின்றவர்கள் முஸ்லிம்கள். மதத்தின் பெயரால் மில்லியன் கணக்கான முஸ்லிம்களை தொழிலற்றவர்களாய் மாற்றுவதே மோடி அரசின் குறிக்கோள்'' என்கிறார் அவர்.

சந்தைகளில் விற்கப்படும் கால்நடைகள் குறித்து உச்ச நீதிமன்றம் ஏற்கனவே சில வழிகாட்டல்களை வழங்கியிருந்தது. அதன் அடிப்படையில் கால்நடை விற் பனைக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. நாடு முழுவதும் கால்நடைச் சந்தைகளில் காளைகளை இறைச்சிக்காகக் கொல்வதற்கு விற்கக் கூடாது. விவசாய நிலங்கள் வைத்திருக்கும் விவசாயிகள் மட்டுமே சந்தைகளில் கால்நடைகளை விற்க முடியும். விவசாயப் பயன்பாட்டுக்கு மட்டும்தான் விற்கவும் வாங்கவும் முடியும். பசு, காளை, எருமை, கன்றுக்குட்டி, கறவை மாடுகள், ஒட்டகம் உட்பட அனைத்துக் கால்நடை விற்பனைக்கும் இந்தக் கட்டுப்பாடு பொருந்தும். இது மத்திய அரசு விதித்துள்ள புதிய சட்டம்.

இந்தக் கட்டுப்பாடுகள் இலட்சக் கணக்கான ஏழை விவசாயிகளைப் பாதிப்பதோடு, நாட்டின் இறைச்சி தொழிற் துறையை முற்றாகவே ஸ்தம்பிக்கச் செய்துவிடும். ஏற்கனவே தலித்கள் மற்றும் முஸ்லிம் வியாபாரிகள் புனித பசுக் காவலர்களால் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர். இந்நிலையில் கால்நடை கட்டுப்பாட்டுச் சட்டம் [illegible]
என்று [illegible]

உத்தர் பிரதேசத்தில் கொண்டு வரப்பட்ட காளை அறுப்புத் தடைச் சட்டம் தேசிய சட்டமாக மாற்றப்பட்டுள்ளமை கருத்தியல் அடிப்படையில் மதச்சார்பற்ற இந்தியாவின் அரசிலமைப்புக்கு முரணானதாகும். பா.ஜ.க. அதிகாரத்திலுள்ள மாநிலங்களில் இதன் உடனடி விளைவு இந்து-முஸ்லிம் கலவரங்களை உருவாக்குவதாகும். மாட்டிறைச்சித் தொழிலோடு தொடர்பான முஸ்லிம்கள் பசுப் பாதுகாவலர்களோடு ஏற்கனவே முறுகல் நிலையில் உள்ளனர். புதிய சட்டம் முஸ்லிம்களைக் கடுப்பேற்றி வைக்கின்றது.

உத்தர் பிரதேசத்தின் மீருத் இரண்டு மாதங்களாக கனன்றுகொண்டிருக்கிறது. பா.ஜ.க. எதிர்பார்ப்பதும் இதையே. இந்தியாவின் பெரும்பான்மை இந்துக்களின் வாக்குகளைத் தக்கவைப்பதற்கு மதம் மிக மோசமாகக் கையாளப்படுகின்றது என்கிறார் ரமேஷ் டிக்சித்.

அரசின் இத்தடைச் சட்டம் இந்தியாவின் பொருளாதாரத்திற்கும் விழுந்த பேரடியாகும். பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மூன்றே மூன்று மாநிலத் தலைவர்கள் மாத்திரம் இத்தடையை ஏற்க முடியாது என்று தெரிவித்துள்ளனர். கேரளா, கர்நாடகா, புதுச் சேரி மாநிலங்களின் முதல்வர்கள் இச்சட்டம் திரும்பிப் பெற வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

''இறைச்சி தான் பல' இலட்ச ஏழை மக்களுக்கு புரதத்தைப் பெறுவதற்கான ஒரே வழியாக இருக்கிறது. இது போன்ற ஒரு தடைச் சட்டம் ரமழானில் அறிவிக்கப்படுவது குறிப்பிட்ட சிறுபான்மையினருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கையாகவே இருக்கும். பல்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களும் இறைச்சியை உட்கொள்கின்றனர். சட்டம் நடைமுறைக்கு வரும் பட்சத்தில் புரதச் சத்து கிடைக்கப் பெறுவதிலிருந்து மக்கள் தடுக்கப்படுவர். தோல் தொழிற்துறையையும் இது பாதிக்கும். நம் நாட்டில் 25 இலட்சம் பேர் தோல் தொழிற்சாலையை நம்பி வாழ்கின்றனர். எனவே, இந்தத் தடை அறிவிப்பை திரும்பப் பெற வேண்டும்'' என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

பசுவை புனிதமாகக் கட்டமைப்பதும் இறைச்சிக்குத் தடை விதிப்பதும் அரசியல் உள்நோக்கம் கொண்ட இந்துத்துவத்தின் மோசமான முகமாகும். பிரதான இந்துக் கடவுளர்கள் புலித் தோலில் அமர்ந்திருக்கின்றனர். அவர்களில் சிலர் மாட்டிறைச்சி உண்டதாகப் புராணங்களில் வருகின்றது. உண்மையான இந்து மதத்திற்கும் இறைச்சி உண்ணலுக்கும் இடையில் எந்தத் தொடர்புமில்லை. அதற்கு இந்து மதப் புராணங்களும் இதிகாசங்களுமே சாட்சி.

அது அப்படியிருக்க, இந்தியாவை காவி மயமாக்கும் கருவியாக மோடி மாட்டு அரசியலைக் கையில் எடுப்பது இந்தியாவுக்கு மட்டுமன்றி, முழுப் பிராந்தியத்திற்கும் ஆபத்தானது ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இனவாதிகளால் தீக்கிரைக்கயாக்கப்பட்ட முஸ்லிம்களின் ஒரு சில வர்த்தக நிலையங்கள்

# அதிகரிக்கும் இனவாத செயற்பாடுகளும் பக்குவமடையும் முஸ்லிம் அரசியலும்



• மிப்றாஷ் முஸ்தபா

இந்த நாட்டில் மீண்டுமொரு இனக் கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற முனைப்போடு பௌத்த இனவாதிகள் அதீத ஆர்வம் காட்டி வருகின்றனர். பொறுமையோடும் நிதானத்தோடும் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம்களை ஏதாவது ஒரு வழியில் பொறுமையிழக்கச் செய்து, அவர்களை ஆத்திரமூட்டி, சிங்கள-முஸ்லிம் இனக் கலவரமொன்றினூடாக எழில் மிக்க இத்தேசத்தை இரத்த ஆறாய் மாற்றப் பார்க்கின்றனர்.

இன்று தமது வர்த்தக நிலையங்களும் பள்ளிவாசல்களும் தாக்கப்படுமோ என்ற அச்சத்தோடுதான் ஒவ்வொரு இரவையும் முஸ்லிம்கள் கழிக்க வேண்டியிருக்கிறது. கடந்த அரசாங்கக் காலத்தில் அரச அனுசரணையோடு இனவாதிகள் சுதந்திரமாக உலா வந்தார்கள் என்றால், சிறுபான்மை மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்திலும் அதே நிலைமை நீடிக்கின்றமை சிறு பான்மை மக்களின் சுதந்திரத்தையும் இருப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டில் பல வகையான மொழிகளும் கலாச்சாரங்களும் பழக்க வழக்கங்களும் இயல்பாகவே காணப்படும் என்ற யதார்த்தத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அந்தவகையில், சிங்கள புது வருடக் கொண்டாட்டத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் முஸ்லிம்களுக்கெதிராக இந்த நாட்டில் இடம்பெற்று வருகின்ற அசம்பாவிதங்கள் பல்வேறு கேள்விகளையும் சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளது.

இறுதி மூன்று வாரங்களுக்குள் முஸ்லிம்களுக்கெதிராக 16 தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 3 பள்ளிவாயல்களும் 9 வர்த்தக நிலையங்களும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. இவற்றினால் பல மில்லியன் ரூபாய்கள் வரை நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது.

மே மாதம் 08 ஆம் திகதி சொந்த நாட்டில் வாழ முடியாமல் தமது உயிர்களை கையில் பிடித்துக் கொண்டு படகு மூலமாக இலங்கைக்கு தப்பி வந்த மியன்மார் அகதிகளை மீண்டும் அவர்களது நாட்டுக்குத் திருப்பியனுப்ப வேண்டும் எனவும் அகதிகள் என்ற போர்வையில் முஸ்லிம்கள் இலங்கையை ஆக்கிரமிக்க முயற்சி செய்வதாகவும் மனிதாபிமானம் அற்ற முறையில் கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பொதுபல சேனா அமைப்பு குற்றம் சாட்டியிருந்தது.

அதேபோன்று மே மாதம் 10 ஆம் திகதி முழுக்க முழுக்க முஸ்லிம்கள் வாழ்கின்ற இறக்காமம் மாயக்கல்லி மலையில் வெசாக் தினத்தை முன்னிட்டு பொலிஸ் பாதுகாப்புடன் விஷேட பௌத்த வழிபாடுகள் இடம்பெற்றன. தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான குறித்த இடத்துக்கு யாரும் நுழையக் கூடாது என்ற நீதிமன்ற தடை உத்தரவையும் மீறியே இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

மே மாதம் 14 ஆம் திகதி பொலன்னறுவை ஒனேகம பகுதிக்கு விஜயம் செய்த ஞானசார தலைமையிலான இனவாதக் கும்பல் அப்பகுதியில் வசிக்கும் முஸ்லிம்களின் மாட்டுத் தொழுவங்களையும் கொட்டில்களையும் கழற்றி எறிந்ததுடன், முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் கொச்சைப்படுத்தும் வகையிலும் பேசியிருந்தனர்.

முஸ்லிம்கள் ஜலகெலும்மின்ன வனப் பாதுகாப்புப் பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ளதாகவும் இப்பகுதியில் முஸ்லிம்கள் சுமார் 2000 ஏக்கர் நிலத்தில் விவசாயம் மேற்கொண்டுள்ளதாகவும் இதன் காரணமாக அப்பகுதியில் இருந்த 18 பௌத்த புராதனச் சின்னங்கள் அழிவுக்குள்ளாகியிருப்பதாகவும் குற்றம் சுமத்திய ஞானசார தேரர் உடனடியாக இங்கிருந்து முஸ்லிம்கள் வெளியேற வேண்டும் எனவும் உத்தரவிட்டுச் சென்றார்.

இவ்வாறான நிலையில் மே மாதம் 15 ஆம் திகதி முஸ்லிம்களுக்கெதிரான இரண்டு சம்பவங்கள் வெவ்வேறு பகுதிகளில் பதிவாகின. தோப்பூர் நீணாக்கேனி பிரதேசத்தில் முஸ்லிம்கள் பூர்வீகமாகப் பயிர்ச் செய்கை மேற்கொண்டு வந்த காணிகளின் பாதுகாப்பிற்காகப் போடப்பட்டிருந்த வேலிகளை பௌத்த குழுவொன்று இயந்திரங்களின் உதவியோடு அகற்றி எறிந்தனர். இதனால் இப்பிரதேசத்தில் பதற்ற நிலை உருவானது. தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த காணிகளின் உரிமையாளர்கள் 1959 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட காணி உறுதிகளை வைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் குறித்த தினத்தில் பாணந்துறையிலுள்ள பள்ளிவாசல் ஒன்றும் அதிகாலை வேளையில் பெற்றோல் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது. இதனால் பள்ளிவாசலின் மேல் மாடிக்குச் செல்லும் படிகள் கடுமையாகச் சேதமடைந்தன.

மே மாதம் 16 ஆம் திகதி இரவு வேளையில் மீண்டும் தோப்பூர் நீணாக்கேனி பகுதிக்குள் பௌத்த தேரர்கள் தலைமையிலான இனவாதக் கும்பல் உட்புகுந்து பொதுமக்களை அச்சுறுத்தியதோடு, 10 குடியிருப்பு வீடுகளையும் சேதப்படுத்தினர். விகாரைப் பகுதியிலிருந்து முஸ்லிம் பிரதேசத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. இதனால் பீதியடைந்த மக்கள் தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேறி அருகாமையிலுள்ள பள்ளிவாசல் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்தனர். இதே தினத்தில் அதிகாலை 1.45 மணியளவில் கொழும்பு கொஹிலவத்தை அல் இப்றாஹீமிய்யா ஜும்ஆப் பள்ளிவாசலும் தாக்குதலுக்கு இலக்கானது.

மே மாதம் 17ஆம் திகதி பானந்துறை எலுவில பகுதியில் அமைந்துள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான பேக்கரி ஒன்றும் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றும் பெற்றோல் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானதோடு, அதற்கு அடுத்த தினம் வென்னப்புவ பிரதேசத்தில் நாளிர் ஹாஜியாருக்குச் சொந்தமான லாஸ்ட் சான்ஸ் அலங்கார விளக்குக் கடை அதிகாலை வேளையில் முற்று முழுதாக எரிந்து நாசமானது. இதனால் சுமார் 9 கோடி ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டது. இந்த வர்த்தக நிலையத்தில் 3 சிங்களவர்கள் தொழில் புரிகின்றமை குறிப்பிடத்தக்கது.

மே மாதம் 21 ஆம் திகதி நாட்டில் முஸ்லிம்களுக்கெதிரான இரு சம்பவங்கள் பதிவாகின. காலி எல்பிட்டியவில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான அழகுசாதனப் பொருட்கள் மற்றும் வீட்டுப் பாவணைப் பொருட்கள் விற்பனை நிலையம் அதிகாலை 2 மணியளவில் இனவாதிகளால் தீ மூட்டி எரிக்கப்பட்டதோடு, குருணாகல் மல்லவபிட்டிய ஜும்ஆப் பீள்ளிவாசல் அதிகாலை 3.30 மணியளவில் பெற்றோல் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது. இதனால் பள்ளிவாசலின் இடது பக்கக் கண்ணாடிகளுக்கும் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டது.

இதற்கு அடுத்த தினத்திலும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இரு சம்பவங்கள் பதிவாகின. மிரிஹான நாவின்ன சந்தியில் இயங்கி வந்த இம்தியாஸ் என்பவருக்குச் சொந்தமான கடையொன்றும், அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் நடத்தப்பட்டு வந்த இறக்காமத்தைச் சேர்ந்த அஸ்வர் என்பவருக்குச் சொந்தமான உணவகம் ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டன.

மே மாதம் 23ஆம் திகதி இரத்தினபுரி கஹவத்தை நகரில் அதிகாலை 2 மணியளவில் அட்டுளுகமையைச் சேர்ந்த காமில் ஹாஜியாருக்குச் சொந்தமான 4 மாடிகளைக் கொண்ட வர்த்தக நிலையம் இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டதோடு, மே மாதம் 24ஆம் திகதியும் மஹரகம நாவின்ன ஹார்கோட்ஸ் மருந்தகத்துக்கும் பட்டப்பகலில் பெற்றோல் குண்டு வீசப்பட்டது.

இவ்வாறு கடந்த மூன்று வாரங்களில் அம்பாறை, பொலன்னறுவை, திருகோணமலை, கொழும்பு, களுத்துறை, கம்பஹா, குருணாகல், காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய 9 மாவட்டங்களில் முஸ்லிம்களுக்கெதிராக 16 இனவாத செயற்பாடுகள் அரங்கேறியிருக்கின்றன. முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் பிரச்சினைகளை சந்திக்கின்ற போதெல்லாம் எதையுமே செய்யாமல் வாய் மூடி மௌனிகளாக இருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டை வழமையாக எதிர்கொள்கின்ற முஸ்லிம் அரசியல் தலைமைகள் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் தமது சமூகத்துக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஒன்றுபட்டுள்ளமையானது முஸ்லிம் சமூகத்துக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.


பெற்றோல் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான பள்ளிவாசல்

அந்த வகையில், அண்மைக் காலங்களில் தலைதூக்கியுள்ள இனவாத செயற்பாடுகளுக்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக மே மாதம் 19ஆம் திகதி முஸ்லிம் சமய விவகார அமைச்சில் அமைச்சர் ஹலீம் தலைமையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடினர். இங்கு முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டு வரும் நெருக்கடிகள் குறித்து [illegible] ஜனாதிபதியை சந்திப்பதாக முடிவெடுக்கப்பட்டாலும், துரதிஷ்டவசமாக ஜனாதிபதி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்திக்க நேரம் ஒதுக்கவில்லை. என்றாலும் அமைச்சரவை மாற்றத்திற்குப் பிறகு ஜனாதிபதி சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவுக்கு முஸ்லிம் பிரதிநிதிகளை சந்திக்குமாறு உத்தரவிட்டார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம்கள் சமகாலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து தெளிவுபடுத்தினர். இதன்போது உரையாற்றிய அமைச்சர் சாகல ரத்நாயக்க பள்ளிவாசல்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் தீயிடப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், குற்றவாளிகள் 26ஆம் திகதிக்கு முன்னர் கைது செய்யப்படுவார்கள் என்ற வாக்குறுதியும் அளிக்கப்பட்டது. ஆனால் இதுவரைக்கும் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

அதேபோன்று கடந்த மாதம் 23ஆம் திகதி அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைமையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பொன்று இடம்பெற்றது. இங்கு முஸ்லிம் சமூகத்தின் அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. சில மாவட்டங்களில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாமையினால் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் றிஸ்வி முப்தியின் ஆலோசனையின் பிரகாரம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொறுப்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். ஏதாவது ஒரு மாவட்டத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டால் அந்த மாவட்டத்திற்குப் பொறுப்பான பாராளுமன்ற உறுப்பினரை மக்கள் தொடர்பு கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர்களை மக்களோடு நேரடியாகத் தொடர்பு படுத்தும் இந்த நடவடிக்கை மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

முஸ்லிம் சிவில் அமைப்புக்களும் இனவாத செயற்பாடுகளுக்கெதிராக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அந்தவகையில், சர்வதேசப் பிரதிநிதிகளை சந்தித்து முஸ்லிம்களுக்கெதிரான இனவாத செயற்பாடுகளை நிறுத்துவதற்கான அழுத்தத்தை அரசாங்கத்துக்கு வழங்குவதற்கான முயற்சிகளும் இடம்பெற்றுள்ளன. இதன் விளைவாகத்தான் குருணாகல் மல்லவபிட்டிய ஜும்ஆப் பள்ளிவாசல் தாக்குதலை அமெரிக்கத் தூதுவர் கண்டித்திருந்தார். கடந்த 24 ஆம் திகதி கனேடியத் தூதுவரை முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் சந்தித்து நாட்டில் இடம்பெற்றுவரும் முஸ்லிம்களுக்கெதிரான அநியாயங்களை தெளிவுபடுத்தியது.

கடந்த 22 ஆம் திகதி அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அமைச்சில் அமைச்சர் பைஸர் முஸ்தபா, முஜிபுர் ரஹ்மான், அசாத் சாலி மற்றும் முஸ்லிம் கவுன்ஸில், தேசிய ஷூறா சபை என்பன கலந்து கொண்ட கூட்டத்தில் மக்களை அமைதிப்படுத்தி நிதானமாக நடந்து கொள்ள வைப்பதற்கான சில வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் ஊடகங்கள் வாயிலாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை கடந்த 23 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை குறித்த சபை ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்ததோடு, அந்தப் பிரேரணை பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள் இடம்பெற்ற போதெல்லாம் முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது சமூகத்துக்காக ஒன்றுபட்டிருக்கின்றனர். அந்த வகையில், தற்போது இந்த நாட்டில் இடம்பெற்று வருகின்ற இனவாத செயற்பாடுகளுக்கு எதிராகவும் முஸ்லிம் அரசியல்வாதிகள் ஓரணியில் நின்று செயற்படுவது மகிழ்ச்சி தருகின்ற விடயமாகும்.

இந்தக் காத்திரமான பணி பிரதான முஸ்லிம் சிவில் அமைப்புக்களான அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை, முஸ்லிம் கவுன்ஸில், தேசிய சூறா சபை என்பவற்றின் வழிகாட்டலில் நடைபெறுவது ஆரோக்கியமானது. தொடர்ந்தும் முஸ்லிம் அரசியல்வாதிகள் இந்த சமூகத்துக்காக எதையும் செய்வதில்லை என்று கூறிக் கொண்டிருப்பதை விட அவர்களை ஒன்றிணைத்து சமூகத்துக்காக காத்திரமான நடவடிக்கைகளில் ஈடுபட வைப்பது மக்களினதும் முஸ்லிம் சிவில் அமைப்புகளினதும் கைகளிலேயே தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தில் இலங்கையின் முதல் இரத்தினக் கல் சிற்பி பஸீர் ஸம்சுதீன்

• அனஸ் அப்பாஸ்

பஸீர் ஸம்சுதீன் கண்டி, தென்னங்கும்புரையைச் பிறப்பிடமாகக் கொண்டவர். தந்தை ஒரு ஆயுர்வேத வைத்தியர். தந்தை முதுமைப் பருவத்தில் நோய் வாய்ப்பட்டதால் பொருளாதார நெருக்கடியால் தனது கல்வியை NCGE யுடன் (க.பொ.த. சா/ தரத்திற்கு சமனான பரீட்சை) இடை நிறுத்தினார்.

''தந்தையின் சகோதரரான வஹாப் அவர்களின் நண்பரான இக்பால் மஜீத் அந்த நேரத்தில் 'ஷிபானி ஜுவலர்ஸ்' இன் கண்டி கிளையில் இருந்தார். அவர் மூலமாக அந்த நிறுவனத்தில் பணிபுரிய எனக்கு வாய்ப்புக் கிட்டியது. ஆரம்ப கட்ட பயிற்சி (Training) கொழும்பிலுள்ள தலைமையகத்தில் இடம்பெற்றது. அங்கு Gem Cuttiing தொடர்பான நுட்பங்களை கற்கக் கிடைத்தது.

வைத்தியத்துறையில் விஷேட வைத்தியர்கள் போல இரத்தினக் கல் நுட்பங்கள் அறிந்த Gemologists மூவர் அங்கு இருந்தனர். அவர்களிடமிருந்து நிறைய விடயங்களைக் கற்றுக்கொண்டேன். 1978 ஜனவரி 2 இல் இணைந்து, கொழும்பில் பணி புரிய ஆரம்பித்தேன். 1980 இல் எனது ஊரான கண்டியின் பெரிய கிளைக்கு மாற்றம் கிடைத்தது. இங்கு இரத்தினக் கல் வெட்டும் பிரிவுக்கு "Lapidary" பொறுப்பாளராக நியமிக்கப்பட்டேன் என்றார்.

அத்துடன் நின்றுவிடவில்லை இவர். வெளிநாட்டு மொழிகள் கற்பது, இரத்தினக்கல் வர்த்தகம் தொடர்பான கற்கைகள் என தன்னை மேம்படுத்திக் கொண்டார். தான் இடைநிறுத்தாது கல்வியை தொடர்ந்திருந்தால் Medical Faculty க்கு தெரிவாகி இப்பொழுது ஒரு வைத்தியராக இருந்திருப்பேன் என்றார். தனது வாழ்க்கை முறை மாறிவிட்ட படியால் இரத்தினக்கல் வர்த்தக துறைக்கு தேவையான சுயமுன்னேற்ற வேலைகளை மேற்கொள்ள ஆரம்பித்தார்.

French, Germany, Italian... என வெளிநாட்டு மொழிகள் இந்தத் துறைக்கு அத்தியாவசியம். ஆங்கிலம் மிகவும் சரளமாக இருக்க வேண்டும். நான் எனது ஆங்கில அறிவை பட்டை தீட்ட ரோயல் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரின் உதவியைப் பெற்றேன்.

கண்டிக் கிளைக்கு மாற்றியதால் தந்தையிடமிருந்து ஓய்வு நேரங்களில் ஆயுர்வேத வைத்திய முறைகளைக் கற்க சிறந்த வாய்ப்பாக இருந்தது. ஆயுர்வேதத்திலும் பரீட்சைகளை எதிர்கொண்டேன், இறுதி வருட பரீட்சைக்காக காத்திருக்கின்றேன். பரீட்சை முடிந்ததும் ஒரு வருட பயிற்சிக்காலம், அதில் ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றில் பணிபுரிய வேண்டும்.''



கொழும்பு 'ஷிபானி ஜுவலர்ஸ்' தலைமையகத்தில் நிறுவனத்தின் செயலாளர் ஒருவர் இருந்தார். அவர் மொஹிதீன். பயிற்சிக் காலத்திலும், அதன் பின்னரும் மொஹிதீன் எனக்கு மிகவும் உதவியாக இருந்தார்.

''கண்டியில் எமது நிறுவனம் விருத்திகளைக் கண்டது. இரத்தினக்கல் அருங்காட்சியகம் (Gem Museum) ஒன்றை ஆரம்பித்தார்கள். பின்னர் அதில் உள்ள இரத்தினக்கல் வெட்டும் பிரிவுக்குப் (Lapidary) பொறுப்பாக நியமிக்கப்பட்டேன். அதற்கு வந்த பின்னர் இரத்தினக் கல் தொடர்பான நிறைய புத்தகங்கள் வாசிக்கக் கிடைத்தது.

அந்த இரத்தினக் கல் அருங்காட்சியகத்துக்கு ஐக்கிய இராச்சியத்திலிருந்து பேராசிரியர் ஸ்பென்சர் கில்ட் என்பவர் சகிதம் ஒரு குழுவினர் வருகை தந்திருந்தனர். எனது வேலைப்பாடுகளைப் பார்த்து அவர் வியந்தார். உங்களிடமுள்ள அசாத்திய திறமைகளை சர்வதேச தளத்தில் நீங்கள் விரும்பினால் மிளிர வைக்கலாம் என்றார். அது தொடர்பில் ஆர்வமோ, தேடலோ பெரிதாக என்னிடம் அந்த சூழ்நிலையில் இருக்கவில்லை. எனது திறமை தொடர்பான எண்ணத்தை மிகைத்திருந்தது.

5 மாதங்களைக் கொண்ட இரத்தினக் கல் இப்பாடநெறியில் தற்போது 10 ஆவது மாணவர் குழு கற்று வருகின்றது. உயர்ந்த சம்பளத்தில் வேலைவாய்ப்பைப் பெற்று வெளிநாட்டில் பணிபுரியும் வாய்ப்பும் பலருக்குக் கிட்டியுள்ளது.

பேராசிரியர் ஸ்பென்சர் தனது நாட்டுக்குத் திரும்பிய பின்னர் பலமுறை கடிதங்களை எனக்கு அனுப்பியிருந்தார். அவற்றை நான் சட்டை செய்யவில்லை. பொறுமையிழந்து கண்டியிலுள்ள உணவகமொன்றின் முகாமையாளரை தொடர்பு கொண்டு என்னைப் பற்றி விசாரித்துள்ளார். அது யுத்த காலம் என்பதால் நான் பதில் கடிதம் அனுப்பாத பயத்தில் இருந்துள்ளார். அந்த முகாமையாளர் என்னைத் தேடி நான் பணிபுரியும் நிறுவனத்துக்கே வந்தார். என் மீது அவர் காட்டும் கரிசனையும், திறமை குறித்த நம்பிக்கையும் யதார்த்தத்தை உணர்த்தின.

பின்னர், உலகின் தலைசிறந்த இரத்தினக்கல் நிபுணர்களுடனும், தகவல்களுடன், விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளுடன் இரத்தினக்கல் தொடர்பான அறிவை சர்வதேச ரீதியாக வியாபிக்க வைக்க பணியாற்றும், பலபாடநெறிகளை முன்னெடுக்கும் United Kingdom Facet Cutters' Guild (UKFCG) எனும் கல்லூரியின் அங்கத்தவராக என்னை ஆக்கினார் அந்த பேராசிரியர். எனது பதிவிலக்கம் 2013.

இலங்கையின் இரண்டாவது அங்கத்தவன் நான். முதல் இலங்கை அங்கத்தவரான இராமல் டி சில்வா என்ற பெண் மணியும், நானும், அந்த பேராசிரியரும் ஒரு குழுவாகச் செயற்பட்டோம். ஐக்கிய இராச்சியத்தில் "Stone Chat" என்று இரத்தினக்கல் தொடர்பான ஒரு சஞ்சிகை வெளிவருகின்றது. எனக்கும் அதில் கட்டுரை எழுதலாம். பேராசிரியர் ஸ்பென்சர் தனது இலங்கை இரத்தினக் கல் அனுபவங்களையும் அதில் எழுதியுள்ளார்.

குறித்த சஞ்சிகையை நடாத்தும் UKFCG நிறுவனம், ஒவ்வொரு வருடமும் இரத்தினக்கல் வேலைப்பாடுகள் தொடர்பான சர்வதேச போட்டியொன்றை நடாத்துகின்றது. பேராசிரியரின் உந்துதலால் நானும் விண்ணப்பித்தேன். குறித்த போட்டியில் UKயை சேர்ந்த நிபுணர் டின் ஸ்மித் முதலிடமும், சிறு புள்ளிகள் வித்தியாசத்தில் நான் இரண்டாம் இடத்தையும் பெற்றேன். இதனால் எனக்கு Advanced Cutter விருது கிடைத்தது.

அந்தக் காலத்தில் இலங்கை இரத்தினக் கல் கூட்டுத்தாபனம் கூட இவ்வாறான போட்டிகள் தொடர்பில் அறிந்திருக்கவில்லை. Advanced Cutterஐத் தொடர்ந்து Master Cutter பரீட்சைக்கும் எனக்கு தகுதி இருப்பதால் போட்டியிடச் சொன்னார்கள். Master Cutter விருதும் கிடைத்தால் உயரிய விருதான International Judge எனும் உலகின் தலைசிறந்த விருதுக்கும் போட்டியிடலாம். விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் மட்டுமே உலகில் Master Cutters ஆக இருக்கின்றனர்.

Master Cutters பரீட்சையின் முதல் பகுதியில் 80 இற்கு மேல் புள்ளிகள் பெற வேண்டும். பேராசிரியர் தந்த தகவல்களை கற்று 89 புள்ளிகள் பெற்றுள்ளேன். இரண்டாம் பகுதி அவர்கள் தரும் இரத்தினக் கல்லில் வேலைப்பாடுகளைச் செய்து அனுப்புவது. இன்னும் அதை நான் செய்யவில்லை. இலங்கையில் உள்ள உபகரணரங்கள் இதில் வெற்றி பெற எனது வேலைப்பாடுகளை செய்யப் போதாது. அது மட்டுமன்றி, அதற்காக நீண்ட பயிற்சியை நான் மேற்கொள்ள வேலைப்பழு இடம் கொடுப்பதில்லை. பகுதி 2 ஐ நான் விரும்பும் நேரத்தில் விண்ணப்பித்துப் போட்டியிடலாம்.

எனது வேலைப்பாடுகளில் ஈர்க்கப்பட்ட பேராசிரியர் ஒருவர் சொன்னதற்காக அவுஸ்திரேலியாவிலுள்ள போட்டியொன்றிலும் போட்டியிட்டு வென்றுள்ளேன். அதில் குழுக்களாகவும் போட்டியிட்டார்கள். இது தவிரவும் போட்டிகளில் பங்கேற்றுள்ளேன்.

''எனது தந்தை தொடர்ந்த இலவசமாக ஆயுர்வேத சிகிச்சையளிக்கும் சேவையை நானும் எனது வீட்டில் இலவசமாகவே தொடர்கின்றேன்.

நான் கற்றதை பிறருக்கு கற்றுக் கொடுப்பதே பாடசாலைக் காலம் முதல் என்னிடமுள்ள பண்பு. பொருளாதார ரீதியான அறிவை நான் தற்போது கற்பிப்பதால் அவர்கள் பயனடைந்து ஸதகா, ஸகாத் கொடுப்பர். அது எனக்கு ஸதகத்துல் ஜாரியாவாக மறுமையில் வந்து சேரும்.

இரத்தினக் கல்லில் விலைமதிக்க முடியாத, அரிதான கற்கள் இருக்கின்றன. இலங்கையில் கிடைக்கும் Blue Sapphire, அண்மையில் கண்டெடுத்த Star Sapphire என இப்பட்டியல் நீள்கின்றது. பட்டை வெட்டுதல், தீட்டுதல் மட்டுமன்றி பல வர்ணங்களில் ஜொலிக்கும் கனிப்பொருள் பாறைகளிலும் செதுக்கல்கள் மேற்கொள்ளலாம். இன்னும் எத்தனையோ வேலைப்பாடுகள் செய்யலாம்.

ஆண்களை விட பெண்களே இரத்தினக் கல் வேலைப்பாடுகள் செய்வது பொருத்தம். ஒரு வீட்டில் சகோதரன் இந்த அறிவை பெற்றால், தனது சகோதரிக்கு வேலைப்பாடுகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் கொடுக்கலாம். பின்னர் விற்பனை செய்யும் வேலைகளை சகோதரன் முன்னெடுக்கலாம். எமது சமூகத்தில் பெண்கள் தனிமைப்பட்டு இருப்பதால் இத்துறையை விருப்புடன் கற்கும் ஆர்வம் இன்னும் உருவாகவில்லை. பெண் பிள்ளைகளை இத்துறையில் மிளிரச் செய்வதற்கான முன்னெடுப்புக்களும் இடம்பெற்றால் நல்லதொரு சமூக சூழல் உருவாகலாம் என்றார்.

இலங்கையில் முஸ்லிம் வியாபார ஸ்தலங்களுக்கான தாக்குதல் எம்மை பொருளாதார வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் என்கின்றனர். உண்மைதான். ஆனால் ஒன்று. பொய், ஏமாற்று கலந்த வியாபாரம் எம்மை அழிவிற்கே இட்டுச் செல்லும். உதாரணமாக, நளீம் ஹாஜியார் அவர்கள் இரத்தினக்கல் மூலம் சமூகத்துக்கு செய்த தொண்டில் ஒரு பகுதியையேனும் தொடர்கின்ற வர்த்தகர்கள் இன்று இருக்கின்றார்கள்? ''இறைவன் தந்த அருள்களைக் கொண்டு சமூகத்துக்கு நாம் பயன்படாவிட்டால் எம்மை விட நஷ்டவாளிகள் யார்?'' என்கின்றார் தற்போது Isini Gems நிறுவனத்தில் பணிபுரிந்து வரும் பஸீர் ஸம்சுதீன்.

## முளையிலே கிள்ளி... (03 ம் பக்கத் தொடர்)

என ஆயிரம் கேள்விகள் உருவாகியுள்ளன. இந்தக் கேள்விகள் எல்லாம் மலையக, முஸ்லிம், தமிழ் மக்களிடம் அரசாங்கத்தின் மீதும் சிங்களச் சமூகத்தின் மீதும் ஐயங்களை உருவாக்கியுள்ளன.

ஏனென்றால், இனமுரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான அரசியலமைப்பை நாடு உருவாக்கி வரும் நிலையில் ஞானசாரா தேரர் போன்றவர்களின் அதிதீவிரவாத நிலைப்பாடு எல்லாவற்றையும் நெருக்கடிக்குள்ளாக்கிப் பாதிப்பை ஏற்படுத்துமே என்ற ஐயமே இதற்கான காரணம். இதனால்தான் தமிழ் ஊடகங்களும் முஸ்லிம்களும் ஞானசார தேரரின் அடாவடித்தனங்களை முன்னிலைப்படுத்தி பொது வெளியில் உரையாடல்களைச் செய்கின்றன. நாட்டின் அமைதிச் சூழலைக் கெடுக்கக்கூடாது என்ற நோக்கில். இல்லையென்றால், ஞானசார தேரருக்கும் பொதுபல சேனாவுக்கும் இந்தளவுக்கு முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டியதில்லை என இவை வாதிடுகின்றன.

ஆனால், பொது பல சேனாவைப் போல தமிழ்த் தரப்பிலும் தீவிரவாத சக்திகள் உண்டு. ஞானசார தேரரைப் போல ஆட்களும் உண்டு. உடனடியாக நினைவுக்கு வருகின்றவர்கள் சிவாஜிலிங்கம், சிறிதரன், அரியனேந்திரன் போன்றவர்கள். இவர்களின் கருத்துகளை தமிழ்ச் சமூகமும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. சிங்களச் சமூகமும் பொருட்படுத்துவதில்லை.

ஆகவே பொதுபல சேனாவையும் அப்படியே சிங்கள மக்கள் பார்க்கிறார்கள். இதனால்தான் ஜாதிக ஹெல உறுமயவும் பொதுபல சேனாவும் பெரும்பான்மைச் சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளாக இல்லை என்கிறோம். இதனால் நாம் ஞானசார தேரரையும் பெரிதாகப் பொருட்படுத்த வேண்டியதில்லை.

ஆனால், ஒரு பானை சோற்றை ஒரு துளி விசம் கெடுத்துப் பாழாக்கி விடும் என்பதைப் போல, மிகக் கடினமாக உழைத்து உருவாக்கி வரும் ஒரு அமைதிச் சூழலை இந்த மாதிரியான அதி தீவிரவாதிகள் கெடுத்துப் பாழாக்கி விடுவார்கள் என்பதையிட்ட அக்கறை இருப்பது தவறானதல்ல. இதனால்தான் பொதுபலசேனா, ஜாதிக ஹெல உறுமய போன்ற சக்திகளையிட்டுக் கவனமாக இருக்க வேண்டியுள்ளது.

இந்தச் சக்திகள் பச்சையாக இனவாதத்தைப் பேசுகின்றன. ''இந்த நாடு சிங்களவர்களுக்கே சொந்தமானது. மற்றவர்களெல்லாம் வந்தேறிகள். அவர்கள் எங்காவது சென்று விடவேண்டியதுதான். அல்லது அடங்கியிருக்க வேண்டியதே'' என்றெல்லாம் சொல்கின்றன. ஏறக்குறைய இது ஒரு சுயபுலம்பலே.

இப்படிச் சொல்வதன் மூலமாக இலங்கையின் பன்முகத்தன்மையை நிராகரிக்கின்றன இவை. பன்முகத்தன்மையை நிராகரித்தால், அது இந்த நாட்டைப் பாதுகாப்பின்மைக்கும் நீதியின்மைக்குமே கொண்டு செல்லும். சரியாகச் சொன்னால், இந்த நாட்டை அழிவுக்கே கொண்டு போகும். கடந்த காலத்தின் படிப்பினைகளுக்கு மாறான ஒரு நிலை இது. இவ்வளவு பட்டறிவுக்குப் பிறகும் இதை நாம் அனுமதிக்கலாமா?

இன்றைய உலகம் பன்மைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டது. நவீனத்துவத்தின் அடிப்படையே அனைத்துத் தரப்புகளுக்கும் இடமளித்தல், குரல் மறுக்கப்பட்ட மக்களுக்கான குரலை உறுதிப்படுத்துதல், அதை ஒலிக்க வைத்தல் என்பதாகும். இது நவீனத்துவ உலகினுடைய காலகட்டம். விழிப்புணர்வும், உரையாடல்களும் உரிமைக் கோரிக்கைகளும் வலுப்பெற்று உருவாகிய நவீனத்துவ கால கட்டம். எல்லோருடைய உழைப்புக்கும் இந்த உலகத்தில் இடமிருப்பதைப் போல, எல்லோருடைய உரிமைக்கும் எல்லோருடைய அடையாளத்துக்கும் இடமளித்தலைச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டை உடைய காலகட்டம்.

ஆகவே, இந்தக் காலகட்டத்துக்குரிய அரசியல் சிந்தனையும் அரசியல் நடைமுறைகளுமே அவசியமானது. அப்படியான ஒரு நிலையில்தான் இன்று ஒரு கூட்டரசாங்கத்துக்கு, பன்மைத்துவ ஆட்சிக்கு இலங்கை மக்கள் இடமளித்திருக்கின்றனர். தற்போது ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் தமிழ், முஸ்லிம், மலையக, சிங்கள மக்கள் என அனைத்துத் தரப்பினரும் இணைந்து உருவாக்கிய ஒன்று. எனவேதான் இந்த அரசாங்கத்தின் காலத்தில் இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வும் பன்மைத்துவத்துக்கு இடமளிக்கும் வகையில் அரசியலமைப்பும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சிந்திக்கப்படுகிறது. இதைக் குழப்பும் தீவிரவாதச் சக்திகள் எங்கே மேற்கிளம்பினாலும் அதை முளையிலேயே கிள்ளி விட வேண்டும் என்று கூறப்படுகிறது.

ஏற்கனவே பல சந்தர்ப்பங்களிலும் இந்த மாதிரியான சமாதான முன்னெடுப்புகளை முன்னெடுக்கும்பொழுது சிங்கள பௌத்த பேரினவாதச் சக்திகள் அதைக் குழப்புகின்ற விதமாகச் செயற்பட்டிருக்கின்றன. அதை ஒரு சாட்டாக வைத்துக் கொண்டு தான் வழங்கிய வாக்குறுதிகளையும் செய்த உடன்படிக்கைகளையும் கைவிட்டிருக்கிறது அரசாங்கம். அப்படியான ஒரு நிலை இப்போதும் வரலாம் என்ற கவலையே தமிழ், முஸ்லிம் மக்களுக்குண்டு. ஆகவே அந்த வகையில் இப்போதும் கடும்போக்காளர்களைத் தூண்டி விட்டு நிலைமையை மாற்றியமைக்க முற்படுவது அரசாங்கத்தின் ஏற்பாடாகக் கூட இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

ஆனால், இந்த இடத்தில் ஒரு கேள்வியுண்டு. ஏற்கனவே சொல்லப்பட்டிருப்பதைப் போல, இது தமிழ், முஸ்லிம், மலையக, சிங்கள சமூகத்தின் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டரசாங்கம். ஆகவே இந்த அரசாங்கம் முன்னரைப் போல சிங்களக் கடும்போக்காளர்களின் பின்னால் பதுங்க முடியாது. அல்லது சிங்களக் கடும்போக்காளர்களை முன்னணிப் படையாகக் கொண்டிருக்க முடியாது. அதற்குத் தமிழ், முஸ்லிம் மலையகக் கட்சிகள் இடமளிக்கவும் கூடாது.

இன்று ஞானசார தேரரைப் பொலிஸ் தேட வேண்டி வந்திருக்கிறது என்றால், அது கூட்டரசாங்கத்துக்கு உள்ளே ஏற்பட்ட நெருக்கடியே. சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரதிநிதிகள் கொடுத்திருக்கும் அழுத்தத்துக்கு பிரதமரும் ஜனாதிபதியும் பணிந்திருப்பது ஓரளவு ஆரோக்கியமானதே. ஆனால், இதை மெய்யாகவே ஒரு நிலையாக வளர்த்தெடுக்க வேணும். அதேவேளை தமிழ் மற்றும் முஸ்லிம் தரப்புகளில் உள்ள தீவிர நிலையாளர்களைக் குறித்தும் நாம் கவனத்திற் கொள்ள வேணும்.

மட்டக்களப்பு தேரர் செய்த அட்டகாசத்தைப் போல, தானும் ஒரு மதம் கொண்ட யானையாக பொது மையத்தில் நின்று பிளிறலாம் என்று ஞானசாரர் சிந்தித்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனமானது என்பதை இப்போது ஞானசார தேரர் உணர்ந்திருக்கக் கூடும். அல்லது இன்னும் சில காலம் கழித்தாவது உணரலாம்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் அஸ்கிரிய பீடம், மல்வத்தை பீடம் ஆகிய இரண்டுமே செல்வாக்குச் செலுத்தி வந்திருக்கின்றன. இவை சிங்கள உயர் குழாத்தைப் பிரதிபலிப்பவை. இவை மறைவான நிலையில் பௌத்த மேலாதிக்கத்தை நிலை நிறுத்துபவை. பொதுபலசேனாவும் ஞானசார தேரரும் இதற்குப் புறத்தியான மூன்றாவது நிலையைச் சேர்ந்தவை. இந்த அணியும் இப்போது பௌத்த விரிவாக்கத்தையே கொண்டிருக்கிறது.

ஆனால், தவிர்க்க முடியாத நிலையில் இவையெல்லாம் இன்று உள்ளே கொதித்துக் கொண்டிருந்தாலும் வெளியே இறங்கிச் செயற்பட முடியாத நிலையே உள்ளது. இது ஓரளவுக்கு நம்பிக்கையளிக்கக் கூடியது. ஆனால் இதற்கெல்லாம் ஒரு நிரந்தரமான தீர்வு என்பது இந்த நாட்டுக்குப் பொருத்தமான - பன்முகத்தன்மையைக் கொண்ட அரசியல் யாப்பும் ஆட்சிமுறையுமாகும். அதை உருவாக்குவதற்கு இனியும் தாமதங்களைச் செய்யக்கூடாது.

நன்றி: தேனீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்பு: எரிகின்ற தீபத்தை பாதுகாக்கும் சிம்னி



முஹம்மத் பகீஹுத்தீன்



மனிதன் பலவிதமான ஆசைகளோடு படைக்கப்பட்டுள்ளான். அவனுக்கு பெண்ணின் மீது ஆசை. மண்ணின் மீது ஆசை. பொருட்களின் மீது ஆசை. பிள்ளைச் செல்வங்கள் மீது ஆசை. பொருளாதாரத்தின் மீது ஆசை. நகைநட்டு மீது ஆசை. இப்படி எத்தனை எத்தனையோ ஆசைகள். ஆசை உள்ளத்தில் துளிர் விடும் அழுத்தமான எண்ணமாகும். பின்னர் அதனை அடைய வேண்டும் என்ற தீராத வேட்கையோடு தொழிற்படுவான்.

ஆசைகளுக்கும் ரமழானுக்கும் இறுக்கமான மிக நெருக்கமான தொடர்பு உண்டு. மனித வாழ்க்கைக் கடலில் ஆசைகள் அலைகள் போலவே எழுச்சி பெறுவது இயல்பு. நோன்பு தீராத ஆசைகளுக்கு காரணம் தேடத் தூண்டும். வரையரையில்லாத ஆசைகளுக்கு விலங்கிடும். எல்லை மீறி பயணிக்காமல் கட்டுப்பாடுகளை விதிக்கும்.

நோன்பின் ரகசியமே ஆசைகளுக்கு வரம்பிட்டு நெறிப்படுத்துவதாகும். அப்போது வாழ்வு சிறக்கும். சுகம் பெறும். எனவேதான் இஸ்லாமிய அறிஞர்கள் நோன்பிற்கு வரைவிலக்கணம் கூறும் போது "நோன்பு என்பது பஜ்ர் வேளையில் இருந்து மக்ரிப் நேரம் வரைக்கும் மனைவியைத் தீண்டாமல் காமத்தை கட்டுப்படுத்துவதுடன் உண்ணாமல் பருகாமல் வயிற்றுப் பசியின் ஆசைக்கு கடிவாளமிடுவதாகும்" எனக் கூறுவார்கள்.

எனவே நோன்பு கடமையாக்கப்பட்டதன் அடிப்படை நோக்கம் உள்ளத்தின் ஆசைகளை கரையில்லாத நதி போல் ஓட விடாமல், கட்டுப்பாடுகளை விதித்து நெறிப்படுத்துவதாகும். மாறாக அடக்கி ஒடுக்கி விடுவதல்ல. அவ்வாறே நோன்பு அறிவை தூய்மையாக்கி மெருகூட்டும். சிந்திக்கும் திறனை வளர்க்கும். மேலும் பசித்தவன் நிலையை உணரத் தூண்டும் சமூக நோக்கும் நோன்பின் இலக்குகளில் கலந்தே உள்ளது.

மனித ஆசைகள் இரண்டு வகைப்படும். ஒன்று உடல் சார்ந்த ஆசைகள். இரண்டாவது மனம் சார்ந்த ஆசைகள்.

உடல் சார்ந்த ஆசைகள் என்பது உண்ணுவது, பருகுவது, அலங்காரங்களை விரும்புவது என அதன் பொருள் விரிகிறது. அவ்வாறே பார்த்தல், கதைத்தல், தொடுதல், முத்தமிடுதல், உறவு கொள்ளுதல் போன்ற இருபாலாருக்கிடையிலான ஆசைகள் மற்றும் புலன்களின் பசி தீர்க்கும் அழகான வடிவான அனைத்துப் பொருட்களும் உடல் சார்ந்த ஆசைகளே.

இரண்டாவது வகையான மனம் சார்ந்த ஆசைகள் என்பது பொருள், சொத்து, செல்வம், அதிகாரம், கௌரவம், புகழ், வெற்றிவாகை சூட வேண்டும் என்ற ஆசைகளை குறிக்கும்.

மேற்கூறிய இரண்டு வகையான ஆசைகள் அல்லது இச்சைகள் குறித்தும் இஸ்லாத்தின் நிலைப்பாடானது சம நிலை பேணும் வகையில் அமைந்துள்ளது. இது இஸ்லாத்திற்கே உரிய தனிச் சிறப்பாகும்.

பொதுவாக அனைத்து ஆசைகளும் மனித வாழ்வின் இருப்புக்குத் தேவையான அத்தியவசியமான விடயங்களாகும். இது ஆசைகள் பற்றிய இஸ்லாத்தின் முதல் அடிப்படையாகும்.

இரண்டாவது ஆசைகள் அனைத்திற்கும் கண்டிப்பாகக் கடிவாளம் தேவையாகும். அவை எல்லை மீறிச் செல்லாமல் பாதுகாப்பதற்கும் துஷ்பிரயோகம் நடைபெறாமல் கண்காணிப்பதற்கும் இந்தக் கட்டுப்பாடு அவசியமாகிறது.

உண்மையில் இந்தக் கட்டுப்பாடு என்பது எரிகின்ற விளக்கின் ஒளித் தீபத்தை பாதுகாக்கும் சிம்னியை போன்றதாகும்.

ஆசைகள் பற்றிய இஸ்லாத்தின் முதலாவது அடிப்படையானது, மனிதனில் உள்ள இச்சைகள் யாவும் இறைவனால் வழங்கப்பட்டுள்ள அருள்கள். அவை அவனது உயிர் வாழ்வை பாதுகாப்பதற்குத் தேவையான அடிப்படைகள்.

மனிதன் உணவின் பால் ஆசையுள்ளவன். உணவின்றி உயிர்வாழ முடியாது. எனவே பசி, தாகம் என்பன இறையருள்களே.

இச்சைகளில் மிகவும் பலம் வாய்ந்தது காம இச்சையாகும். மனித இன விருத்திக்கான அடிப்படைக் காரணியும் அதுவே. எனவே அல்லாஹ் காம உணர்வை மனிதனில் படைத்துள்ளான்.

மனிதனுக்கு சொத்து செல்வங்கள் மீதுள்ள பற்றும் அதனை உடமையாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆசையும் அவனுள்ளே பொதிந்திருப்பதானது இறையருள் என்பதில் சந்தேகமில்லை. பொருளாதார அபிவிருத்திக்கும் வாழுமிடத்தை வளப்படுத்துவதற்கும் சொத்துக்களை பேணிக் காப்பதற்கும் அந்த ஆசைகள் அடிப்படைத் தேவையாகும்.

பார்வை மற்றும் கேள்விப் புலன்களின் ஆசைகள் அழகியல் கலைகள் தோன்றுவதற்கும் அறிவின் எழுச்சிக்கும் கலாசார புதுமைப் படைப்புகள் உருவாகுவதற்கும் அடிப்படைக் காரணிகளாகும்.

ஆட்சி அதிகாரத்தின் மீதான ஆசை கட்டுக்கோப்பான ஒரு அரசு உருவாகி நாட்டிலும் வீட்டிலும் ஒழுங்கான சீரான வாழ்வுக்கு வழிவகுக்கிறது.

பாராட்டைப் பெற வேண்டும் என்ற ஆசை ஒன்றை திறன்பட செய்வதற்கும் முன்னேறுவதற்கும் சிறப்புத் தேர்ச்சி பெறுவதற்கும் உந்துதலை தருகிறது.

வெற்றி பெற வேண்டும், மிகைக்க வேண்டும் என்ற ஆசை தேசத்தின் பாதுகாப்புக்கும் எதிரிகளின் அத்துமீறல்களை தடுப்பதற்கும் வேலியாக அமைகிறது.

மொத்தத்தில் இறைவன் படைப்பில் ஆசைகள் அனைத்தும் மனித வாழ்வின் நலனுக்காகவே அமைந்துள்ளன.

ஆசைகள் பற்றிய இஸ்லாத்தின் இரண்டாவது அடிப்படை, இச்சைகளுக்கு கடிவாளம் தேவை என்பதாகும். இஸ்லாம் எங்கும் எப்போதும் ஆசைகள் பாவமானது என்றோ இச்சை என்றால் அது ஹராம் என்றோ எச்சரிக்கை செய்தது கிடையாது. மாறாக ஆசைகளுக்கு அடிமைப்படாமல் பார்த்துக் கொள்ளுமாறும் கண்மூடித்தனமாக ஆசைகளின் பின்னால் மனம் போன போக்கில் போக வேண்டாம் என்றும் எச்சரித்துள்ளது. அதன் பொருள் ஆசைகள் அழிவுப் பாதைக்குக் காரணியாக அமையாமல் தடுத்து தேவையான கட்டுப்பாடுகளை விதித்து மனித வாழ்வை பாதுகாத்துள்ளது.

நோன்பு பிடிப்பது இறைவன் முஸ்லிம்கள் மீது விதித்துள்ள ஒரு கட்டாயக் கடமையாகும். அந்த ஷரீஆ கடமையின் இலக்கு மனிதன் ஆசைகளுக்கு அடிமைப்பட்டு மிருகத்தைப் போல ஒழுக்கமற்ற பிறவியாக மாறாமல் உயர்ந்த கௌரவமான பிரஜையாக வாழ வேண்டும் என்பதே. அந்த வகையில் நோன்பு அவனுக்கும் அவனது குடும்ப வாழ்விற்கும் சமூக வாழ்விற்கும் தேசத்திற்கும் முற்றிலும் நலனாக, அருளாக அமைகிறது.

நோன்பு ஏன் எதற்காக என்று நோக்கும் போது அல்குர்ஆன் மிகத் தெளிவாக கூறும் விடைதான் "நீங்கள் தக்வா உள்ளவர்களாக மாற வேண்டும் என்பதற்காக உங்கள் மீது நோன்பை விதியாக்கியுள்ளோம்" என்பதாகும்.

உண்மையில் தக்வா என்பது மனிதன் அன்றாட வாழ்வில் தப்புத் தவறுகள் நடக்காமல், பாவங்கள் புரியாமல் அவன் தன்னைத் தானே அவதானிக்கும் உள்ளம் கொண்டவனாக வாழ முனைவதாகும்.

அதாவது தீமையை தவிர்ந்து கொள்வதற்கும் நன்மையான விடயங்களின் பால் ஆர்வத்துடன் முந்துவதற்கும் யாரும் சுட்டிக் காட்ட முன்பே அவனாகவே சுயமாக இயங்கும் உயர்ந்த மனோ நிலைதான் தக்வாவாகும். எனவே அவன் தன்னார்வத்துடன் நல்ல விடயங்களை செய்வான். தீமைகளை விட்டுத் தூரமாகுவான்.

இறையச்சம் என்பது இதுதான். அல்லாஹ் எங்கும் எப்போதும் என்னை அவதானிக்கின்றான் என்ற உணர்வோடு வாழும்போது மிகுந்த எச்சரிக்கையுடனே அவனது வாழ்க்கை நகரும். அந்த சுயமாக இயங்கும் விழிப்பு நிலை மனம் உருவாக வேண்டும் என்பதற்கான பயிற்சியாகவே நோன்பு என்ற கடமை விதியாக்கப்பட்டுள்ளது.

உண்மையில் ஆசைகள் அது ஏன், எதற்கு? அதனை நிறைவேற்ற முடியுமா? அதற்கான சக்தி உள்ளதா? அப்படி அந்த ஆசைகளை நிறைவேற்ற முடியுமாயின் அதன் விளைவு யாது? அது நன்மை பயக்குமா அல்லது தீமை பயக்குமா என்ற கேள்விகளை மனம் எழுப்ப வேண்டும். ஆசைகளின் வேகத்திற்கு அள்ளுண்டு போகாமல் உள்ளம் அவனை கட்டுப்படுத்த வேண்டும். ஆசைகளுக்கு முன்னால் அந்த உள்ளம் இருந்தால் அவன் தக்வாதாரி.

அதன் பொருள் அவன் ஆசைகளுக்குப் பின்னால் போகவில்லை. நபிகளார் கொண்டு வந்த வழிகாட்டல்களுக்கு ஏற்ப ஆசைகள் அமைய வேண்டும் என்ற உணர்வோடு உள்ளான். அந்த உணர்வுள்ளவன் நிச்சயமாக தக்வாதாரியாக இருக்கின்றான் என்று அர்த்தம். ஆசைகளை கட்டுப்படுத்தும் ரமழான் மாதம் வெறுமனே நோன்பு பிடிப்பதால் அந்த மாற்றத்தை தரமாட்டாது.

ஆசைகளை அடக்குவதற்காக நாம் வலிந்து பல பயிற்சிகளை செய்ய வேண்டும் என்று நோன்பு எதிர்பார்க்கின்றது. அந்த வகையில்தான் நோன்பாளி பொய் பேசக் கூடாது, அடுத்த சகோதரனை திட்டக் கூடாது, பிறர் சண்டைக்கு இழுத்தால் வலிந்து நான் நோன்பாளி எனப் பதில் கூறவேண்டும் போன்ற சில உதாரணங்களை நபி மொழியில் நாம் காண முடிகிறது.

எனவே நோன்பு ஆசைகளை அடக்குவதற்கும் மனக்கட்டுப்பாட்டுடன் நடப்பதற்கும் அல்லாஹ்வுக்கு மாத்திரம் அடிமைப்பட்டு வாழ்வதற்கும் மற்றும் இறையச்சத்தை வளர்த்துக் கொள்வதற்காகவும் கடமையாக்கப்பட்டுள்ளது.

உண்மையில் நோன்பு பாவத்தில் தோய்ந்துள்ள உள்ளத்தை சுத்திகரிப்பதற்கும், ஆன்மீக உணர்வை அதிகரிப்பதற்கும், காம உணர்வை கட்டுப்படுத்துவதற்கும் பெரிதும் உதவுகிறது.

கட்டுப்பாடின்றி வயிற்றை நிரப்பும் பேராசை, மிருகத்தனமான காம இச்சை, ஷைத்தானிய கோபாவேசம், கடிவாளமில்லாத நாவு என்பன சந்தேகமின்றி மனிதனை ஆட்டிப்படைக்கும் ஆசைகளாகும். அந்த ஆசைகளை கட்டுப்படுத்தும் வகையில் மனதை இயக்கும் சக்தியாகவும் சிகிச்சையளிக்கும் பயிற்சிப் பாசறையாகவும் ரமழான் தொழிற்படுகிறது. எனவே ரமழான் வாழ்வைப் பாதுகாக்கும் சிம்னியாகும்.

# ஆன்மீக அடித்தளமில்லாத மானுட விழுமியங்கள் நிலைப்பதில்லை

• மஸிஹுத்தீன் இனாமுல்லாஹ்

எமக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கும் இடையில் இருக்கின்ற உறவுகளில் இபாதத்துகளில், வணக்க வழிபாடுகளில், திக்ரு அவ்ராதுகளில் அசிரத்தையாக ஈடுபடும் பொழுது கவனயீனம், சோம்பல், கடமைக்காக செய்வது, பேருக்காக, புகழுக்காக அல்லது பொடுபோக்கு ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருந்தாலும் ஒரு பிரதானமான காரணம் அல்லது அறியாமை இருக்கின்றது.

உண்மையில் மேலே சொல்லப்பட்ட வழிபாடுகளில் எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கு எந்த எதிர்பார்ப்பும் தேவையும் கிடையாது. அவற்றின் பிரதிபலன்கள் எமது அன்றாட தனிப்பட்ட, குடும்ப, சமூக, தேசிய வாழ்வில் எமக்கு ஹிதாயத்தையும், ரஹ்மத்தையும், பறக்கத்தையும் நிறைவாக பெற்றுத் தருகின்ற ஆன்மீக அடித்தளங்கள் என்பதனை எம் ஆழ் மனதில் கொண்டு வரத் தவறி விடுகின்றோம்.

அதே போன்றே எமக்கும் அல்லாஹ்வின் அடியார்களுக்கும் இடையில் உள்ள உறவுகளில் எமது உயரிய ஒழுக்க விழுமியங்கள், பண்பாடுகள், பரோபகாரம், தாராளத் தன்மைகள், தான் தர்மங்கள் என்பவற்றில் கூட நாம் பொடுபோக்காக, கவனயீனமாக இருப்பதற்கும் பல காரணங்கள் இருந்தாலும் பிரதானமான காரணம் ஒன்று இருக்கின்றது.



அவற்றை நாம் பிறருக்காக செய்கின்றோம், எமக்கு ஏது நன்மை இருக்கின்றது, நாம் ஏன் முந்திக் கொள்ள வேண்டும் என்று சுய நலமாகவும், அகங்காரமாகவும் நாம் நடந்து கொள்கின்றோம் அல்லது பேருக்காக புகழுக்காக செய்கின்றோம்.

உண்மையில் எம்மிடமிருந்து புறப்படும் ஒவ்வொரு சொல்லும் செயலும் எமது அன்றாட தனிப்பட்ட, குடும்ப, சமூக, தேசிய வாழ்வில் எமக்கு ஹிதாயத்தையும், ரஹ்மத்தையும், பறக்கத்தையும் நிறைவாக பெற்றுத் தருகின்ற ஆன்மீக, பண்பாட்டு அடித்தளங்கள் என்பதனை எம் ஆழ் மனதில் கொண்டு வரத் தவறி விடுகின்றோம்.

எமக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கும் இடையில் இருக்கின்ற உறவுகளாக இருந்தாலும் சரி, எமக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அடியார்களுக்கும் படைப்புகளிற்கும் இடையில் உள்ள உறவுகளாக இருந்தாலும் சரி அவை எமது மறுமை வாழ்வில் மாத்திரமன்றி இவ்வுலக வாழ்விலும் நேரிடையானதும் எதிர் மறையானதுமான தாக்கங்களை விளைவுகளை கொண்டு வருகின்ற பிரபஞ்ச நியதிகளின் (கழா கத்ரின்) [illegible]

(நபியே!) நியாயத் தீர்ப்பைப் பொய்ப்பிக்கின்றானே அவனை நீர் பார்த்தீரா? பின்னர் அவன்தான் அநாதைகளை விரட்டுகிறான். மேலும், ஏழைக்கு உணவளிப்பதின் பேரிலும் அவன் தூண்டுவதில்லை. இன்னும், (கவனமற்ற) தொழுகையாளிகளுக்குக் கேடுதான். அவர்கள் எத்தகையோர் என்றால் தம் தொழுகையில் பராமுகமாக(வும், அசிரத்தையாக)வும் இருப்போர். அவர்கள் பிறருக்குக் காண்பிக்(கவே தான் தொழு)கிறார்கள். மேலும், அற்பமான (புழங்கும்) பொருள்களைக் (கொடுப்பதை விட்டும்) தடுக்கிறார்கள். (ஸூரத்துல் மாஊன்)

இதய சுத்தியுடன் கூடிய அழகிய ஆன்மீக அடித்தளங்கள் ஆழமாக இடப்படாத மனித வாழ்வில் உயரிய மானுட விழுமியங்கள் அழிந்து போகின்றன.

பிரபஞ்ச நியதிகளுடன் இயைந்து செல்கின்ற பகுத்தறிவும், மனச்சாட்சியும், உள்ளுணர்வுகளும் அல்லாஹ்வின் அளப்பரிய அருட்கொடைகளே. அங்கிருந்தே மதங்கள் தாண்டிய மனிதாபிமானம் ஊற்றெடுக்கின்றது. உயரிய மானுட விழுமியங்கள் பேணிப் பாதுகாக்கப்படுவதற்கான ஆன்மீக அடித்தளங்களையும் உச்ச வரம்புகளையுமே அருளப்பட்ட சன்மார்க்கங்கள் போதிக்கின்றன.

"இன்னும், எவர் (அல்லாஹ்வின் பாதையில்) உழைக்கிறாரோ அவர் நிச்சயமாகத் தமக்காகவே உழைக்கிறார். நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தார் (உதவி எதுவும்) தேவைப்படாதவன்."

"ஆகவே, எவர்கள் ஈமான் கொண்டு நல்ல அமல்கள் செய்கிறார்களோ அவர்களுடைய தீங்குகளை அவர்களை விட்டும் நிச்சயமாக நீக்கி விடுவோம்; இன்னும், அவர்கள் செய்த நன்மைகளுக்கு அவற்றை விட மிக்க அழகான கூலியை, நிச்சயமாக நாம் அவர்களுக்கு கொடுப்போம்." (ஸூரத்துல் அன்கபூத் 6,7)

ஆன்மாக்களை வெல்லுகின்ற அறப்பணிக்கு இஸ்லாம் ஆயுதங்களால் மேற்கொள்ளப்படும் அறப்போரினை விட அதிக முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுத்துள்ளது.

ஆழமான ஆன்மீக நம்பிக்கைகளின் அடித்தளத்தில் உறுதியாக கட்டி எழுப்பப்பட்ட தனிமனித ஆளுமைகள் அணு குண்டுகளை விடவும், கனரக ஆயுதங்களை விடவும், யுத்த விமானங்களை விடவும்,

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமகால பிக்ஹ் பிரச்சினைகள்

# கடன் அட்டையை வரையறைகளுடன் பயன்படுத்தல்




கடன் எந்தவொரு இலாபத்தினையும் பெற்றுத் தருவதனை அடிப்படையாகக் கொண்டிருத்தல் ஆகாது. இது மாலிக் மத்ஹபின் உறுதியான நிலைப்பாடாகும். "அளவிலோ பண்பிலோ கூடுதலாக அல்லது சிறந்ததாக திருப்பித் தர வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் கடன் வழங்கப்படின், மொத்த உடன்படிக்கையுமே செல்லுபடியற்றதாக மாறிவிடும். கடன் எடுத்தவரிடமிருந்து கடன் கொடுத்தவர் கடனுக்குப் பிரதியீடாக மேலதிகமாக ஒரு தொகையையோ பொருளையோ பெற்றிருப்பின் அதனைக் கடன் எடுத்தவரிடமே திருப்பி ஒப்படைப்பது வாஜிபாக மாறிவிடுகின்றது.

இலாபத்தை நிபந்தனையாக வைத்து வழங்கப்படுகின்ற எந்தவொரு கடன் கொடுக்கல் வாங்கலும் செல்லுபடியற்றதாகவே அமையும். இக்கருத்தில் ஷாபி மத்ஹபினரும் மாலிக் மத்ஹபினரும் கருத்தொருமைப்படுகின்றனர்.

கடன் அட்டையில் இலாபத்தை அல்லது வட்டியை நிபந்தனையாக வைத்தே கடன் வழங்கப்படுவதனால் முழு உடன்படிக்கையுமே செல்லுபடியற்றதாகவே கருதப்பட வேண்டும். அதனைப் பயன்படுத்துவதும் ஹராமானதாகவே அமையும் என இத்தரப்பினர் வாதாடுகின்றனர்.

இக்கருத்துக்கு மாற்றமாக பரீராவுடைய சம்பவத்தை ஆதாரமாகக் காட்டுவது பொருத்தமற்றது என இவர்கள் கருதுகின்றனர். ஏனெனில், பரீராவுடைய சம்பவத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனை உண்மையில் ஷரீஆவுக்கு முரணானது, செல்லுபடியற்றது. என்றாலும் அங்கு அந்நிபந்தனையை செல்லுபடியற்றதாக ஆக்கக் கூடிய உரிமையும் அதிகாரமும் கடன் வாங்குபவருக்கு இருந்தது.

கடன் அட்டையைப் பொறுத்தவரை ஷரீஆவுக்கு முரணான வட்டியை அடிப்படையாகக் கொண்ட நிபந்தனை அங்கு காணப்பட்ட போதிலும் அதனை செல்லுபடியற்றதாக ஆக்கக் கூடிய உரிமை அட்டை உரிமையாளரிடம் இல்லை. குறிப்பிட்ட கால வரையறைக்குள் கடன் தொகையை செலுத்தத் தவறும் பட்சத்தில் விரும்பியோ விரும்பாமலோ வட்டியுடன் சேர்த்தே அக்கடனை செலுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவார். ஏனெனில், அது ஷரீஆவின் பார்வையில் அனுமதிக்கப்படாவிட்டாலும் பொதுவாக, நாட்டின் சட்ட ஒழுங்கின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவே காணப்படுகின்றது.

எனவே, கடன் அட்டை தொடர்பில் காணப்படும் இந்த செல்லுபடியற்ற நிபந்தனை முழு உடன்படிக்கையையும் செல்லுபடியற்றதாகவே ஆக்கி விடுகின்றது என்பதே இவர்களின் வாதமாகும்.

கடன் அட்டைகள் மூலம் எதிர்பார்க்கப்படும் பாதுகாப்பு, இணைய வழி வியாபாரம் போன்ற அனுகூலங்களை இன்று பற்று அட்டை (Debit Card) மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். எனவே, கடன் அட்டையை நோக்கிச் செல்ல வேண்டிய தேவையோ நிர்ப்பந்தமோ இல்லை என்பதுதான் இவர்களின் நிலைப்பாடாகும்.

அல்குர்ஆன் வட்டியை அல்லாஹ்வுடன் போர் தொடுப்பதோடு ஒப்பிட்டு, கடுமையாக எச்சரித்துள்ளது. ஹதீஸ்களும் வட்டி குறித்து கடுமையாக எச்சரித்துள்ளன. அத்தகைய வட்டியுடன் சம்பந்தப்படுத்தியே கடன் அட்டை உடன்படிக்கை நிகழ்வதாலும், கடன் அட்டை ஆடம்பரமான, அனாவசியமான செலவுகளை தூண்டக் கூடியதாக இருப்பதனாலும் எந்தவொரு வகையிலும் வங்கிக்குக் கடன்பட்ட நிலையில் மரணிக்கக் கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தும் என்பதனாலும் இது தொடர்பில் பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்கள் கடுமையான நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்.

ஷெய்க் முஸ்தபா அஹ்மத் ஸர்கா, ஷெய்க் அலி அஸ்ஸாலூஸி, ஷெய்க் ஸாலிஹ் உஸைமின், ஷெய்க் முஹம்மத் முக்தார் அஸ்ஸலாமி போன்றோர் இதனை ஆதரிக்கின்றனர். அத்தோடு விற்பனையாளர்கள் கடன் அட்டையைப் பெற்றுக்கொண்டு வாடிக்கையாளர்களுக்குப் பொருட்களை விற்கும்போது பொருட்களது பெறுமானத்தின் ஒரு குறிப்பிட்ட வீதம் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும். இது வட்டியாகக் கொள்ளப்பட மாட்டாது என்பது இந்த அறிஞர்களின் நிலைப்பாடாகும்.

எவ்வாறாயினும் நிர்ப்பந்தமான சூழ்நிலையில் கடன் அட்டைகளைப் பயன்படுத்தியே ஆக வேண்டும் என்ற நிலை ஏற்படும் போது ஷரிஆ அது குறித்து கொண்டுள்ள நிலைபாபடு என்ன என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

# ஐஸன் குர்ஸான்

1963 இல் துருக்கியில் பிறந்த ஐஸன் குர்ஸான் அரசியல் களத்தில் பிரபலமானவர். நவீன துருக்கியில் ஹிஜாப் அணிந்த முதல் அமைச்சரும் அவரே. முன்னாள் பிரதமர் அஹ்மத் தாவூத் ஒக்லூ அரசாங்கத்தில் குடும்ப மற்றும் சமூகக் கொள்கைகள் அமைச்சராக குர்ஸான் பதவி வகித்துள்ளார்.

துருக்கியிலுள்ள புர்தூர் நகரில் பிறந்த இவர், அங்குள்ள ஆரம்ப இடைநிலைப் பாடசாலைகளில் தொடக்க நிலை கல்வியைப் பெற்றார். 1986 இல் அனாதுலு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறினார். அவர் கற்றது தொலைத் தொடர்பாடல் பீடமாகும். 1987/89 வரையான காலப் பகுதியில் கல்வித் தொடர்பாடல் மற்றும் திட்டமிடல் எனும் தொனிப்பொருளில் தனது முதுகலைமானிப் பட்டத்தை அவர் பெற்றார்.

பின்னர் கல்வித் தொழில்நுட்பம் எனும் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட குர்ஸான், 1990 முதல் 2005 வரையான 15 வருட காலத்தில் அனாதுலு பல்கலைக்கழகத்தில் கல்விப் பீடத்தில் ஓர் தொழின்மைசார் ஆய்வாளராகவும் பணியாற்றியுள்ளார். அப்பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ள குர்ஸான், கல்வித் துறை சார்ந்த பல்வேறு நூல்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக கற்றல்-கற்பித்தல், கல்வியியல் தொலைத் தொடர்பாடல், தொழில்நுட்பம் சார் உளவியல் மற்றும் குடும்பக் கல்வி போன்ற துறைகள் அவரது அக்கறைக்குரிய ஆய்வுப் புலங்களாகும். தற்போது ஸ்தன்பூல் நகரிலுள்ள ஸ்தன்பூல் வணிகப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

குர்ஸானுக்கு அரச நிர்வாகத் துறையிலும் பரந்துபட்ட அனுபவங்கள் உள்ளன. 2006 முதல் 2012 வரையிலான 5 ஆண்டுகள் துருக்கியின் பிரதமர் அலுவலகத்தில் குடும்பம் மற்றும் சமூக ஆய்வுப் பிரிவின் பொது முகாமையாளராகப் பணியாற்றிய அவர், 2011 முதல் 2013 வரை குடும்ப மற்றும் சமூகக் கொள்கைகள் அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றினார்.

மார்க்கத்திற்கும் சமூகத்திற்கும் உதவாத கல்வி பயனற்றது எனும் கருத்தை தனது டுவிட்டரில் வெளியிட்டமை துருக்கியில் ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியது. எனினும், அந்தக் கருத்தில் தான் உறுதியாக இருப்பதாக அவர் தெரிவிக்கின்றார். எதிர்க்கட்சியின் ஊடகங்கள் ஹிஜாப் அணிந்த அவரை பிழையாகச் சித்தரித்தன.

தாவூத் ஒக்லூ பிரதமராக இருந்த காலத்தில் ஐஸன் குர்ஸான் குடும்ப மற்றும் சமூகக் கொள்கைகளுக்கான அமைச்சராகப் பணியாற்றினார். தாவூத் ஒக்லூ அவர்களே இவருக்கான நியமனத்தை வழங்கியவர்.

3 குழந்தைகளின் தயாரான குர்ஸான், இளைஞர்களும் கல்வியும் என்ற அமைப்பின் ஸ்தாபக உறுப்பினராவார். துருக்கியின் ஜனாதிபதி ரஜப் தையிப் அர்தூகான் குறிப்பிடும் குறைந்தது மூன்று குழந்தைகள் திட்டத்தின் கொள்கைச் சிற்பி ஐஸன் குர்ஸான் என்றே கருதப்படுகின்றது. அவர் குடும்பவியல் அமைச்சராகப் பணியாற்றியபோது இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

1980களுக்குப் பின்னர் இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து அரச நிறுவனங்களில், பல்கலைக்கழகங்களில் ஹிஜாபுக்கு தடைவிதிக்கப்பட்டது.

2008 இல் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் ஹிஜாப் தடைச் சட்டம் நீக்கப்பட்டது. எனினும், ஹிஜாப் அணிந்த உயர் அரச நிர்வாகிகளை வித்தியாசமாக நோக்கும் பார்வை துருக்கியில் நீடிக்கவே செய்கின்றது. எதிர்க்கட்சிகளின் அந்தப் பார்வைக்கு உட்பட்டவரே ஐஸன் குர்ஸான். நவீன துருக்கியில் ஹிஜாப் அணிந்த முதல் பெண் அமைச்சர் என்ற பெருமை அவருக்குள்ளது.




# குழந்தைகளிடம் வன்மத்தை வளர்க்கும் காணொளிகளும் கணினி விளையாட்டுக்களும்

நாகரிக உலகின் மறுபக்கம் மிகக் குரூரமாகவே உள்ளது. மனிதன் மனிதனைக் கொல்வதும் பெண்கள் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்படுவதும் பல்வேறு விதமான ஆயுத வன்முறைகள் காணொளிகளாக பதிவுசெய்யப்பட்டு, மக்கள் அவற்றை பொழுதுபோக்கிற்காகப் பார்த்து ரசிக்கும் கேடுகெட்ட நிலைமை இன்றைய உலகில் சர்வ சாதாரணம்.

குழந்தைகளுக்கு கார்டூன்களை அனுமதிக்கலாமா என்ற வாதம் நீடித்துச் செல்லும் நிலையில், வன்முறைகளைப் பிரதிபலிக்கும் காணொளிகள் மற்றும் கணினி விளையாட்டுக்களை பெற்றார் அவர்களின் பார்வைக்கு விடுவது அவர்களது உள்ளங்களில் வன்மத்தை வளர்க்கவே காரணமாகும். கணினித் திரையில் தோன்றும் வன்முறைக் காட்சிகள் குழந்தைகளின் ஆழ்மனதில் பதியவும் செயற்பாடாக மாறவும் வாய்ப்புள்ளது என்பதை உளவியல் ஆய்வுகள் நிறுவியுள்ளன.

தொலைக்காட்சியில் காண்பதை நடத்தையில் வெளிப்படுத்தல் 50 வீதம் சாத்தியமானது என அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு கூறுகிறது. எந்தக் களங்கமும் அற்ற குழந்தை உள்ளத்தில் ஆரம்பத்தில் பதியும் இத்தகைய காட்சிகள், அவை இளைஞர்களாகவோ யுவதிகளாகவோ வளரும் பட்சத்தில்



அவர்களது நடத்தையில் தாக்கம் செலுத்தக் கூடியன.

நவீன தொழில்நுட்பங்களால் விளைந்த பொழுதுபோக்குச் சாதனங்களும் குழந்தைகளிடம் வன்மங்களை வளர்ப்பதற்கு மறைமுகமாக உதவுவதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. தற்காலத்தில் தொலைக்காட்சி இல்லாத வீடுகளே இல்லை. இணைய இணைப்புக்களையும் மிக இலகுவாகப் பெற முடிகின்றது. பல வகையான இலத்திரனியல் கருவிகள் எமக்கு இலகுவாகக் கிட்டுகின்றன. சிறுவர்கள் இத்தகைய இலத்திரனியல் சாதனங்களைக் கையாள்வதற்கு விரைவில் கற்றுக்கொள்கின்றனர்.

தொலைக்காட்சி தொடர் நாடகங்களில், சினிமாப் படங்களில் குடும்ப வன்முறைகள் சித்தரிக்கப்படுகின்றன. நேரடியான சண்டைக் காட்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. பெரியவர்களுடன் இணைந்து சிறுவரும் இக்காட்சிகளை அவதானிக்கின்றனர். இணையங்களில் [illegible] கப்பட்டிருக்கும் பொறிகளில் சிக்கி வயதுக்கு ஒவ்வாத காணொளிகளுக்கு இலக்காககின்றனர்.

போர் வீரர் எதிர்ப்படுவோரை துப்பாக்கியால் சுட்டு முன்னேறிச் செல்வது போன்ற கணினி விளையாட்டுக்கள் பல காணப்படுகின்றன. புள்ளிகளுக்காக கணினியில் தோன்றிய மனிதரை இலக்கு வைத்த சிறுவன், கையில் துப்பாக்கி கிடைத்ததால் அதன் மூலம் மனிதரை இலக்கு வைக்கும் எண்ணம் உருவாக வழிவகுக்கும் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறான நிலைமைகள் குறித்து அமெரிக்கக் குழந்தை நலக் கல்வி நிறுவனம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அதில், தரம் தாழ்ந்த நடவடிக்கைகள் தொடர்பான காணொளிகள், மனிதனை சுட்டுக் கொல்வதாக அமையும் கணினி விளையாட்டுக்கள் என்பன அவற்றைப் பார்வையிடும் சிறுவனின் உள்ளத்தில் வண்மத்தை வளர்ப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 2016 ஜூலை 18 அன்று வெளியான குழந்தை நல மருத்துவ நிறுவனத்தின் அறிக்கையில் இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தாத்தா, பாட்டி வாயிலாக முன்பொரு காலத்தில் நீதிக் கதைகளையும் சுவாரஸ்யமான வரலாற்றுச் சம்பவங்களையும் கேட்டு வளர்ந்த சிறுவர்களுக்கு தற்போது தொலைக்காட்சியும் கணினித் திரைகளும் ஸ்மாட் ஃபோன் விளையாட்டுக்களுமே அடைக்கலமாகியுள்ளன. இதனால் பெற்றோர் அரவணைப்புக் குறைந்து மொழியறிவு வளர்வதற்கான வாய்ப்பும் அற்றுப் போய் விட்டது. மொத்தத்தில் தலைமுறை இடைவெளியின் தாக்கம் அதிகரித்துள்ளது.

பிள்ளைகளோடு இல்லாத பெற்றோர்கள், தொழிலுக்காக வெளிச் செல்பவர்கள் இதில் மிகுந்த நிதானத்துடன் இருக்க வேண்டும். குழந்தைகளின் ஒட்டுமொத்த நடத்தையையும் இதுவே தீர்மானிக்கின்றது. 6 வயதிற்குக் குறைவான சிறுவர்கள் காட்சித் திரைகளில் காணும் தோற்றத்திற்கும் வாழும் யதார்த்த சூழ்நிலைக்கும் இடையிலான வேறுபாட்டை அறியாதவர்களாக இருக்கின்றனர்.

எனவே, வன்முறைக் காட்சிகளைப் பார்வையிடும் கள்ளம் கபட மற்ற சிறுவர்கள் பெரியவர்களான பின்னர் தாம் பார்த்த காட்சித் திரைகளை தமது சூழலில் பிரயோகித்தப் பார்க்க முயல்கின்றனர். இதுவே நாம் அன்றாடம் செய்தி ஊடகங்கள் வாயிலாகக் கேள்விப்படும் வன்முறைகளாக அமைகின்றன. இந்நிலையை மாற்றுவதற்கான சூழல் குடும்பங்களிலிருந்தே கட்டியெழுப்பப்பட வேண்டும். பிள்ளைகளை ஊடகங்கள் குறித்து பொருத்தமாக நெறியாள்களை செய்வது பெற்றோரின் பொறுப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதிக்கப்பட்ட... (01ம் பக்கத் தொடர்)

பலந்த, நேபட, வெலிப்பன்ன பிரதேசங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வியாங்கல்ல பிரதேசத்தில் 227 வீடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இரண்டு வீடுகள் முழு மையாகச் சேதமடைந்துள்ளன. பாடசாலைக் கட்டடமும் தளபாடங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

பலந்த பிரதேசத்தில் 76 குடும்பங்கள் மொத்தமாக தமது உடைமைகளை இழந்துள்ளனர். நேபட பள்ளிவாசலும் சேதத்துக்குள்ளாகியுள்ளது. மாத்தறை மாவட்டத்தில் திக்வல்லை மின்ஹாத் தேசிய பாடசாலையும் நீரில் மூழ்கியுள்ளது. இரத்தினபுரி மாவட்டத்திலும் எஹலியகொட முஸ்லிம் கிராமம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. காலி மாவட்டத்தில் போர்வையில் (கொடபிட்டிய) 300 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான உலர் உணவுப் பொதிகள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்டு வருகின்றன. பள்ளிவாசல்களிலும் பொது இடங்களிலும் தஞ்சமடைந்தவர்கள் வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் என எமது பிராந்திய செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப் பட்ட மக்கள் வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாலும் அவர்கள் அங்கு இயல்பு வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாத அளவுக்கு அவர்களது இருப்பிடங்கள் சேதமடைந்துள்ளன.

மானசீகமாகவும் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள இவர்களது இருப்பிடங்களை சுத்திகரித்துக் கொடுப்பது தான் இவர்களை இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பச் செய்வதற்கான முதற் பணியாகும். நாட்டின் பலபகுதிகளிலும் இருந்து வந்த தொண்டர்களின் உதவியால் நாங்கள் அந்த முயற்சியில் இறங்கியிருக்கின்றோம். சுத்திகரிப்புப் பணியில் இன்னும் பல சமூக அமைப்புக்களும் தனிநபர்களும் இணைய வேண்டும் என எதிர்பார்க்கின்றோம் என இடர் தவிர்ப்புக்கும் மீட்புக்குமான ஆசிய வலைப் பின்னலின் (ADRRN) இலங்கைப் பங்காளரான MFCD நிறுவனத்தின் தலைவர் ஹனான் ஹுஸைன் தெரிவித்தார்.

## மதுபானத்துக்கும்... (01ம் பக்கத் தொடர்)




செலவிடும் தொகை 72 பில்லியன் ரூபா என்று சுகாதார அமைச்சர் ராஜித கூறியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் புகைப்பொருள் உற்பத்தி நிறுவனங்கள் வருடம் ஒன்றுக்கு வரியாக அரசுக்கு 269 பில்லியன் ரூபாவை வழங்குகின்றன. சிகரெட் புகைக்கும் இருவரில் ஒருவர் நேரடியாகச் சிகரட் பாவனையாலேயே உயிரிழக்கின்றார். இலங்கையில் மட்டும் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் 3 பேர் என நாளொன்றுக்கு 72 பேரையும், வருடாந்தம் 26 ஆயிரத்து 280 பேரையும் புகைப்பொருள் கம்பனிகள் கொலை செய்கின்றன என்றும் சுகாதார அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

சிகரெட் புகைக்கும் நால்வரில் ஒருவ× ருக்குச் சிகரெட் பாவனையாலேயே பாலியல் பலவீனம் ஏற்படுகிறது. பிரிட்டனில் நடத்தப்பட்ட ஆய்வில் 30 தொடக்கம் 50 வயதினரிடையே ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் சிகரெட் பாவனையின் காரணமாகப் பாலியல் பலவீனத்திற்கு உட்பட்டுள்ளனர் என்று ஆய்வுகள் நிரூபித்துள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

இதேபோன்று இலங்கையர்கள் சாராயம் குடிப்பதற்காக நாளொன்றுக்குச் செலவிடும் தொகை 197 மில்லியன் ரூபா (சுமார் 20 கோடி) என்று சாராய உற்பத்தி நிறுவனத்தின் கடந்த வருட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையர்கள் பியர் குடிப்பதற்காக நாளொன்றுக்குச் செலவிடும் தொகை 100 மில்லியன் ரூபா (10 கோடி ரூபா) என்று காசன் கம்பர்பேஜ் நிறுவனம் கடந்த வருட அறிக்கையில் கூறியுள்ளது.

மதுசாரத்தினால் இலங்கை அரசுக்கு 60 பில்லியன் ரூபா வரியாக கிடைக்கப் பெறுவதோடு மதுசாரப் பாவனையினால் நோய்களுக்கு உள்ளானவர்களுக்கு மருத்துவச் செலவாக 212.6 பில்லியன் ரூபாவைச் செலவிடவேண்டியுள்ளது என்று மதுசாரம் மற்றும் புகையிலை தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் மருத்துவர் பாலித அபேகோன் கூறியுள்ளார்.

மதுசாரக் கம்பனிகளினால் வருடமொன்றுக்கு 23 ஆயிரம் இலங்கையர்கள் அதாவது நாளொன்றுக்கு 65 பேர் கொலை செய்யப்படுகின்றனர் என்று மற்றொரு அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவற்றின்படி உலகலாவிய ரீதியில் மதுசாரக் கம்பனிகள் வருடமொன்றுக்கு 390 இலட்சம் மக்களைக் கொன்று குவிக்கின்றன என்று மதுசாரம் மற்றும் புகையிலை தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் மருத்துவர் பாலித அபேகோன் கூறினார்.

## புதிய கட்சிகளுக்கான... (01ம் பக்கத் தொடர்)



இன்று நீர்கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் புதிய வாக்காளர்கள் 15 பேருக்கு வாக்காளர்களாக பதிவு செய்தமைக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. புதிய வாக்காளர்களை பதிவு செய்வதற்கான படிவங்கள் கிராம சேவையாளர் ஊடாக தற்போது வீடு வீடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

1999 ஜூன் 01 ஆம் திகதிக்கு முன்னர் பிறந்தவர்கள் இந்த வருட வாக்காளர் இடாப்பில் கட்டாயமாக தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒரு பிரஜை என்ற வகையில் தமக்குள்ள வாக்குரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இளைஞர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். முஹம்மத் தெரிவித்தார்.

வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பதிவு நடவடிக்கைகள் நாடாளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றன. இதேவேளை புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளும் நடைபெற்று நிறைவடைந்துள்ளதாக தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## முஸ்லிம் விரோத... (01ம் பக்கத் தொடர்)

134 வெளிநாட்டுத் தூதுவர்களுடன் வெளிவிவகார அமைச்சில் நடந்த ஒன்றுகூடலின் பின்னர் 24 நாடுகள் உதவி வழங்க சம்மதித்துள்ளன. மூன்று இலட்சம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு கொரியா இணக்கம் தெரிவித்துள்ளது. ஏனைய முஸ்லிம் நாடுகள் எதுவும் உதவியளிப்பதாகத் தெரிவித்ததாக இதுவரை தகவல் கிடைக்கவில்லை.



## ஆன்மீக... (12 ம் பக்கத் தொடர்)

போர்க் கப்பல்களை விடவும் பலமானவை என்பதனாலேயே இந்த உம்மத்து அது சுமந்து நிற்கும் மனித குலத்திற்கான மகத்தான தூது இலக்கு வைக்கப்படுகின்றது.

இஸ்லாமிய பெறுமானங்கள் அறிவு பூர்வமான, விஞ்ஞான பூர்வமான இயற்கையோடு இயைந்து செல்கின்ற தர்க்க ரீதியாக நிரூபிக்க முடியுமான மென் பொருட்களாக மாத்திரம் இருக்க துரதிஷ்டவசமாக முஸ்லிம் உலகு இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் கோரமான அகோரமான வியாக்கியானங்களை உலகின் முன் வைத்துக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு விசுவாசியும் தனது சுற்றுச் சூழலில் ஆன்மீக பண்பாட்டு பக்குவங்களினாலும்,உயரிய மானுட விழுமியங்களினாலும் நேர்மறையான கதிர்வீச்சைப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நடைமுறை வியாக்கியானமாக மாறுவதே இஸ்லாமிய தஃவாவின் முதலாவது படியாகும்.

உயரிய இஸ்லாமிய குணாதிசயங்களை, பண்பாடுகளை, ஒழுக்க விழுமியங்களை, தயாள குணங்களை, தாராளத் தன்மைகளை, பெரும்தன்மைகளை அழகான இஸ்லாமிய தனிநபர், குடும்ப, சமூக, அரசியல், பொருளாதார வாழ்வு நெறிகளை செயல் வடிவில் பிரதிபலிக்கின்ற ஒவ்வொரு விசுவாசியும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் உண்மை பிரதிநிதிகள் கலீபாக்கள் ஆவர்.

எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கும் ஒவ்வொரு ஆன்மாவிற்கும் இடையில் உள்ள உறவு புனிதமானது, அது மனிதனுக்கு இவவுலக பிறவிப்பயனை அடைவதற்கு வழிகோலுவதன் மூலம், நிரந்தரமான மறுஉலக ஈடேற்றத்தை பெற்றுத் தருகின்றது.

அல்லாஹ்விற்கும் அடியானுக்குமிடையில் உள்ள உறவு பலப்படுத்தப்படும் பொழுது எமது ஆன்மீக அந்தஸ்துகள் பக்குவங்கள் அதிகரிக்கின்றன, அல்லாஹ்வின் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அரு காமை, அணுக்கிரகம் என்பவற்றை நாம் அடைந்து கொள்கின்றோம்.

உண்மையில் அவ்வாறு நாம் அடைந்து கொள்கின்ற ஆன்மீக பண்பாட்டு பயிற்சிகள் அந்தஸ்துகள் எமக்கும் அடியார்களுக்குமிடையில் உள்ள உறவுகளில் பிரதிபலிக்கின்ற பொழுது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அன்பு, அருள், அருகாமை, அணுக்கிரகம் என்பவை இன்னும் பன்மடங்காக எமக்கு கிடைக்கின்றன.

ஒரு அடியான் மற்றுமொரு அடியானின் உதவி ஒத்தாசையில் இருக்கு மட்டும் எல்லாம் வல்ல அல்லாஹ் அவனுக்கு துணையாக இருக்கின்றான், மனிதர்களில் அல்லாஹ்விற்கு மிகவும் பிரியமானவர்கள் மனிதர்களுக்கு அதிகம் பயனுள்ளவர்கள், ஒருவரின் இவ்வுலக நெருக்கடியில் உதவுவர்களின் மறு உலக நெருக்கடிகளில் இருந்து விடிவு கிடைக்கின்றது என்றெல்லாம் இனிய இஸ்லாம் எமக்கு கற்றுத் தந்துள்ளது.

ஏழை எளியவர்களுக்கு, தேவையுடையோருக்கு, விதவைகள் அனாதைகளுக்கு, பசி பட்டினியில் வாடுவோருக்கு, கடன் கஷ்டங்களில் இருப்போருக்கு, அங்கவீனர்களுக்கு, கல்வி தொழில் தேடுவோருக்கு என கைகொடுத்து உதவி ஒத்தாசை நல்குவோர் ஆயுளில், செல்வத்தில் எல்லாம் வல்ல அல்லாஹ் பறக்கத்து செய்வதாக வாக்குறுதியளித்துள்ளான்.

எல்லாம் வல்ல அல்லாஹ்வுடன் எமது தனிப்பட்ட உறவுகளை பலப்படுத்திக் கொள்வது போலவே எமது, குடும்ப, சமூக, தேசிய வாழ்வில் நாம் அல்லாஹ்வின் அடியார்களுடனான உறவுகளையும் பலப்படுத்திக் கொள்தல் மூலம், அவர்களின் அன்பை இதயசுத்தியுடனான துஆக்களை வென்று கொள்வதோடு எல்லாம் வல்ல ஏகனாகிய அல்லாஹ்வின் அன்பையும், அருளையும், அருகாமையையும் நாம் அடைந்து கொள்ள முயற்சிப்போமாக.

தனிப்பட்ட வாழ்வில், குடும்ப வாழ்வில், சமூக வாழ்வில் அல்லது பொது வாழ்வில் அவை பிரதிபலிக்கின்ற பொழுது மறு உலக வாழ்வில் நாம் அடையப் பெறுகின்ற ஈடேற்றங்கள் போன்றே இவ்வுலக வாழ்வில் பல்வேறு சிறந்த அடைவுகளை நாம் கண்டு கொள்கின்றோம்.

இதை வேறு ஒரு கோணத்தில் தெளிவுபடுத்துவதாயின் இந்த உயரிய ஆன்மீக பக்குவம் இல்லாத பொழுது இறையச்சமும் நாம் கடமைக்காகவும், பேர், புகழுக்காகவும், சிலவேளை வேறு வழியின்றியும், அழுத்தங்களின் பேரிலும், தர்ம சங்கடங்களுக்காகவும், சமூக அந்தஸ்துக்களுக்காகவும் அல்லது எல்லோரும் செய்கின்றார்களே நாங்களும் செய்யாவிட்டால் குறை வருமே என்றெல்லாம் இதயசுத்தியில்லாது பகட்டுகளுக்காக நாம் காரியங்களை ஆற்றத் தலைப்பட்டு விடுகின்றோம்.

மேற்சொன்ன புறக்காரணிகளின் அழுத்தங்கள் இல்லாத பொழுது; நாம் தனிமையில் அல்லது சமூகத்தை தேசத்தை விட்டும் தூரமாகி இருக்கின்ற பொழுது நாம் செய்ய வேண்டிய நற்பணிகளை அறப்பணிகளை செய்யாது தப்பித்துக் கொள்கின்ற மன நிலை மிகைத்து விடுவதால் எங்களை நாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்க தலைப் பட்டு விடுவோம்.

இவ்வாறான இதய சுத்தியில்லாத செயற்பாடுகள் சீரும் சிறப்புமாக, கண்ணும் கருத்துமாக, அவதானமும் கரிசனையும், அடைவுகள் குறித்த அக்கறையும் இல்லாத, சிலவேளை அடையாளங்களை முதன்மைப் படுத்திய முழுமையடையாத கருமங்களாக மாறிவிடுகின்றன. அதனால் ஈருலகிலும் கிடைக்கக் கூடிய அளப்பரிய நன்மைகளை நாம் இழந்து விடுகின்றோம்.

எல்லோரும் நித்திரையில் இருக்கும் பொழுது நாம் தனித்து எழுந்து அல்லாஹ்வை தஹஜ்ஜுதில் வழி படுகின்ற பொழுது முழுமையான இறை உணர்வும் உளத் தூய்மையும் அவற்றின் உச்ச கட்டத்தில் இருக்கின்றன.

எமது தொழுகை, எமது நோன்பு எமது சக்காத்து, சதக்கா எமது ஏனைய நபிலான வணக்கங்கள் எமக்குப் பெற்றுத் தருகின்ற உயரிய ஆன்மீக பயிற்சிகள், இறையச்சம், உளத்தூய்மை மனதை ஒருமுகப் படுத்துகின்ற பயிற்சி எமது சோதனைக் களமான துன்யாவின் விவகாரங்களில் பிரதிபலிக்கின்ற பொழுதே மறுமையிலும் எமக்கு ஈடேற்றம் கிடைக்கின்றது.

அடையாளங்களுக்கு அப்பால் அடைவுகளை முன்னிலைப் படுத்துகின்ற தனிநபர்களாக, குடும்பங்களாக, குழுக்களாக சமூகங்களாக நாங்கள் மாறுகின்ற பொழுது தஜ்ஜால்களும் போலிகளும் தோற்றுப் போகின்றார்கள்.

## இன விரிசலை... (04 ம் பக்கத் தொடர்)

சுதந்திரத்திற்கு பின்னர் ஒரு சில சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் முஸ்லிம்களும் சிங்களவர்களும் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வந்தார்கள். புலிப் பயங்கரவாதிகளுக்கு எதிரான போரின் போது முஸ்லிம்கள் தெற்கின் ஆட்சி பீடத்துடன் நல்லுறவுகளைப் பேணி வந்தார்கள். முஸ்லிம் நாடான பாகிஸ்தான் போருக்கான ஆயுத உதவிகளை வழங்கியிருந்தது.

போருக்குப் பின்னர் இலங்கை தொடர்பில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போது முஸ்லிம் நாடுகள் இலங்கையுடன் கைகோர்த்தன. முஸ்லிம்கள் என்போர் எமது எதிரியல்லாமல் தோழர்களாகவே செயற்பட்டு வந்துள்ளார்கள் என்பதற்கு அவை சிறந்த சான்றுகளாகும்.

எமது நாட்டில் வசிக்கும் சகோதர முஸ்லிம் மக்களுக்கு எதிராக பொதுபலசேனா கட்டவிழ்த்து விடுகின்ற இனவாதச் செயல்களை நாட்டின் முழுச் சனத்தொகையில் சிறியளவினரே அங்கீகரிக்கிறார்கள். சிங்கள பௌத்தர்களின் காவலர்கள் என்பதாக பீற்றுகின்ற பொதுபல சேனா அமைப்பிற்கான அங்கீகாரத்தை கடந்த பொதுத் தேர்தலில் முழு நாடும் அவதானித்தது. அவ்வமைப்பின் தலைவர் ஞானசார களுத்துறை மாவட்டத்தில் போட்டியிட்டு ஐயாயிரம் வாக்குகளை மாத்திரமே பெற்றுக்கொண்டார்.

நாட்டிற்குள் அங்கீகாரமற்ற பொதுபல சேனாவை விட சிறந்ததொரு கடவுள் தமக்கில்லையென இந்நாட்டிற்கு வெளியில் உள்ள ஒரு சில சிங்கள பௌத்தர்கள் நினைக்கிறார்கள். தாங்கள் வசிக்கின்ற நாடுகளில் சிறுபான்மையினராக உள்ள இவ் இலங்கையர்களுக்கு அடுத்த சந்ததியினருக்கு தமது இனத்தை மேலாகக் காண்பிக்க வேண்டிய தேவை உள்ளது.

வாகனங்களையும் வசிப்பதற்கு அதிக வசதிகளுடன் கூடிய ஆராமைகளையும் அமைத்துக் கொடுத்து தமது குறிக்கோளுக்காக முன்நிற்கும் தேரர்களை பராமரிக்கும் பொறுப்பை இவர்கள் ஏற்றுள்ளார்கள். அவ்வர்த்தத்தில் நோக்கும் போது பொதுபல சேனா பிக்குகளின் நடத்தைகள் எவ்விதத்திலும் எளிமையானதல்ல. அவர்கள் கேள்விக்கான வழங்கீட்டை மாத்திரமே கொடுக்கிறார்கள்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் நாட்டின் சகல இனங்களுக்கு மத்தியிலும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் சந்தர்ப்பம் உருப்பெற்றிருந்தது. நாட்டின் பிரதான இரு அரசியல் கட்சிகளுக்கு மத்தியிலும் புரிந்துணர்வு ஏற்பட்டமையானது நிலைமையை இன்னும் சீராக்கியிருந்தது. இப்பின்னணியில் பொதுபல சேனாவின் நடத்தை எவ்வகையிலேனும் நாட்டின் தேவையுடன் பொருந்துவதில்லை.

இன்னும் சில நாட்களில் இலங்கை தொடர்பாக முக்கிய பல தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஐரோப்பிய ஆணைக்குழு பிரசல்சில் ஒன்றுகூடவுள்ளது. பொதுபலசேனாவின் இத்தகைய நடத்தைகள் இன்னும் அதிகரிக்கும் பட்சத்தில் அது பிரசல்சில் இலங்கைக்கு பாதகமாக அமையும். அதனால் இவ்வன்முறையை முதல் கட்டத்திலேயே தோற்கடித்து விட வேண்டும்.

மறுபுறத்தில் பொதுபல சேனா தேரர்களின் இவ்வன்முறை சுயரூபம் அஹிம்சாவாதத்தைப் போதிக்கின்ற பௌத்த மத்திற்கு களங்கத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. ஐரோப்பா உள்ளிட்ட உலக நாடுகளில் பௌத்த மதச் சிந்தனைகள் பிரபல்யம் பெற்று வரும் இத்தருணத்தில் பொதுபலசேனாவின் நடத்தை பௌத்தத்திற்கு களங்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

## ஒழிந்திருக்கும்... (09 ம் பக்கத் தொடர்)

ஒரு சட்டம், சிங்கள வர்களுக்கு ஒரு சட்டம், தலை மழித்த மதகுருவுக்கு ஒரு சட்டம் என்று சட்டத்திலும் ஒழுங்கிலும் காட்டப்படும் பாகுபாடே இனத் துவேசத்தில் வேர்க் காரணமாகும்.

ராவய ஆசிரியர் தலைப்பு சொல்வது போன்று அந்தப் பூதத்தைக் கட்டிப் போட வேண்டும். ஆனால், அமைச்சரின் வீட்டில் அடைக்கலம் புகுந்துள்ள பூதத்தை யார் கட்டிப் போடுவது என்பது தான் பலரும் எழுப்பும் கேள்வி.

மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | |
|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் - 5500.00 |
| 12 இதழ்கள் - ரூபா 600.00 | தனிப் பிரதி - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா - 6500.00 |
| 24 இதழ்கள் - ரூபா 1200.00 | ஒரு வருடம் - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா - 4700.00 |
| | | | சீனா - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777581661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி நீக்கமும் நியாயமும்



காலித் பின் வலீத் (ரழி) அவர்கள் தலைமை ஏற்றுச் சென்ற எல்லாப் போர்களிலும் வெற்றி வாகை சூடினார். எனினும், உமர்(றழி) அவர்கள் ஒரு கடிதத்தின் மூலம் அவரை தளபதி நிலையிலிருந்து பதவி நீக்கம் செய்தார்கள்.

தளபதி காலித் அவர்களுக்கு உமர் பின் கத்தாப் எழுதிக் கொள்வது. இந்த உத்தரவு மூலம் காலித் அவர்கள் தளபதி பதவி யிலிருந்து விலக்கப்பட்டு அவருக்குப் பதிலாக அபூ உதைபா அவர்கள் நியமிக்கப்படு கிறார். உடனடியாக காலித் அவர்கள் பொறுப்புகள் அனைத் தையும், அபூ உதைபா அவர் களிடம் ஒப்படைத்து விட்டு மதீனாவுக்குத் திரும்ப வேண்டும்.

படைவீரர்களிடம் இந்தக் கடிதம் பகிரங்கமாகப் படிக்கப் பட அனைவரும் அதிர்ச்சி யடைந்தனர். காலித் பின் வலீத் (ரழி) அவர்கள் உடனடியாக பொறுப்புகள் அனைத்தையும் அபூ உதைபா அவர்களிடம் ஒப்படைத்து விட்டு மதீனா வுக்குப் புறப்பட்டார்.

மதீனா வந்தடைந்த தளபதி காலித் பின் வலீத்(ரழி) அவர்கள், அவரது நீண்டநாள் நண்பரும், கலீபாவான உமர் (ரழி) அவர்களை காணச் சென் றார். இரு நண்பர்களும் கட்டித் தழுவிக் கொண்டு, குடும்ப நலன்களைப் பரிமாறிக் கொண்டனர். கடைசியாக காலித் பின் வலீத்(ரழி) அவர்கள், நண்பரே, தளபதி பதவியிலி ருந்து நான் ஏன் விலக்கப்பட் டேன் என்பதை அறியலாமா?'' என்று கேட்டார்.

மீள்பார்வை

தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

அதற்கு உமர்((ரழி) அவர் கள், 'உங்களது வீரமும், வெற்றி யும் பொதுமக்களின் கண்ணை மறைப்பதைக் கண்டேன். இறை வனது புகழ்பாட வேண்டிய மக்களின் நாவுகள் உங்கள் புகழ்பாடுவதைக் கேட்டேன். என்னைப் போன்ற சாதாரண மனிதனால் பதவி நீக்கிவிடக் கூடிய சாதாரண மனிதர்தான் காலித் என்பதை பொதுமக்க ளுக்கு உடனடியாக உணர்த்தா விட்டால் நிலைமை மிஞ்சி விடுமென அஞ்சினேன். ஆகவே விலக்கினேன். இதன் மூலம் பொதுமக்களையும், உங்களை யும், என்னையும் கூடத்தான் புகழ் என்ற போதையிலிருந்து காப்பாற்றிவிட்டதாக நம்பு கிறேன்.

நீங்களும் நானும் இறந்து விடக் கூடிய சாதாரண மனிதர் கள். இஸ்லாத்தின் பெருமையோ என்றும் நிலைத்து நிற்க வேண்டி யது என்பது நமது இலட்சியம். அந்தப் பெருமை காலித் இல்லா விட்டாலும், உமர் இல்லாவிட்டா லும் நின்று நிலைக்கும் என்பதை நாம் நிரூபித்தாக வேண்டும் என்றார்.

# ரமழானில் நிகழ்ந்தவை

- ஈஸா (அலை) அவர்களை அவரது சமூகத்தினர் கொலை செய்ய முயற்சித்தபோது, அல்லாஹுதஆலா அவரை வான த்தை நோக்கி உயர்த்திக் கொண்டான். (ஆதாரம்: ஹாகிம்)
- முதல் வஹி இம்மாதத்திலே இறங்கியது. ரமழான் மாதத்தின் 21 ஆம் நாள் செவ்வாய்க் கிழமை முதல் வஹி நபியவர் களுக்கு அருளப்பட்டது. இஸ்லாமிய பிரச்சாரம் இந்த முதல் வஹியுடனே ஆரம்பமாகியது. இது பற்றி அல்குர்ஆனும் பின்வருமாறு கூறுகின்றது: ரமழான் மாதத்தில்தான் அல் குர்ஆன் இறக்கப்பட்டது.
- நபி(ஸல்) அவர்களினை நீண்ட காலம் வளர்த்தவரும், அவ ருக்குப் பக்க பலமாகவும் இருந்த, அவரது சிறிய தந்தை அபூ தாலிப் இம்மாதத்திலே மரணித்தார். நபித்துவத்தின் 12 ஆம் வருடத்தில் ரமழான் மாதத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.
- ஹிஜ்ரி முதலாம் ஆண்டு ரமழான் மாதத்தில் அதான் சொல் லும் முறை ஆரம்பிக்கப்பட்டது.
- முஸ்லிம்களுக்கும் காபிர்களுக்கும் இடையிலான முதலாவது யுத்தம் பத்ர் எனும் இடத்திலே இடம்பெற்றது. ஹிஜ்ரி 02 ஆம் ஆண்டு ரமழான் மாதம் 17 ஆம் நாள் இந்நிகழ்வு இடம் பெற்றது. இப்போரிலே முஸ்லிம்கள் வெற்றி பெற்றார்கள். காபிர்களில் முக்கியமான பல தலைவர்கள் கொல்லப்பட்ட னர். (அபூ ஜஹ்ல் எனப்பட்ட அம்ரு பின் ஹிஷாம், வலீத் பின் முகீரா, உமையா பின் கலப் போன்றோர் அவர்களில் சிலர்.)
- ஹிஜ்ரி 02 ஆம் ஆண்டிலே நபி(ஸல்) அவர்களின் மகளும் உஸ்மான் (றழி) அவர்களின் மனைவியுமான ருகையா (றழி) அவர்கள் மரணித்தார்கள்.
- ஹிஜ்ரி 03 ஆம் ஆண்டு ரமழானில் நபி(ஸல்) அவர்களின் மகள் பாத்திமா (றழி) அவர்கள் ஹஸன் (றழி) அவர்களை பிரசவித்தார்கள்.
- உம்முல் மஸாகின் எனும் சிறப்புப் பெயரில் அழைக்கப்பட்ட ஸைனப் பின்த் குஸைமா (றழி) அவர்களை ஹிஜ்ரி 03 ஆம் ஆண்டு ரமழான் மாதத்தில் திருமணம் செய்தார்கள்.
- நபி(ஸல்) அவர்களின் மனைவியர்களுள் ஒருவரான ஆயிஷா (றழி) அவர்களைப் பற்றி அவதூறு பரப்பப்பட்டமை யிலிருந்து அவர்களை நிரபராதியாக்கும் அல்குர்ஆன் வசனம் அருளப்பட்டது.
- ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு மக்கா வெற்றிகொள்ளப்பட்டது. ரமழான் மாதம் 10 ஆம் நாள் மதீனாவிலிருந்து மக்காவை நோக்கிப் புறப்பட்ட நபி(ஸல்) அவர்கள் ரமழான் 19 ஆம் நாள் மக்காவினுள் நுழைந்து அதனை வெற்றி கொண்டார்கள்.
- சுமார் 50 நாட்கள் நடைபெற்ற தபூக் யுத்தத்திலிருந்து ஹிஜ்ரி 09 ஆம் ஆண்டு ரமழான் மாதத்திலே நபி (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு திரும்பினார்கள்.
- ஹிஜ்ரி 92 ரமழான் மாதத்தில் முஸ்லிம்களால் ஸ்பெய்ன் கைப்பற்றப்பட்டது.
- இமாம் புஹாரி (றஹ்) அவர்கள் ஹிஜ்ரி 256 ரமழான் 30 ஆம் நாளில் மரணித்தார்கள்.
- ஹிஜ்ரி 261 ரமழான் மாதத்தில் பாத்திமிய்யா ஆட்சியாளர்க ளால் ஜாமிஉல் அஸ்ஹர் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- ஹிஜ்ரி 1393 இல் இஸ்ரேலியர்களுக்கு எதிரான போராட்டத்தில் அறபு நாடுகள் தோல்வியடைந்தன.

# அபூ ஜஹ்லை காட்டுங்கள்



அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (றழி) அவர்கள் அறிவிக்கின் றார்கள். பத்ர் யுத்த களத்திலே நான் முதல் அணியில் நின்று போராடிக் கொண்டிருந்தேன். எனக்கருகில் இரண்டு சிறுவர் கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் என்னிடம் வந்து, மிக இரகசியமாக, எனது சிறிய தந்தையே, எனக்கு அபூ ஜஹ்லை காட்டுங்கள் என்றார்.

நான், ஏன், நீங்கள் அவரை என்ன செய்யப் போகின்றீர்கள் என்றேன். அவர், அவன் நபி(ஸல்) அவர்களை ஏசியதாக அறிந்தேன். அவனைக் கண்டால் கொலை செய்து விடுவேன் என்றார். மற்றைய சிறுவனும் அதேபோன்று இரகசியமாகக் கேட்டார். அவரிடமும் அதே கேள்வியைக் கேட்டபோது அவரும் முதலாம் சிறுவன் போன்று பதிலளித்தார்.

நான் அவர்களிடம் பேசிவிட்டு திரும்பும்போதே அபூ ஜஹ்ல் மக்களிடையே இருப்பதைக் கண்டேன். உடனே நான் அவர்களிடம் நீங்கள் தேடிய அபூ ஜஹ்ல் அதோ செல்கிறான் என்றேன். அவர்கள் இருவரும் அவனிடம் விரைவாகச் சென்று அவனை கொலை செய்தார்கள். பின்னர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து ஒவ்வொருவரும் தானே கொன்றதாகக் கூறினார்கள். நபி(ஸல்) அவர்கள், நீங்கள் உங்கள் வாள்களை துடைத்துவிட்டீர்களா? என்றார். அவர்கள் இல்லை என்று கூறினார்கள்.

நபி(ஸல்) அவர்கள் அவர்களது வாள்களை வாங்கிப் பார்த்து விட்டு, நீங்கள் இருவரும்தான் கொலை செய்திருக்கின்றீர்கள் என்றார். அவ்விருவரும் யார் தெரியுமா? அவர்கள், முஆத் பின் அம்ரு பின் ஜமூஹ், முஅவ்வித் பின் அப்ராஹ் ஆகியோராவர்.

# 'வினை' குறும்படமும் மாலிகுல் முல்க் பாடலும்

## ஒரு குறிப்பு



- இன்ஸாப் ஸலாஹுதீன்

மனிதனுடைய உளவியல் கட்டமைப்பில் தாக்கம் ஏற்படுத்தக் கூடிய ஒரு முக்கியமான சாதனமாக சினிமா காணப்படுகிறது. வரலாற்றில் சமூகத்தின் உளவியலை மாற்ற நினைத்தவர்கள் எல்லாம் இதனைக் கையில் எடுத்திருக்கிறார்கள். இதனால் ஏற்பட்ட நல்ல விளைவுகளையும் கெட்ட விளைவுகளையும் உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

இன்றைய உலகில் சினிமாவின் பாவனையும் பயன்பாடும் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. தொழில்நுட்பத்தின் இராட்சத வளர்ச்சியினால் பல்வேறு சாதனங்கள் இன்று இலகுவாகக் கிடைக்கின்றன. இதனைப் பயன்படுத்தி புதிய தலைமுறை காத்திரமான பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

சினிமாவின் ஒரு வடிவமாக குறுந் திரைப்படங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இன்று எண்ணிக்கைகளைக் கடந்து நாளுக்கு நாள் இது அதிகரிக்கின்றமையை இணையத்தைப் பார்க்கும் போது புரிந்து கொள்ளலாம்.

அண்மையில் 'வினை' என்ற குறும்படத்தை இணையத்தில் பார்க்கக் கிடைத்தது. மின்னல் வெளியீட்டகத்தின் மற்றுமொரு படைப்பாக இது வெளிவந்திருக்கிறது. இதற்கு முன்பும் இவர்கள் குறும்பட முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அந்த அனுபவத்தோடு டெங்கு நோய் தொடர்பான விழிப்பூட்டலாக வினை படத்தைத் தயாரித்திருக்கிறார்கள்.

தன் பொறுப்பற்ற தன்மையால் தனது செயலே தனக்கு வினையாக அமைகிறது. டெங்கு நோயினால் தனது மகள் பாதிக்கப்படுவதும் அவர் இறந்து போவதும்தான் கதை. பின்னர் டெங்கை ஒழிக்க அனைவரும் ஒன்றுபடுகிறார்கள்.

ஒரு நல்ல முயற்சி இது. சமூகத்தை பல்வேறு வழிகளில் அறிவுறுத்த வேண்டிய ஒரு நிர்ப்பந்தமான காலத்தில் நாம் வாழ்கிறோம். இதற்குப் பல்வேறு வடிவங்கள் தேவைப்படுகின்றன. குறும்படம் போன்ற ஒரு சாதனத்தை புதிய தலைமுறை நாடிச் செல்வது ஆரோக்கியமானது.

வினை தன் கதையமைப்பில் நேரடித் தன்மையைப் பிரதிபலிப்ப தாகத் தோன்றுகிறது. முதல் கட்டம் சிறந்த முறையில் படமாகி இருக்கின்றது. இரண்டாம் கட்டத்தில் முழுக்க உரையாடல்களால் அதிகரித்திருக்கின்றது. வினை, [illegible] கதை என்ற அம்சத்திலிருந்து நகர்ந்து விழிப்பூட்டல் தன்மையை நேரடியாகப் பிரதிபலிக்கிறது.

வினை திரைப்படத்தில் நடிப்பு நல்ல முறையில் வெளிப்பட்டி ருக்கிறது. பாத்திரத் தேர்வும் சிறந்தது. காட்சி அமைப்புக்களும் பாராட்டும் படி அமைந்துள்ளது. இது போன்ற ஒரு குழுவால் இன்னும் நல்ல படைப்புகளை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை வினை தருகிறது.

எதிர்காலத்தில் நல்ல கதைகளுடன், சிறந்த திரைமொழியுடன் காத்திர மான படைப்புக்களை மின்னல் வெளியீட்டகம் தரும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

வாழ்த்துக்கள் தோழர்களே.



மாலிகுல் முல்க் பாடல்

மின்னல் வெளியீட்டகத்தின் மற்றுமொரு வெளியீடாக மாலிகுல் முல்க் என்ற பாடல் வெளிவந்துள்ளது. அல்லாஹ்வின் மகிமையைப் பேசுவதாக இப் பாடல் அமைந்துள்ளது.

அஸீஸ் எம். பாயிஸின் வரிகளில் பைஸூர் ரஹ்மானின் குரலில் கம்பீரமாக ஒலிக்கிறது பாடல். பைஸூர் ரஹ்மான் நல்ல குரல்வளம் மிக்கவர். இத்துறையில் உள்ளவர்கள் அவரைப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

இது போன்ற துறைகளில் ஈடுபாடுள்ளவர்கள் அதனைச் செய்து பார்க்கலாம் என்பதற்கு இவர்கள் நல்ல உதாரணம்.

கலைத் துறையில் ஈடுபாடுள்ள பலர் வேறு தொழில்கள் செய்பவர்களே. இருந்தாலும் போராட்டம் மிகுந்த வாழ்வில் அவர்கள் எதையாவது சாதிக்க முயற்சிக்கிறார்கள். ஊக்குவிப்பும் உற்சாகமும் மட்டுமல்லாது அங்கீகாரத்தாலும் அவர்களை ஆதரிப்போம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு


## மோ பராஹின் நம்பிக்கை தரும் ஓட்டம்




ஒலிம்பிக் போட்டிகளில் நான்கு தடவைகள் தங்கப் பதக்கம் வென்ற பிரித்தானிய வீரரான மோ பராஹ் மற்றுமொரு புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார். அமெரிக்காவின் ஒரெகன் பிராந்தியத்தில் இடம்பெற்று வரும் டயமன் லீக் போட்டியில் பங்கேற்ற 34 வயதான பராஹ் ஐந்தாயிரம் மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்று ஓட்டத் தூரத்தை 13 நிமிடங்கள் மற்றும் 0.70 செக்கன்களில் நிறைவு செய்துள்ளார். அதன் மூலம் அவர் இந்த வருடத்திற்கான குறைந்த நேரத்தை பதிவு செய்து புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இந்த போட்டியில் எதியோப்பிய வீரரான யொமிப் கெஜெச்சா இரண்டாம் இடத்தையும், கென்ய வீரரான ஜியொபரி கம்வோரர் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். கடந்த ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற வீரரான போல் செலிமோவால் இப்போட்டியில் 7வது இடத்தையே பெற முடிந்தது.

வெளிவந்து விட்டது




## இலங்கை மெய்வல்லுனர் சங்கத்திற்கு புதிய தலைவர்



இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தின் புதிய தலைவராக பாலித்த பெர்ணான்டோ தெரிவாகியுள்ளார். கொழும்பில் இடம்பெற்ற மெய்வல்லுனர் சங்க உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் முன்னாள் தலைவர் சுகத் திலகரத்னவை தோற்கடித்தே இவர் தெரிவாகியுள்ளார். மேஜர் ஜெனரல் பாலித்த பெர்ணான்டோ 79 வாக்குகளையும், சுகத் திலகரத்ன 32 வாக்குகளையும் பெற்றமை விஷேட அம்சமாகும்.

கடந்த காலங்களில் இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தின் செயற்பாடுகள் மந்த கதியில் இடம்பெற்று வந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட நிலையிலேயே இந்தத் தேர்தல் இடம்பெற்றது. இதேவேளை கடந்த காலங்களில் தலைவராக செயற்பட்ட பாலித்த பெர்ணான்டோ மெய்வல்லுனர் சங்கத்தை திறம்பட நடாத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





நீர்கொழும்பு, போருதொட்ட டிவலப்மன்ட் பவுண்டேஷன் (PDF) தன்னார்வத் தொண்டு அமைப்பு, இம்முறை புனித ரமழானில் புனித கடமையான நோன்பை நோற்க அல்லலுறும் குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளது. 5000 இற்கும் அதிகமான குடும்பங்கள் செறிந்து வாழும் பலஹத்துரையில் தெரிவு செய்யப்பட்ட தேவையுடைய 400 குடும்பங்களுக்கான பொதிகள் விநியோகிக்கப்பட்டன. இப்பொதிகளுக்கான அனுசரணையை தனவந்தர்கள், தனி நபர்கள் மேற்கொண்டிருந்தனர். கட்டார் QPA அமைப்பு அரிசிப் பொதிகளுக்கான பூரண அனுசரணையை வழங்கியிருந்தது.

## லா லிகா கால்பந்தாட்டத் தொடர்:
## 33 வது முறையாக பட்டம் வென்றது ரியல் மெட்ரிட்



2017ஆம் ஆண்டுக்கான ஸ்பெய்னின் லா லிகா கால்பந்தாட்டத் தொடரில் ரியல்மெட்ரிட் கழகம் 33 ஆவது தடவையாக சம்பியனாகியுள்ளது. மொத்தம் 20 அணிகள் பங்கேற்ற இத்தொடரில் ஒவ்வொரு அணியும் 2 முறை மோதின. புள்ளிப் பட்டியலில் முன்னிலையில் இருந்த நட்சத்திர வீரர்களை உள்ளடக்கிய ரியல்மெட்ரிட் கழகம் தனது கடைசி லீக்கில் மலாகாவுடன் மோதியது.

போட்டியை சமப்படுத்தினாலேயே பட்டத்தை உறுதி செய்து விடலாம் என்ற நிலையில் களமிறங்கிய ரியல்மெட்ரிட் அணி 2- 0 என்ற கோல் கணக்கில் மலாகாவை வீழ்த்தியது. மற்றொரு ஆட்டத்தில் நடப்பு சம்பியனான பார்சிலோனா 4- 2 என்ற கோல் கணக்கில் எபார் கழகத்தை தோற்கடித்தது.

லீக் சுற்று முடிவில் ரியல்மெட்ரிட் கழகம் 38 ஆட்டங்களில் 29 வெற்றி, 6 சமன், 3 தோல்வி உள்ளடங்கலாக மொத்தம் 93 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்து சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது. அந்த அணி 2012 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக இந்தப் பட்டத்தை வென்றிருக்கிறது,

## வெள்ள நிவாரணப் பணிகள்

mfcd
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.